பக்கங்கள்: இருபத்து எட்டு

# உதயன்

விலை ரூபா 20.00 ★

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 04 செவ்வாய்க்கிழமை (20.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 024



07 குடாநாட்டில் கனத்த மழை



17 எமக்கு எப்போது விடிவு



25 வங்கம் மீது பாய்கிறது பாகிஸ்தான்

## வன்னியில் மீண்டும் கடும் மழை 2,800 குடும்பங்கள் இடம்பெயர்வு

கிளிநொச்சி,டிசெ.20

வன்னிப்பகுதியில் மீண்டும் மழை கொட்டித் தீர்த்து வருவதால் அங்குள்ள மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். வன்னிப் பகுதி முழுவதும் வெள்ளக்காடு சூழ்ந்துள்ளதால் ஏராளமான மக்கள் தம் இருப்பிடங்களை விட்டுப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்து சென்றுள்ளனர். ஏறக்குறைய 2,800 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரம் பேர் நேற்றிரவு வரை மழை வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளதாக பேரிடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற பகுதிகளில் கடந்த சனிக்கிழமை முதல் பெருமழை பெய்துவருகின்றது. இதனால் வன்னியில் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அங்குள்ள நீர்த் தேக்கங்களும் நிறைந்துள்ளதால் அவற்றின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

பக் 27



வன்னியில் வெள்ளக்காட்டில் மிதக்கும் குடியிருப்பு

## குடாநாட்டில் மீண்டும் டெங்கு தீவிரம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

கடந்த 17 ஆம் திகதி யாழ். போதனா வைத்திய சாலையில் உயிரிழந்த மானிப்பாயைச் சேர்ந்தவரும் இலங்கை சாரணர் சங்க வடபிராந்திய பிரதம உதவி ஆணையாளருமான என்.ரி. போஜன் (வயது-62) டெங்கு நோய் பாதிப்பாலேயே மரணமானதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குடாநாட்டில் டெங்கு நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு டெங்கு நோயால் தீவிரமாகப் பாதிக்கப்பட்ட நிலை

பக் 26

# ஆணைக்குழு அறிக்கை அர்த்தமற்றது சர்வதேச விசாரணை ஒன்றே தேவை

### குழுவின் பரிந்துரைகளை நிராகரித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விளக்கம்

கொழும்பு, டிசெம்பர் 20

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் அறிக்கை அர்த்தமற்றது என்று கூறி நிராகரித்திருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இத்தகைய உள்ளூர் கட்டமைப்புக்கள் பொறுப்புக்கூறத் தவறியுள்ளதை கவனத்தில் எடுத்து, சர்வதேச சமூகம் சர்வதேச விசாரணைக் குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு "பொறுப்புக் கூறும் விடயத்தை வினைத்திறனுடனும் அர்த்தமுள்ள வகையிலும் கையாள்வதில் ஆணைக்குழு வெளிப்படையாகவே தோல்வி கண்டுள்ளது" என்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்டது. கடந்த மூன்று நாள்களாக அதனை ஆராய்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 பேரும் இணைந்து நேற்று ஆங்கிலத்தில் அறிக்கை ஒன்றை விடுத்தனர்.

மூன்று பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பான் கீ -மூனும் அரசும் இணைந்து விடுத்த கூட்டறிக்கை

நல்லிணக்க ஆணைக்குழுவின் உருவாக்கம் மற்றும் அதற்கு வழங்கப்பட்ட ஆணை என்பன தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே ஆட்சேபனை கொண்டிருந்தது. அது பற்றி கூட்டமைப்பு ஏற்கனவே இது தொடர்பில் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளர் பான் கீ-மூனுடன் சேர்ந்து அரசு 29 மே

பக் 27

## ஐ.தே.கவின் தலைமை மீண்டும் ரணில் வசம்

கொழும்பு, டிசெ.20

கட்சி செயற்குழு உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பதவியை மீண்டும் தன்வசப்படுத்தினார் ரணில் விக்கிரமசிங்க.

நேற்று நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பின் போது 42 மேலதிக வாக்குகளைப் பெற்று ஐக்கிய தேசியக் கட்சி சாம்ராஜ்யத்தில் தனது பெரும்பான்மைப் பலத்தை - செல்வாக்கை ரணில் மீண்டும் நிலைநாட்டியுள்ளார்.

அத்துடன் இந்த வாக்கெடுப்பில் பிரதித் தலைவராக சஜித் பிரேமதாஸவும், தேசிய அமைப்பாளராக தயாகமகேயும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவக் கோட்டையைத் தகர்த்து வெற்றிநாயகனாக வலம் வருவார் எனப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட கருவுக்கு 26 வாக்குகளே கிடைக்கப்பெற்றன.

இதனால் கரு குழுவினரின் ஒட்டுமொத்த

பக் 27

## காணி விவகாரம் தொடர்ந்து இழுபறியில் நேற்றைய பேச்சும் இணக்கமின்றி முடிவு

கொழும்பு, டிசெ.20

காணி அதிகாரம் தொடர்பில் எதுவித இணக்கப்பாடும் இன்றி அரசு - கூட்டமைப்பு இடையிலான நேற்றைய பேச்சும் இழுபறி நிலையிலேயே முடிவடைந்துள்ளது.

மாகாண சபைக்கு காணி அதிகாரம் வழங்குவது தொடர்பில் அரசு உறுதியானதொரு பதிலை வழங்காமல் மழுப்பல் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

அரசுடன் அடுத்தக் கட்டப் பேச்சுகளை முன்னெடுக்கும் திகதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று தீர்மானிக்கும் அதேவேளை, அரசியல் தீர்வுப் பேச்சு குறித்து தீர்க்க மான ஒரு முடிவை எடுக்கவுள்ளது என அறிய முடிகின்றது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுகளில் 18 ஆவது சுற்றுப்பேச்சு நேற்று

பக் 27

## ஆழியவளையில் மினி சூறாவளி; கூரைகள் பறந்தன

வடமராட்சி,டிசெ.20

வடமராட்சி கிழக்கு, ஆழியவளைப் பகுதியில் நேற்று மாலை திடீரென வீசிய மினி சூறாவளியால் அப்பகுதியில் உள்ள சில வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. கடலும் பெரும் கொந்தளிப்பாகக் காணப்பட்டது.

நேற்று மாலை 6 மணியளவில் கடற்

பக் 27

## குற்றவாளிகளுக்கும் தமிழினத் துரோகிகளுக்கும் அமைச்சுப் பதவி கொடுத்தால் நல்லிணக்கம் வராது

கொழும்பு, டிசெ.20

பாதிக்கப்பட்ட மக்களைச் சேர்த்துக் கொள்ளாது தமிழருக்குத் துரோகம் இழைத்தவர்கள், சட்டத்தால் தேடப்படும் குற்றவாளிகள், அண்டை நாட்டுக்கே செல்ல முடியாதவர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து அமைச்சுப் பதவிகளைக் கொடுத்து ஒருபோதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், மேலும் தெரிவித்ததாவது:-

பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு வரவு-செலவு திட்டத்தில் அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பதன் மூலம் நாடு அச்சுறுத்தலை

பக் 28

## கொடிகாமத்தில் நேற்றுக் கொடூரம் ஏழு வயதுச் சிறுமி மீது வன்புணர்வு

யாழ்ப்பாணம், டிசெ.20

கொடிகாமம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வீடு புகுந்து 7 வயதுச் சிறுமியைத் தூக்கிச் சென்ற இனந்தெரியாத நபர் ஒருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் நேற்றுப் பெரும் பரபரப்பு நிலை காணப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கொடிகாமம் பகுதியில் அமைந்துள்ள குடிசை வீடொன்றில் தாய், தந்தையர் மற்றும் சகோதரர்களுடன் உறங்கிக் கொண்டிருந்த சிறுமியே வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இரவுவேளையில் வீட்டினுள் புகுந்த இனந்தெரியாத நபர் ஒருவர் சிறுமியை தூக்கிச் சென்றுள்ளார். இதன் போது அந்த நபர் சிறுமி

பக் 27

## கட்டைக்காட்டில் இன்று சுனாமி ஒத்திகை


யாழ்ப்பாணம், டிசெ.20

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கட்டைக்காடுப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தம் இடம் பெற்றால் அதில் இருந்து பாதுகாப்புத் தேடுவது குறித்த ஒத்திகை ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ளது.

கட்டைக்காடுப்

பக் 26

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் அதிகம் உள்ளது.

## போர்க்களமானது சிறிகொத்தா!

கொழும்பு, டிசெ.20

ஐ.தே.கவின் தலைமையக மான சிறிகொத்தா நேற்று போர்க்களமாகக் காட்சியளித் தது.

கரு ஜயசூரியவின் ஆதர வாளர்கள் சிறிகொத்தா அலு வலகம் மீது சரமாரியாக கல் வீச்சுத் தாக்குதல் நடத்தி அங் கிருந்த சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தனர். அத்துடன் சிறிகொத்தா வளாகத்தில் இருந்த புத்தர் சிலையொன்றும் கட்சி ஆதரவாளர்களால் சேதப் படுத்தப்பட்டது.

இதனால் அப்பகுதி முழு வதும் பெரும் பதற்றநிலை ஏற் பட்டது. இதையடுத்து பொலி ஸார் மற்றும் அதிரடிப்படை யினர் அங்கு குவிக்கப்பட்டனர்.

இந்த அசாதாரண நிலைமை யால் அப்பகுதியில் போக்குவ ரத்து பெரிதும் பாதிக்கப்பட் டது.

ஐ.தே.கவின் புதிய நிர்வாகி களை தெரிவுசெய்வதற்கான தேர்தல் நேற்றுப் பிற்பகல் முடி வடைந்த நிலையில் கரு ஜய சூரியவின் ஆதரவாளர்களே இந் தத் தாக்குதலை நடத்தியுள்ள னர்.

தனது தோல்வியை ஏற்றுக் கொள்வதாகவும் தனது ஆத ரவாளர்கள் நடத்திய தாக்குத லுக்கு மன்னிப்புக் கோருவதா கவும் கரு ஜயசூரிய தெரிவித் துள்ளார். (ந-சி)

# அண்டை நாட்டுக்கே போக முடியாதவர் அமைச்சரா?

# நாடாளுமன்றத்தில் சுமந்திரன் நேற்று கிண்டல்

''சமுர்த்தி நிவாரணப்பணத் தில் பத்து லட்சம் ரூபாவை கை யாடிவிட்டுச் சிறையில் களி சாப் பிவிட்டவர்கள், அந்த வழக்கை வாபஸ் பெறச் செய்வதற்காகவே அரசுடன் ஒட்டிக் கொண்டனர். ஆனால் நாம் அப்படி அல்ல. எமது மக்களின் பணத்தில் பத்து சதத் தைக்கூட தீண்டியதில்லை. இந்தப் பகல் கொள்ளைக்காரர் கள் என்னிடம் மோதுகின்ற னர்.'' -இவ்வாறு புத்தளம் மாவட்ட ஐ.தே.க. உறுப்பினர் ரங்கே பண்டார நேற்று நாடாளுமன்றத்தில் சாடினார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தின்போது ரங்கே பண்டார பேசும் போது ஆளும் தரப்பினர் குறுக்கீடு செய்து கொண்டே இருந்தனர். அப்போது வாயைக் கொடுத்த பிரதி அமைச்சர் காதர் வாங்கிக் கட்டிக் கொண்டார். எனினும் ரங்கே பண்டாரவின் இந்த தாக் குதலுக்கும் பதிலடி கொடுத் தார் பிரதி அமைச்சர் காதர்.

''நீர் என்ன உத்தமன் போல் பேசுகின்றீர்? கேட்டதை எல் லாம் கொடுத்து இருந்தால் நீரும் இப்போது எங்களுடன் தானே இருந்திருப்பீர்!'' எனக் குட்டை உடைத்துவிட்டார் பிரதி அமைச்சர்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது. வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின் பாதுகாப்பு மற் றும் நகர அபிவிருத்தி அமைச் சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவா தம் ஆரம்பமானது.

எதிர்க்கட்சிகள் சார்பில் புத் தளம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ரங்கே பண் டார விவாதத்தை ஆரம்பித்தார்.

ரங்கே பண்டார வழமை யாகவே கசப்பு குளிசையில் இனிப்பை தடவி கொடுப்பது போல் ஊசி ஏற்றுவதில் கெட்டிக் காரர். இது ஆளும் தரப்புக்கு எரிச்சலை ஊட்டத்தானே செய் யும்.

அவர் மீது வரிந்து கட்டிக் கொண்டு அமைச்சர்கள் பல ரும் பாய ஆரம்பித்தனர்.

குறிப்பாக இதில் விளை யாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத் கமகே, டாக்டர் மேர்வின் சில்வா, காதர், ஏ.எச்.எம். அஸ்வர் முன் னிலை வகித்தனர்.

### கிணறு வெட்ட பூதம் கிளம்பிவிட்டது

இவர்களது இடையூறுகளைப் பொறுக்க முடியாத ரங்கே பண்டார ஜே. ஆர் ஜெயவர்த்த னாவையும் நினைவு படுத்தினார்.

''சபாநாயகர் அவர்களே, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன மூளைசாலிக ளுக்கும் புத்திஜீவிகளுக்கும் கனவான்களுக்கும் நாடாளு மன்றத்தில் இடைமளிக்க வேண்டும் என்பதற்காகத் தான் தேசிய பட்டியல் உறுப்பினர் களை உருவாக்கினார். ஆனால் இன்று கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல் சில முட் டாள்களும் கழுதைகளும் சபைக்கு வந்து இருக்கின்றன'' என்றார்.

### எம்.பி.பி.எஸ். பட்டத்துக்கு புதுவிளக்கம்

படைவீரர்களுக்கு ஏற்ப டுத்தப்பட்டுள்ள அப கீர்த் தியை தெளிவு படுத்த ஒரு உப கதையையும் கூறினார் ரங்கே பண்டார.

''சண்டை முடிந்து விட்ட நிலையில் ஒரு இராணுவ வீரன் கிராமத்துக்கு திரும்பி உள் ளான். அவரைக் கண்ட பாட சாலை அதிபர்; தம்பி இப்பொ முது என்ன செய்கின்றாய்? என்று கேட்டாராம்.

அந்த இராணுவ வீரன் 'சேர்! நான் இப்போது கோட்டையில் எம்.பீ.பி.எஸ் செய்கிறேன்' என்று பதில் அளித்துள்ளார்.

'என்ன தம்பி நீ ஏ.எல் கூட படிக்கவில்லையே எப்படி டாக் டராக படிக்கின்றாய்? என்றா ராம் ஆசிரியர்.'

அந்த இராணுவ வீரன் சிறி தும் கூச்சப்படாமல் ''சேர் நான் கூறியதின் அர்த்தம் (சிங்களத் தில்) மேசன் பாசுக்கு பதாமா (சிமெந்துக் கலவை) எடுத்துக் கொடுப்பது என்று கூறினாராம்.

இன்று இவ்வளவு வேதனை யுடன் இருக்கின்றார்கள் இரா ணுவ வீரர்கள்' என்று குறிப்பிட் டார் ரங்கே பண்டார.

அப்போது ஆட்சேபனை எழுப்பினார் டாக்டர் சுதர்சினி பெர்னான்டோ. ''டாக்டர் பட் டத்தை இப்படி இழிவு படுத்தக் கூடாது'' என்றார்.

இதனைஉதாசீனக்கொண்டு துள்ளி எழுந்தார் அமைச்சர் மேர்வின் சில்வா.

### துட்டகை முனுவின் வம்சத்துக்கே அவமானம்

அவருக்கும் பதிலடி கொடுத் தார் ரங்கே. பண்டார ''சபாநா யகர் அவர்களே பௌத்த மக் கள் மத்தியில் துட்டகைமுனு போற்றி மதிக்கப்பட்டான். பௌத்த மதத்துக்கும் நாட்டுக் கும் நல்லதையே செய்தான். இதனால் மக்கள் அவனை மதித் தனர். ஆனால் நம்மத்தியிலே ஒருவர் துட்கைமுனுவின் பெய ரையும் வைத்துக்கொண்டு, கஞ்சா, போதை பொருள் கடத் தல்களுக்கு தலைமை தாங் குகின்றார்'' என்றார்.

இப்படியான வாக்கு வாதங் களுடன் பண்டாரவின் நேரமும் முடிந்து விட்டது.எனினும் அவருக்கு மேலதிகமாக ஐந்து நிமிடம் வழங்கப்பட்டது.

### ஐ.தே.க. வெளிநடப்பு

ரங்கே பண்டாரவுக்கும் பேச நேரம் கூடுதலாக ஒதுக்கப்பட் டதால் சபையில் குழப்பம். ஆளும் கட்சியினர் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர்.

அமைச்சர் தினேஸ் குணவர்த் தன பூர்வாங்க ஆட்சேபனை எழுப்ப சபை சந்தைக் கடை போலானது. பிரதி சபாநாயகரி னால் சபையில் அமைதியை கட்டுப்படுத்த முடியவில்லை. ஜனநாயகம் செத்துவிட்டது என்று கூறி ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அனைவ ரும் சபையில் இருந்து வெளி நடப்பு செய்தனர்.ரங்கே பண் டார தாக்கப்பட்டார்.

ஐ.தே.க உறுப்பினர்கள் எல் லோரும் வெளியேறிய நிலை யில், ரங்க பண்டார தனிமை யானார். இவர் ஆளும் கட்சி உறுப்பினர்களுடன் வாக்கு வா தப்பட்டுக் கொண்டே சபையை விட்டு வெளியே வந்த போது, அவரைப் பின்தொடர்ந்து வந்த சில ஆளும் கட்சி உறுப்பி னர்கள் அவரை சுற்றிவளைத் துத் தாக்கினர். அப்போது வெளிக்கதவுகள் திறந்து விடப் பட்டதால் பத்திரிகையாளர்கள் கலரியில் இருந்து அதனை அவதானிக்க முடிந்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சுமந்திரன் உரை யாற்றும் போதும் இதே போன்ற நிலை ஏற்பட்டது. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்து உதறினார் சுமந்திரன்

''நல்லிணக்கம் ஏற்படுத் தப்பட வேண்டுமானால், மக்க ளுடனும், மக்கள் பிரதி நிதிக ளுடனும் பேச வேண்டுமே தவிர குற்றவாளிகளை அரவ ணைத்து அவர்களுக்கு அமைச் சுப் பதவி கொடுப்பதால் நல்லி ணக்கம் ஏற்பட்டு விடாது- என்றார் அவர்.

### பொங்கியெழுந்தார் டக்ளஸ்

இதனை ஆட்சேபித்தார் அமைச்சர் டக்ளஸ்

''இங்கே குற்றவாளிகளும் இல்லை. திருடர்களும் இல்லை. கூட்டமைப்பு உறுப்பினர் பேசு வது தவறு'' என்றார்.

''சபாநாயகர் அவர்களே, நான் எவரையும் பெயர் சுட்டிக் கூறவில்லையே. அமைச்சர் டக் ளஸ் தொப்பியை மாட்டிக் கொண்டால்அதற்குநான்பொறுப் பில்லை'' என்றார் சுமந்திரன்.

அத்தோடு நின்று விட வில்லை அவர்.

'' ஐயா சட்டத்தால் தேடப்ப டுபவரும், அண்டைநாட்டுக்கே செல்ல முடியாதவருமான ஒருவர் தான் இங்கு அமைச்சர். இது மிகவும் வேடிக்கையான ஒன்று'' என்று மீண்டும் சீண்டி னார் சுமந்திரன்,

இதனால் இடையூறுகள்மேலும் அதிகரித்தன. அஸ்வரும், பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவும் சேர்ந்து கொண்டனர்.

''தமிழ் பேச முடியாதவர்கள் தமிழ் மக்களைப்பற்றி பேசுகின் றார்'' என்றார் அஸ்வர்.

''நீர்பேசும் கொச்சைத் தமிழை விடநான் நன்றாகவே பேசுவேன். எனது தாய்மொழி தமிழ் தான். நானும் தமிழன் தான்'' என்று பதிலடி கொடுத்தார் சுமந்திரன்.

### அஸ்வருக்கு இறுதி எச்சரிக்கை

தொடர்ந்து சுமந்திரன் பேசும் போது அஸ்வர் இடையூறு விளை வித்துக்கொண்டே இருந்தார்.

''குழுக்களின் பிரதித் தலை வர் அவர்களே இந்த மனிதரை நான்கு முறை எச்சரித்து விட்டீர் கள் ஆனால் அவர் திருந்துவதாக இல்லை அவரை சபையில் இருந்து வெளியேற்றுங்கள்'' என்று கோரிக்கை விடுத்தார் சுமந்திரன்.

''மிஸ்டர் அஸ்வர், உங்க ளைப் பல முறை எச்சரித்து விட்டேன். இது கடைசி எச்சரிக்கை. ஒழுங்காக நடந்து கொள்ளாவிட்டால் சபையில் இருந்து வெளியேற்றப் படுவீர்கள்'' என கடுமையாக எச்சரித்தார் குழுக்களின் பிரதித் தலைவர்.

ஜே.வி.பி உறுப்பினர் விஜித ஹேரத் உரையாற்றும் போது ''சபாநாயகர் அவர்களே! நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இந்த சபைக்கு வந்த போது அவர் முன்னிலையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாக்கப்பட்டனர். இன்று பாது காப்பு அமைச்சு தொடர்பாக விவாதம் நடக்கும் போது பாது காப்பு அமைச்சின் செயலாளர் கோத்த பாய இங்கு வந்துள் ளார். இன்றும் எதிர்கட்சி உறுப் பினர் ஒருவர் தாக்கப்பட் டுள்ளார். இது தான் ஜனநாய கமா? நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கே பாதுகாப்பு இல்லை என்றால் எமது மக் களை எப்படி பாதுகாக்கப் போகின்றீர்கள்?'' என்றார்.

### போஸ்டருடன் சபைநடுவே வந்த அஜித் குமார

விவாதம் நடந்து கொண்டி ருந்த போது தொடர்ச்சியாக ஐ.தே.க உறுப்பினர்களின் பெயர்களே அழைக்கப் பட் டன. எனினும் அவர்கள் எவ ரும் சபையில் இல்லை.

அப்போது ஜே.வி.பி உறுப் பினரான அஜித் குமார எதிர் கட்சி உறுப்பினர்களின் நேரத் தில் தனக்கு பேச இடமளிக் குமாறு வேண்டினார். ஆனால் ''ஜே.வி.பி கட்சிக்கு ஒதுக்கப் பட்ட நேரம் முடிந்து விட்ட தால் உங்களை பேச அனும திக்க முடியாது''. என்று மறுத் துவிட்டார் பிரதி சபாநாயகர்.

அந்த வேளையில் சிறிதும் எதிர்பாராத வகையில் அஜித் குமார தயாராக வைத்திருந்த இரு போஸ்டர்களுடன் சபை நடுவே வந்தார். அதில் ஒன்றை பிரதமர் முன்பாகவும் மற்றையதை சபாநாயகரின் முன்பாகவும் வைத்தார். அப் போது பாய்ந்து வந்த அமைச் சர் மேர்வின் சில்வா, அஜித் குமாரவிடம் இருந்து போஸ் டர்களை பறித்து எறிந்தார்.

பிரதான எதிர்கட்சியினர் இல்லாமலேயே பாதுகாப்பு அமைச்சுக்கான விவாதம் நடைபெற்று முடிந்தது.

சம்பந்தரின் கோரிக்கையின் பேரில் வாக்கெடுப்பு நடத்தப் பட்டது. ஆதரவாக 104 வாக்கு களும் எதிராக 13 வாக்குகளும் கிடைத்தன.



# வன்னேரிக்குளம் பாடசாலை பஸ்சேவையை ஆரம்பிக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை

அக்கராயன், டிசெ.20
கிளிநொச்சி வன்னேரிக் குளம் மகா வித்தியாலயத்துக்குக் காலை வேளையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் செல்லக்கூடிய வகையில் பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு இந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இரண்டு கிலோமீற்றர் தூரம் வரை நாள்தோறும் மாணவர்கள் நடந்து செல்கின்றனர். காலைவேளையில் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லக்கூடிய வகையில், பஸ் சேவையை மேற்கொள்ளுமாறு பல தடவைகள் இந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் பயன்கள் கிடைக்கவில்லை.

50 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட குடியேற்றத் திட்டக் கிராமமான வன்னேரிக்குளம் மருத்துவம் கல்வி, மின்சாரம், போக்குவரத்து வசதிகள் என்பவற்றில் இடர்களை எதிர்கொண்டுள்ள நிலையில் காணப்படுகின்றது.

475 வரையான குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ள போதிலும், அவர்களுக்கான அடிப்படை வசதிகள் கூட இதுவரை நிறைவேற்றப்படவில்லை யென இந்தக் கிராம மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர். (க-410)

# தொழிற்சாலையொன்றை அமைத்து தமக்கு வேலை வழங்குமாறு பெண்கள் கோரிக்கை

அக்கராயன், டிசெ.20
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் தொழிற்சாலை யொன்றினை அமைக்குமாறு பெண்கள் அமைப்பொன்றின் பிரதிநிதிகளால் துணுக்காய்ப் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

போர் காரணமாகப் பல பெண்கள் தமது குடும்பத் தலைவர்களை இழந்துள்ளனர். இதனால் இவர்கள் வருமானமின்றி உள்ளனர். பலர் தமது பிள்ளைகளை உறவினர்களிடம் கையளித்துவிட்டு வெளிநாடு செல்லும் நிலையுமுள்ளது.

இந்த நிலையில் பெண்கள் பணிபுரியக்கூடிய விதத்தில் ஏதாவது ஒரு தொழிற்சாலை உருவாகுமானால், இந்தப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும் எனவும் பெண்கள் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-410)

# இரவில் 'திரியும்' கால்நடைகள் இனி சட்ட நடவடிக்கை

முல்லைத்தீவு, டிசெ.20
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கட்டாக்காலிகளாக அலைந்து திரிந்து பயிர்களுக்கு அழிவை ஏற்படுத்தி வரும் கால்நடைகள் விடயத்தில், கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவிருப்பதாக ஒட்டுசுட்டான் கமநலச்சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலையத்தின் கீழ்வரும் அனைத்துக் கிராமங்களிலும் கூட்டங்கள் நடத்தப்பட்டு பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் இவை ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரியவில்லை.

கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைப் பகலில் மேய்ச்சலுக்கு அனுப்புவதோடு இரவில் பட்டிகளில் அடைத்து வைக்க வேண்டும். தவறும் பட்சத்தில் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சகல கமக்கார அமைப்புக்கள் மூலம் இரவுவேளைகளில், கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள், எம்மால் அனுமதிக்கப்பட்ட பிடிகாரர்கள் மூலம் பிடிக்கப்பட்டுத் தண்டம் அறவிடப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-500)

# மன்னார் சிறுவர் இல்லச் சிறார்களுக்கு மருத்துவ முகாம்

மன்னார், டிசெ.20
மன்னார் மாவட்டச் சிறுவர் இல்லங்களிலுள்ள மருத்துவத் தேவையுள்ள சிறுவர்களுக்கான இலவச மருத்துவ முகாமொன்று கடந்த 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னார் உப்புக்குளத்திலுள்ள அன்னை இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.


மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவின் அனுசரணையுடன் இந்த மருத்துவ முகாம் இடம்பெற்றது.

இதில் அன்னை இல்லம், சிவன் அருள் இல்லம், அன்புச் சகோதரர் இல்லம், வெற்றியின் நம்பிக்கை இல்லம், செபமாலை மரியன்னை இரக்கத்தின் இல்லம், கிளாரன்டன் இல்லம் ஆகியனவற்றைச் சேர்ந்த சுமார் 300 இற்கும் மேற்பட்ட சிறார்கள் கலந்துகொண்டு மருத்துவச் சேவைகளையும் பெற்றுக்கொண்டனர்.

இவர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள், சிகிச்சைகள் மற்றும் மருந்து வகைகளை மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையின் மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினரால் வழங்கப்பட்டன.

மேலும் மேலதிக தேவையுள்ள சிறார்களை மன்னார் பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொது வைத்தியசாலையின் அத்தியட்சகர், மருத்துவர் எம்.எச். எம். அஷாத் தெரிவித்தார். (க-601)

கால் கடுக்க...



கல்வியில் ஆர்வம்: உரிய போக்குவரத்து வசதிகளில்லாததால் கிளிநொச்சி ஜெயபுரம், ஆனைவிழுந்தான் ஆகிய இடங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் நீண்டதூரம் கால்நடையாகவே நடந்து தமது பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். (6)

# வங்கியின் ஆண்டு நிறைவையொட்டி மன்னாரில் இரத்ததான நிகழ்வு

மன்னார், டிசெ.20
மன்னார் செலான் வங்கியின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டி கடந்த சனிக்கிழமை இரத்த தான நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த இரத்ததான நிகழ்வு மன்னார் பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியின் உதவியுடன் செலான் வங்கியின் மன்னார்க் கிளையில் இடம்பெற்றது.

இதன்போது வங்கி ஊழியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், வாடிக்கையாளர்களென நூற்றுக்கணக்கானவர்கள் இரத்த தானம் செய்ததாக மன்னார் பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம். எச்.எம்.அஷாத் தெரிவித்தார்.

மேலும் இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் அத்தியட்சகர் அஷாத், வங்கி முகாமையாளர் ஏ.ஜே.போல்போர், வங்கி ஊழியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி எனப் பலர் கலந்துகொண்டனர். (க-601)

# மல்லாவி மருத்துவமனையில் ஒழுங்கற்று காணப்படும் கழிவகற்றும் செயற்பாடு

அக்கராயன், டிசெ.20
மல்லாவி மருத்துவமனையில் கழிவகற்றும் செயற்பாடுகள் ஒழுங்காக இடம்பெறுவதில்லையென மல்லாவி மருத்துவ மனையின் பொறுப்பு மருத்துவர் தெரிவித்துள்ளார்.

துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

துணுக்காய்ப் பிரதேசசபையே மருத்துவமனையின் கழிவகற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது.

பிரதேச சபையினரைக் கழிவகற்றல் செயற்பாடுகளை ஒழுங்காக மேற்கொள்ளுமாறு துணுக்காய்ப் பிரதேசசெயலர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை யோகபுரம் மத்தியைச் சேர்ந்த மக்கள் தமக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தனர்.

மீள் குடியமர்வு இடம்பெற்று இரு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் தமக்கு மின்சாரம் வழங்கப்படவில்லையெனவும் இவர்களால் தெரிவிக்கப்பட்டது.

துணுக்காயில் மீளக்குடியமர்வு இடம்பெற்ற இடங்களில் மின் கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன. ஆனால் மின்சார இணைப்புக்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

மேலும் துணுக்காய் தென்னியங்குளம் சந்தி வரை மின் கம்பங்கள் நாட்டப்பட்டுள்ள போதிலும் மின்சாரம் வழங்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (க-410)

# மேலதிகமாக மொழிக் கற்கைநெறி

கிளிநொச்சி, டிசெ.20
கிளிநொச்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களிடமிருந்து 2012ஆம் ஆண்டுக்குரிய சிங்களம், ஆங்கிலம் ஆகிய மேலதிக மொழி விருத்திக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தேசிய கல்வி நிறுவனம் இந்தக் கற்கைநெறியை நடத்தவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை இன்றைய தினம் 20ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி கற்கைநெறியின் இணைப்பாளரும், ஆங்கில சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமான பெ.கணேசனிடம் ஒப்படைக்குமாறு ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலதிக விவரங்களுக்கு 0770789749 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-405)

# துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 400 ஏக்கரில் மேய்ச்சல் தரவைகள்

அக்கராயன், டிசெ.20
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அனிஞ்சியன்குளம், கல்விளான் ஆகிய பகுதிகளில் 400 ஏக்கர் நிலப்பரப்பிலான மேய்ச்சல் தரவைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

துணுக்காய்ப் பகுதியில் பெருமளவு நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதன் காரணமாகக் கால்நடைகளை வளர்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது கால்நடைகளை பராமரிப்பதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் மேற்படி இரு இடங்களிலும் கால்நடைகளின் மேய்ச்சல் தரவைகள் இனங்காணப்பட்டுள்ளன.

இதேவேளை கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், ஐயன்கன் குளம் கிராமமக்கள், தகுந்த மேய்ச்சல் தரவைகள் இல்லாமையினால் தமது கால்நடைகளைப் பராமரிப்பதில் இடர்களை எதிர் கொண்டுள்ளனர். (க-410)

# வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தால் மன்னாரில் விசேட நிகழ்வுகள்

மன்னார், டிச.20
இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

முதல் நிகழ்வாக காலை 8 மணியளவில் ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப்போட்டி இடம்பெற்றது. இந்த நிகழ்வு இலங்கை வேலை வாய்ப்புப் பணியகத்தின் நிர்வாக அதிகாரியான ஏ.எம்.எம்.உமரத் தலைமையில் இடம்பெற்றது.

பின்னர் முற்பகல் 10 மணியளவில் பல நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்களில் ஈடுபட்டு வருவோரின் பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. மேலும் மரதன் ஓட்டப்போட்டியில் முதல் 10 இடங்களைப் பெற்ற வீரர்களுக்கு பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் அரச அதிபர், மன்னார் நகர சபைத் தலைவர், மன்னார் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, வங்கி முகாமையாளர் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-601)

உதயன்
20 டிசெம்பர் 2011 செவ்வாய்க்கிழமை

# தமிழில் இசைக்கப்பட்ட தேசியகீதம் இராணுவ அதிகாரிகள் மரியாதை



மன்னார், டிசெ.20

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள திணைக்கள நிகழ்வுகளில் தனிச் சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்படுவதும், அதற்கு தமிழ் அதிகாரிகள் எவ்வித எதிர்ப்பையும் காட்டாத சூழ்நிலையில் இதற்கு முற்றிலும் எதிர்மாறான நிகழ்வொன்று மன்னாரில் நடைபெற்றுள்ளது. இராணுவ உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் அதற்கு எழுந்து நின்று இராணுவத்தினரும் மரியாதை செலுத்தினர்.

மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வுகளின்போது இவ்வாறு தமிழில் இசைக் கப்பட்ட தேசியகீதத்தில் இராணுவ அதிகாரிகள் மரியாதை செலுத்தியுள்ளனர்.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது:

நேற்றுமுன்தினம் சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தையொட்டி மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்கள் வரிசையில் இராணுவத்தின் மன்னார் மாவட்ட கட்டளைத்தளபதி ராமநாயக்க மற்றும் சில இராணுவ உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது மங்கள விளக்கு ஏற்றப்பட்ட பின் தேசிய கீதம் தமிழில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது. வழக்கமாக இத்தகைய நிகழ்வுகளில் சிங்களத்திலேயே தேசிய கீதம் இசைக்கப்படும். ஆனால் குறித்த நிகழ்வில் தமிழில் தேசியகீதம் இசைக்கப்பட்டபோது, வழமை போலவே எழுந்துநின்று இராணுவ அதிகாரிகள் மரியாதை செலுத்தினர். சிங்களத்தில் தேசியகீதம் பாடப்படாமை குறித்து அவர்களில் யாரும் அலட்டிக் கொண்டதாகவும் தெரியவில்லை.

தமிழ்மொழியில் பரிச்சியமற்றவர்களும், சிங்கள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுமான இராணுவத்தினரே தமிழில் தேசியகீதம் இசைக்கப்படுவதற்கு மறுப்பு எதுவும் தெரிவிக்காத நிலையில், தமிழ் தெரிந்த அமைச்சர்களும், சில அதிகாரிகளும் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படுவதை ஆதரித்துவருவது குறிப்பிடத்தக்கது. (ந-601)

# சடலத்தை ஒப்படைப்பதில் தாமதம் நாள் கணக்கில் காத்திருந்த உறவினர்கள்



கிளிநொச்சி, டிசெ.20

கிளிநொச்சி கல்மடு நகரில் வாய்க்காலில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் சடலத்தை உறவினர்களிடம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாக உறவினர்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்மடு நகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் வீட்டிலிருந்து வயலுக்குச் சென்ற இளைஞர் ஒருவர் வாய்க்காலில் சடலமாக மீட்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இந்த நிலையில் சடலம் பிரேத அறை இல்லாத நிலையில் நேற்று முன்தினம் காலை 8.30 மணிமுதல் இரவு 7 மணிவரை தருமபுரம் வைத்தியசாலையின் பிரசவ அறைக்கும் சிறுவர் விடுதிக்கும் அண்மித்த ஓர் இடத்தில் வைக்கப்பட்டிந்தது. பின்னர் மரண விசாரணை அதிகாரியின் உத்தரவின் பிரகாரம் கொட்டும் மழைக்கு மத்தியில் மோசமாகச் சிதைந்து காணப்படும் பரந்தன்- முல்லைத்தீவு வீதியூடாகச் சடலம் உறவினர்களால் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் பிரேத அறையில் வைக்கப்பட்டது. இதன் பின்னர் நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிவான் வைத்தியசாலைக்குச் சென்று பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவிலேயே நீண்ட தாமதத்தின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (க-405)

# அனைத்துக் குளங்களும் வான் பாய்கின்றன

கிளிநொச்சி, டிசெ.20

வன்னியில் பெய்துவரும் பருவமழையை அடுத்து குளங்களில் நீர் மட்டங்கள் அதிகரித்துள்ளதுடன் அங்குள்ள அனைத்துக் குளங்களும் வான்பாய ஆரம்பித்துள்ளன.

இரணைமடுக் குளம், முத்து ஐயன் கட்டுக்குளம் தண்ணீர் முறிப்புக்குளம் உடையார்கட்டுக் குளம், மடவாள சிங் கன் குளம்,அக்கராயன் குளம், கல்மடுக் குளம், கரியாலைநாகபடுவான் குளம், புதுமுறிப்புக் குளம், பிரமந்தனாறு குளம், வன்னேரிக் குளம்,விசுவமடுக்குளம், கணுக்கேணிக் குளம் கனகாம்பிகைக் குளம் என்பனவே வான் பாய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தற்போது இரணைமடுக் குளத்துக்கு வந்துசேரும் நீரின் அளவு 8,566 கன அடியாக உள்ளதாகவும் இதில் 5541 கனஅடி நீரையே வெளியேற்றக் கூடியதாக இருப்பதாகவும் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் என்.சுதாகரன் தெரிவித்தார். (த-6)

# ஓர் ஆசிரியருடன் இயங்கும் பாடசாலை; கட்டடமில்லாத நிலையில் முன்பள்ளிகள்

அக்கராயன், டிசெ.20

துணுக்காய் உயிலங்குளம் அ.த.க.பாடசாலையில் ஓர் ஆசிரியர் மட்டுமே பணியில் இருப்பதன் காரணமாக வலய மற்றும் கோட்ட மட்டங்களில் நடைபெறும் கூட்டங்களுக்கு பாடசாலையை மூடிவிட்டு அவர் செல்ல வேண்டிய நிலை தொடர்கின்றது.

சுமார் 50 இற்கு மேற்பட்ட மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி பயில்கின்றனர். ஓர் ஆசிரியரே அதிபரின்வேலையையும்புரியும் நிலையுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்தில் மிகவும் பின்தங்கிய கிராமத்தில் உள்ள இந்தப் பாடசாலையில் மேலதிகமான ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

தரம்1முதல் தரம் 5 வரையான வகுப்புக்களை இந்தப் பாடசாலை கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இங்குள்ள முன்பள்ளி நிரந்தரக் கட்டடம் இல்லாதநிலையில் இயங்கிவருகிறது. 30 வரையான சிறாரகளுடன் பொதுமண்டபம் ஒன்றில் இந்த முன்பள்ளி இயங்கி வருகிறது.

இதேவேளை அம்பலப் பெருமாள் குளத்திலும் முன்பள்ளி நிரந்தரக் கட்டடமின்றி இயங்கி வருகிறது. மீள்குடியமர்வு இடம்பெற்ற இந்தப் பகுதிகளில் முன்பள்ளிச் சிறார்கள் மிகுந்த இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-410)

# மகஸின் அதிகாரியிடம் அறிக்கை கேட்கின்றது பிரிட்டன் தூதரகம்

கொழும்பு, டிசெ.20

மகஸின் சிறைச்சாலையில் பிரிட்டன் பிரஜையொருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விவரமான விசாரணை அறிக்கையொன்றைத் தருமாறு சிறைச்சாலை உயர்மட்ட அதிகாரியிடம் பிரிட்டன் தூதரகம் நேற்றுக் கோரியுள்ளது.

மகஸின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பிரிட்டன் பிரஜையான விஸ்வலிங்கம் கோபிதாஸன் என்ற அரசியல் கைதியை சிறைச்சாலை அதிகாரியொருவர் கடந்த 16ஆம் திகதி கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளார். இது குறித்து, குறித்த கைதியின் தந்தை பிரிட்டன் தூதரகத்திடமும், மனித உரிமை ஆணைக்குழுவிடமும் நீதி கோரி முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில், கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதுவரின் சார்பில் மேரி என்ற அதிகாரி நேற்று மகஸின் சிறைச்சாலைக்கு விஜயம்செய்து தாக்குதலுக்குள்ளான கைதியைப் பார்வையிட்டுள்ளார்.

## இப்படியும் ஓர் அவலம்...



தலைவிதி மாறுமா: நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள கற்குளத்துக்கு ஊடாக பட்டிக்குடியிருப்பு-ஒதியமலை செல்லும் பிரதான வீதி போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் மோசமாகக் காணப்படுகின்றது. (435)

# மிக மோசமாக மாறிய வீதி

முல்லைத்தீவு,டிசெ.20

ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு பிரதான வீதி போக்குவரத்துச்செய்யமுடியாது மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியூடாகச் செல்கின்ற வாகனங்கள் ஆங்காங்கு புதையுண்டு நிற்பதைக் காண முடிகின்றது.

இந்த வீதியூடாக தென் பகுதிப் பெரும்பான்மையின மக்களின் வாகனங்கள் அதிகமாகச் செல்வதும் கனரக வாகனங்கள் செல்வதுமே படுமோசமாகச் சேதமடைவதற்கான காரணங்களாக உள்ளன. (க-500)

# பிணக்குத் தீர்க்கச் சென்றவர் பிணமான அவலச் சம்பவம்

வவுனியா, டிசெ.20

இரு இளைஞர்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை நிறுத்துவதற்குச் சென்ற இருவரில் ஒருவர் தலையில் தாக்கப்பட்டு அதே இடத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வவுனியா ஸ்ரீராமபுரம் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

இளைஞர்கள் இருவர் நீண்ட நேரமாக வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது இதை அவதானித்த இருவர் வாய்த்தர்க்கம் மோதலாக உருவாகுமென அஞ்சியதால் அதனை நிறுத்தும் பொருட்டு அந்த இளைஞர்களிடம் சென் றுள்ளனர்.

அப்போது வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவர், திடீரென ஒரு பலகையை எடுத்து அங்கு சென்றவர்களில் ஒருவரின் தலையில் பலமாக அடித்தார். தாக்குதலுக்குள்ளானவர் தலையில் பலமான காயம் ஏற்பட்ட நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

வவுனியா ஸ்ரீராமபுரத்தைச் சேர்ந்த 33 வயதான வவுனியா வைத்தியசாலை ஊழியரான எஸ்.திருச்செல்வம் என்பவரே உயிரிழந்தவராவார். கொலையாளி தலைமறைவாகிவிட்டார். பொலிஸார் இவரைத் தேடி வருகின்றனர். (க-421)

# கொக்கிளாயில் வீடுகளை அமைக்கும் பணிகள் தொடர்ந்து மந்த கதியில்

முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கென நிரந்தர வீடுகளை அமைத்துவரும் யூ.என்.டி.பி.நிறுவனம், அதன் கட்டுமாணப் பணிகளை மந்தகதியில் முன்னெடுத்துச் செல்வதாகப் பல்வேறு தரப்புக்களாலும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தகால இடப்பெயர்வின்போது இடம்பெயர்ந்து தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்த கொக்கிளாய் மேற்கு, கொக்கிளாய் கிழக்கு, கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் சுமார் 50 நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு யூ.என்.டி.பி.நிறுனம் கடந்த எட்டு மாதங்களுக்கு முன்னர் பொறுப்பேற்றுக்கொண்டது.

இந்த 50 வீடுகளில் 19 வீடுகளுக்கான வேலைகளை ஆரம்பித்து சுமார் ஏழு மாதங்கள் கடந்தபோதும் இதுவரை வேலைகள் பூர்த்தியாக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இதே கிராமத்தில் கரித்தாஸ்- கியுடெக் நிறுவனம் ஒரு தொகுதி நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான பொறுப்புக்களை ஏற்று இரண்டு மாத இடைவெளியில் எண்பது வீட்டு வேலைகளைப் பூர்த்தி செய்துள்ளது.

யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டு வீடுகளின்றி அல்லற்படும் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை உரிய முறையில் உரிய காலத்தில் முன்னெடுப்பது அவசியமெனவும், இந்த வீடுகளை மிகவிரைவில் அமைத்துத் தருமாறும் பிரதேச பொது அமைப்புக்களும், கிராம மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கருத்துச் சொன்னால் கடும் கோபமா?

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விசாரணைகள் எதையும் நடத்தவில்லை. மக்கள் தரப்பில் இருந்து சாட்சியங்களைப் பெற்று, அவற்றை பரிசீலித்தே அறிக்கை வெளியிட்டுள்ளது.

★ மிகவும் பக்கச் சார்பற்ற முறையிலும் சுயாதீனமாகவும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பது மிகவும் தெளிவாக உள்ளது.

★ சட்டத்தை மீறிச் செயற்பட்டிருந்தால் விசாரணை நடத்தித் தண்டனை வழங்குமாறு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

★ஆனால் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்துப் பரிந்துரைகளையும் அரசாங்கம் ஏற்க வேண்டியதில்லை.

இவ்வாறு தெரிவித்திருப்பவர், சாட்சாத், மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவரும் அமைச்சருமான மஹிந்த சமரசிங்கா.

அத்தோடு அவர் நிறுத்தவில்லை.

உள்நோக்கங்களின் அடிப்படையில் அறிக்கை குறித்து விமர்சனங்களை வெளியிடுவோர் தமது வாய்களை மூடுமளவுக்கு பதில் வழங்குவதற்கு நான் தயாராக உள்ளேன். சர்வதேச மட்டத்தில், சிறந்த முறையில் பலமடையும் அளவுக்கு ஆணைக்குழு அறிக்கை அமைந்துள்ளது என்றும் அமைச்சர் சிலாகித்துள்ளார்.

அமைச்சருக்கு இந்தளவுக்கு சூடேறுவதற்கு காரணம், மனித உரிமைகள் காண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச நெருக்கடிகள் குழு ஆகியன நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து விமர்சனங்களை முன்வைத்திருப்பதே ஆகும்.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:

★போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தவோ, குற்ற வாளிகளை சட்டத்தின்முன் நிறுத்தவோ, அறிக்கை எந்த வழிகாட்டுதலையும் வழங்கவில்லை.

★இலங்கைப் படைகளால் புரியப்பட்ட மோசமான மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணைக்குழு தவறியுள்ளது.

★மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்புடைய அதிகாரிகளைப் பொறுப்புக்கூற வைப்பதற்கான யதார்த்தமான பாதையைக் குறிப்பதற்கு நல்லிணக்க ஆணைக்குழு தவறிவிட்டது. அதனால் சுதந்திரமான அனைத்துலக விசாரணைக் குழு அவசியம் -என்பது கண்காணிப்பகத்தின் நிலைப்பாடாகும்.

இதேவேளை சர்வதேச மன்னிப்புச் சபையின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள குறைபாடுகளை பின்வருமாறு பட்டியிலிடப்பட்டுள்ளது.

★இலங்கையில் பிரச்சினைகள் இருப்பதாக நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஒப்புக்கொண்டுள்ளபோதும், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான மோசமான குற்றங்கள் குறித்த சான்றுகளையும் போர் தொடர்பான ஏனைய சட்டமீறல்கள் குறித்த குற்றச் சாட்டுக்களையும் இந்த அறிக்கை அலட்சியம் செய்துள்ளது.

★நாங்கள் ஏற்கனவே பயந்தது போன்று நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பக்கச் சார்பானதாகவே அமைந்துள்ளது.

★அதனால் ஒட்டுமொத்த மனித உரிமைகள் நிலைமையை முன்னேற்றுவது தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் இலங்கை அரசு தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

★நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு இலங்கை அரசு பதிலளித்தாக வேண்டும்.

வன்னிப் போரில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள், அவற்றுக்குப் பொறுப்புக் கூறுதல் என்பன குறித்து நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் திட்டவட்டமாக எதுவும் தெரிவிக்கப்படும் என்று சர்வதேச அரசுகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் நம்பும் வகையில் இலங்கை அரசு நடந்து கொண்டது; பிரசாரம் செய்தது. அதன்பொருட்டு வெளிநாட்டு முகவர் அமைப்புகளைப் பணிக்கு அமர்த்தி அறிக்கைகளைத் தயாரித்தது இப்போது வெளிச்சமாகிவிட்ட ஒன்று.

அவற்றின் அடிப்படையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஓரளவேனும் சமநிலைப்பட்டதாக அமையும் என்று மேற்சொன்ன அமைப்புகள் காத்திருக்கலாம். ஆனால் அவற்றின் எதிர்பார்ப்புகள் அறிக்கையில் இல்லை என்பதனால் அவை தமது ஏமாற்றத்தைத் தத்தமது அறிக்கைகள் மூலம் தெரியப்படுத்தி இருக்கின்றன எனக் கொள்ளலாம்.

அவை தமது பார்வைக்குத் தெரியும் உண்மைகளைச் சொன்னதும், அமைச்சர் மகிந்த சமரசிங்க சீற்றம் கொள்வது எந்த வகையில் பொருத்தம் என்று தெரியவில்லை.

இலங்கை மீது பல போர்க் குற்றங்களைச் சுமத்தி, வருட முற்பகுதியில் வெளிவந்த ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கைக்கு பதில் அளிக்கும் விதத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இருக்கும் என்று சர்வதேச மட்டத்தில் பெரும்பாலும் எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால், இலங்கையில் பலரும் எதிர் பார்த்தது போன்று நிபுணர் குழுவின் அறிக்கைக்குப் பதில் அளிக்கும் விதத்தில் சிறிய அளவிலாவது நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை அமையவில்லை. தமிழ் மக்களைப் பொறுத்தவரை அது நூறுவீதம் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

அறிக்கை எப்படி அமையவேண்டும் என்று அரசு எதிர் பார்த்ததோ அதேபோன்றே அச்சொட்டாக அது அமைந்திருக்கிறது.

ஐ.நா. நிபுணர் குழுவின் பிரதான கோரிக்கைகளில் ஒன்று இறுதிப் போரில் இடம்பெற்றன என்று கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்ய சர்வதேச விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பதாகும். இது குறித்து நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் எதுவுமே தெரிவிக்கப்படவில்லை.

பான் கீ - மூன் நிபுணர் குழுவை அமைப்பதற்கு, பிரதான காரணியாக இருந்தது இறுதி யுத்தத்தில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டாகும்.

இறுதிக் கட்டப்போரில் பொதுமக்கள் படையினரால் இலக்கு வைக்கப்படவில்லை என்று நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதன் மூலம் இந்தப் பிரச்சினை தொடர்பாக மேலும் வாதப் பிரதிவாதங்களை நடத்த இலங்கை தயாரில்லை என்பது தெளிவாகி உள்ளது

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை பான் கீ - மூன் பரிசீலனை செய்து வருகிறார் என்று அவரின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார். நிபுணர் குழு அறிக்கையில் இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து ஐ.நா. உறுப்பு நாடுகள் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று பான் கீ - மூன் கோரி இருப்பது நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையுடன் இந்தப் பிரச்சினை முடிந்துவிடப்போவதில்லை என்பதைத் தொட்டுக்காட்டுகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்வின்போது, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் போதாமை குறித்து கண்டித்த அமைப்புகளுக்கு பதிலடி வழங்கப் போவதாக அமைச்சர் சமர சிங்க வீறாப்புப் பேசியிருப்பது ஒப்பேறுமா என்பதற்கு, காலம் தான் பதில் சொல்லும்!

# கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையை வடமாகாணத்துக்கு விசேடமாக நடத்துக

## கல்வியியலாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.20

கல்வி நிர்வாக சேவைக்கான பரீட்சையை விசேடமாக நடத்தி, வடமாகாணத்துக்குத் தேவையான உதவி மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்குத் தகுதியானவர்கள் நியமிக்கப்பவேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதே கல்வியாளர்களால் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சைக்குப் பல தடவை தோற்றிச் சிறந்த புள்ளிகளைப் பெற்றவர்கள் கூட ஆளணி விகிதாசாரப் பிரச்சினையால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதில்லை. நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தாலும் சிலருக்கு மட்டுமே நியமனம் வழங்கப்படுகிறது.

எனவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்கள் தோற்றுவதற்கு ஏதுவாக கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையை விசேடமாக நடத்த வேண்டும். அதன் மூலம் வடபகுதியில் உள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு தகுதியானவர்களை நியமித்து ஆளணி வளத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்.

வடமாகாணத்துக்குரிய இந்த இரு பதவிகளுக்கும் தேவையான ஆளணி 250 ஆகும். ஆனால் உரிய தகுதியுடன் 77 பேரே கடமையில் உள்ளனர்.

அதிபர் தரம் ஒன்று மற்றும் ஆசிரியர் தரம் ஒன்றில் உள்ளவர்களே உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கான கடமை நிறைவேற்றுபவர்களாக உள்ளனர். பதில் கடமையாற்றுவோர் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை தரத்திலுள்ள அதிகாரிகளுக்குரிய கடமையை ஆற்றுகின்றனர். எனினும் நிரந்தரமான அந்தப் பதவிகளுக்குரிய சலுகைகள் எதனையும் அவர்கள் அனுபவிக்க முடியாதுள்ளது.

எனவே வடமாகாணத்திலுள்ள 173 இற்கும் மேற்பட்ட பதில் கடமையாளர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என அங்கு மேலும் வலியுறுத்தப்பட்டது.

மேற்படி விடயம் தேசிய ரீதியாக உள்ள பிரச்சினை ஆகவே அதனை அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றுவதாக கூட்டத்தின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

(14)

# பெற்றோரை இழந்த வடக்கு சிறுவர்களின் அபிவிருத்திக்கு இந்தியா உதவி வழங்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.20

பெற்றோரை இழந்துள்ள வட பகுதிச் சிறுவர்களுக்கான உதவித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு இந்திய அரசு உதவும். அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரி வெ. மகாலிங்கம் உறுதியளித்துள்ளார்.

தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாடு அமைச்சின் ஏற்பாட் டில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வடக்கு - தெற்கு உறவுப்பால நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே தூதரக அதிகாரி இதனைத் தெரிவித்தார்.

தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பெற்றோரை இழந்த 300 குழந்தைகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும்போது தூதரக அதிகாரி மகாலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய அரசின் உதவியுடன் வட பகுதியில் பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தப் பட்டு வருகின்றன. தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சு வட பகுதியில் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களுக்கு இந்திய அரசு தயங்காது உதவும்.

வடபகுதியிலுள்ள பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கென இந்த அமைச்சு முன்னெடுக்கும் உதவித் திட்டங்களுக்கு இந்திய அரசு உதவும். அதற்காக இந்திய அரசுடன் பேசி உதவுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வேன் - என்றார்.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்-

மாவட்ட செயலகத்துக்கு அனுப்பப்படும் சுற்று நிரூபங்களைத் தமிழ் மொழியில் அனுப்பினால் இலகுவாகக் கடமையாற்ற முடியும். சில அமைச்சுகளிலிருந்து சிங்கள மொழியில் மட்டுமே மொழி பெயர்ப்பு இன்றிச் சுற்று நிருபங்கள் அனுப்பப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் கவனத்தில் கொள்ளவேண்டும் - என்றார். (த-14-311)

# வடக்கே தினமும் 6 ரயில்கள் நெருக்கடி இன்றிச் சேவையில்

யாழ்ப்பாணம்,டிசெ.20

ரயில்வே திணைக்களம் வடக்கே தினமும் 6 ரயில்களைச் சேவையில் ஈடுபடுத்தி வருவதாக திணைக்களத்தின் வடபிரதேசப் பொறியியலாளர் எஸ்.எஸ் செல்வரெட்ணம் தெரிவித்தார்.

தபால்ரயில்,யாழ்.தேவி,சுப்பர் எக்ஸ்பிரஸ்ரயில்,ரஜனி ரயில்,இன்ரர்சிற்றிரயில் மற்றும் பொருள்களை ஏற்றி இறக்கும் ரயில் என்பனவே சேவையில் ஈடுபட்டு வருவதாக அவர் மேலும் கூறினார்.

இந்த ரயில்களின் சேவை தினமும் நெருக்கடி இன்றி இடம்பெற்று வருவதால் மக்களின் போக்குவரத்தும் சிரமம் இன்றி இடம்பெறுவதாகச் அவர் மேலும் கூறினார்.

இன்ரர்சிற்றி ரயிலில் பயணம் செய்பவர்கள் ஏற்கனவே இன்ரநெற் ஊடாகவே தமது ஆசனங்களுக்கு முற்பதிவுகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

வடக்கே வவுனியா மற்றும் ஓமந்தை ரயில் நிலையங்களை வந்தடையும் ரயில்கள் உடனடியாகத் தண்ணீரால் சுத்திகரிக்கப்பட்ட பின்னரே மீண்டும் சேவையை ஆரம்பிக்கின்றன. அத்துடன் ரயில்களில் திருட்டுச் சம்பவங்களும் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்காக மேலதிக ரயில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களும் கடமையில் அமர்த்தப் பட்டுள்ளனர்.இந்த ஊழியர்கள் சீருடையிலும் சிவில் உடையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்- என்றார் அவர்.

(த-26)

**நாளை**

கார்த்திகை 05 புதன்கிழமை 21.12.2011

திதி: துவாதசி பி.இ. 5.52 வரை

நட்சத்திரம்: சுவாதி பி.ப. 1.49 வரை

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 4.54-6.24வரை, ராகு காலம்: 12.24 -1.54 வரை

# 200 லட்சம் ரூபா செலவில் வலி.மேற்கில் அபிவிருத்தி

## உலக வங்கி நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிசெ.20
உலக வங்கியின் நிதி உதவியுடன் நெல்சிப் திட்டத்தின் மூலம் வலி. மேற்கு பிரதேச சபையால் 200 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக சங்கானைப் பேருந்து நிலையம் 40 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

வலி. மேற்கு பிரதேச சபையில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடல் அண்மையில் சங்கானை மாவடி சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஜங்கரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நெல்சிப் அரச சார்பற்ற நிறுவனத்தின் வலிகாமம் மேற்கு சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் ம.சிவநாதன் உட் பட சபை உறுப்பினர்கள், வர்த் தகர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் வலி. மேற்கு பிரதேச சபையின் கீழ் மேற் கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டம் தொடர்பாகவும் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டபோது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மேலும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் வருமாறு:

வலி. மேற்குப் பிரதேச சபையின் கீழ் 200 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்குப் பொது மக்களின் பங்களிப்பு கட்டாயம் தேவையாகவுள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் மேற் கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் உரிய முறையில் சென்றடைய வேண்டும்.

வீதிப் புனரமைப்பில் குறிப்பாக ஒரு கிலோ மீற்றர் வீதிக்கு 60 லட்சம் ரூபா வரையிலான நிதி தேவைப்படுகின்றது.

இந்தப் புனரமைப்புச் செயற்பாடு நீண்டகாலம் பாவனைக்கு உட்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும் என்று சபை உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது.

சங்கானை பேருந்து நிலையத்தை நவீன பேருந்து நிலையமாக அமைத்து இரண்டாம் மாடிக் கட்டடத் தொகுதியில் வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-313)

## பாடசாலை விடுமுறையால் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20
யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துக் காணப்படுகின்றது. பாடசாலைகளின் ஆண்டு இறுதி விடுமுறையாலேயே இந்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தமைக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒரு வாரகாலத்தில் மட்டும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர். என்று தெரிவிக்கப்பட்டது. பயணிகளின் திடீர் வருகையால் ஏற்கனவே உறங்கி மூடப்பட்ட அனேகமான விடுதிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. கடந்த சில மாதங்களாக பயணிகள் இன்றி முடங்கிய விடுதிகள் தற்போது களைகட்டியுள்ளன.

இதேவேளை, நகரில் உள்ள உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையங்களில் விற்பனை இன்றித் தேங்கி கிடந்த உள்ளூர் உற்பத்தி பொருள்களுக்கும் தற்போது பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது. (ம-26)

## தேவரையாளி மாணவருக்கு கல்வி உதவிகள்

யாழ்ப்பாணம், டிசெ.20
வடமராட்சி வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கான கல்வி செலவுகளை வழங்க வடமாகாண காணி நிர்வாகத் திணைக்கள கணக்காளர் இராசநாயகம் முன் வந்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி கல்லூரியில் இடம்பெற்ற பரிசில் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண காணி நிர்வாக திணைக்கள கணக்காளர் இராசநாயம் பரிசில் வழங்கும் நிகழ்வில் வைத்து இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவ்வாறு போரால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டுக்கு உட்பட பிள்ளைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மேலும் உதவிகள் தேவைப் படுவதாக பாடசாலை அதிபர் நவநீதமணி தெரிவித்துள்ளார். (ம-319)

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் மார்கழிப் பாவை நோன்பு ஆரம்பம்

வடமராட்சி, டிசெ. 20
வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் மார்கழிப் பாவை நோன்பு நடைபெற்று வருகின்றது. வெள்ளிக் கிழமை தேகாலை இந்த நோன்பு ஆரம்பிக்கப்பட்டுத் தினமும் இடம்பெற்று வருகின்றது.

தினமும் அதிகாலை 5 மணிக்கு ஆயத்தமணி ஓசை எழுப்ப வெங்கடேஸ்வர சுப்ர பாதம் பாடப்படுகின்றது. 5.20 மணிக்கு தொண்டரடிப் பொழி யாழ்வார் பாடிய திருப்பள்ளி எழுச்சி பாடப்பட்டு 5.30 மணிக்கு பால் பூசை இடம்பெற்று வருகின்றது. தொடர்ந்து 5.40 மணிக்கு அனைத்து தேவர்களுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் திருவனந்தல் பூஜை நடைபெறுகின்றது.

காலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாடல்களும் பாடப்பட்டு வருகின்றன. இறுதியில் அடியார்களுக்கு சுக்குக் கோப்பியும் பிரசாதமும் வழங்கப்படுகின்றன. இந்த நோன்புப் பூசைகள் எதிர்வரும்14 ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும். பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் இந்தப் பூசைகள் அரை மணிநேரம் முன்னதாக இடம்பெற்று வருகின்றது.

மார்கழி மாத நோன்பை அனுஷ்டிப்பதன் மூலம் பீடைகள் நீங்கப் பெறும் என்பதால் பெருந் தொகையான பக்தர்கள் அடியார்கள் வல்லிபுரம் குருக்கட்டுப் பிள்ளையார் கோயிலில் தீர்த்தக் கேணியில் நீராடி வல்லிபுர ஆழ்வார கோயிலில் மார்கழி நோன்புப் பூசைகள், வழிபாடு களில் கலந்து வருகின்றனர். (ம-236)



கொழும்புத்துறை வசந்தபுரம் கிராமம் வெள்ளக் காடாக காட்சி தருகிறது. புதிய வீதி அமைப்புக்காக அகற்றப்பட்ட வீடுகளில் குடியிருந்தோர் தற்காலிகமாக அமைத்த குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். (ம-135)

## கோரம் இன்மையால் கூட்டம் ஒத்திவைப்பு

அச்சுவேலி, டிசெ. 20
நல்லூர் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துக்குப் புதிய நிர்வாகிகளை தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் கோரம் இன்மையால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சங்க நிர்வாகத்தின் பதவிக் காலம் முடிவடைந்ததை அடுத்து மாவட்டக் கூட்டுறவுத் திணைக் களத்தால் அறிவித்தல் செய்யப்பட்டு பொதுக் கூட்டம் அண்மையில் யாழ்.மாவட்ட அபிவிருத்தில் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் கூட்டப்பட்டது.

சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை 850 இற்கு மேற்பட்டவர்களாக இருந்த போதும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டோரின் எண்ணிக்கை மூன்று பேராகவே இருந்தனர். இந்த நிலையில் புதிய நிர்வாகக் குழுவை தெரிவு செய்ய முடியவில்லை எனக் கூறப் படுகின்றது. புதிய நெறியாளர் குழுவில் ஏழுபேர் இடம்பெற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டள்ளது.

கோரமின்மையால் ஒத்தி வைக்கப்பட்ட பொதுக் கூட்டத்தை மீண்டும் கூட்டி புதிய நிர்வாகத் தெரிவு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-11)

## அடிக்கடி தடைப்படும் மின் சாதாரணதர மாணவர் சிரமம்

யாழ்ப்பாணம், டிசெ.20
வடமராட்சிப் பிரதேசத்தில் நேரக்கட்டுப்பாட்டின்றி மின்சாரம் இடைநிறுத்தப்படுவதால் அந்தப் பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். யாழ். மாவட்டத்தில் உயர் மின்னழுத்த திருத்தப் பணிகள் எனும் பெயரில் அடிக்கடி மின்சாரம் இடைநிறுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த சில நாள்களாக வடமராட்சிப் பிரதேசத்தில் இரவு நேரங்களில் அடிக்கடி மின்சாரம் தடைப்பட்டு வருகின்றது.

தற்போது சாதாரணதரப் பரீட்சை இடம்பெற்று வருவதால் பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்கள் தமது கற்றலைத் தொடர முடியாமல் பரீட்சை எழுத வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சாதாரணதர பரீட்சை எழுதும் மாணவர்களின் நலனையாவது கருத்தில் கொண்டு இரவு நேரத்தில் தடைப்படும் மின்சாரத்தை சீர்ப்படுத்தி உரிய நேரத்தில் சீரான மின்சாரம் வழங்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)

## யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள்

### கடன் அடிப்படையில் வழங்கப்படுகின்றன

அச்சுவேலி, டிசெ.20
யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு ''சீடா'' செயற்றிட்டத்தின் கீழ் நீர் இறைக்கும் இயந்திரங்கள் கமநல சேவை நிலையங்கள் ஊடாக இலகு கடன் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாய சம்மேளனங்களின் சிபார்சுடன் கமநல சேவை நிலையங்களால் ''ஹொபின்-20'' ரகத்தைச் சேர்ந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் இலகுகடன் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

20 ஆயிரம் ரூபா முற்பணம் செலுத்தி நீர் இறைக்கும் இயந்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.மிகுதித்தொகையை தவணை அடிப்படையில் செலுத்தலாம்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகள் இந்த வசதியை பெற்றுக் கொள்ளலாம். விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு விவசாய வங்கியும் குறைந்த வட்டியில் கடன் உதவிகளை வழங்கி வருகின்றது.

புத்தூர் கமநல சேவை நிலையத்தின் ஊடாக இந்த வருடம் 55 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 40 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் புத்தூர் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சத்தியேந்திரன் தெரிவித்தார். (ம-11)

## தேசிய மரபுரிமைகள் அமைச்சின் உயர்மட்டக் குழு யாழ். தொல்லியல் சின்னங்களைப் பார்வையிட்டது

யாழ்ப்பாணம், டிசெ.20
இலங்கை தேசிய மரபுரிமைகள் அமைச்சின் உயர்மட்டக் குழு தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலாளர் கே.எம். கே.எச். விஜயதுங்க தலைமையில் சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது.

யாழ்ப்பாணம் கோட்டைக்கு விஜயம் செய்த அந்தக் குழு கோட்டையில் இடம்பெற்று வரும் புனரமைப்பு வேலைகளைப் பார்வையிட்டது.

அதன்பின் நயினாதீவுக்குச் சென்ற அந்தக் குழு நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தையும் பார்வையிட்டது.

அதன் பின் காங்கேசன் துறை ஜம்புகோளப் பட்டணத் துக்கும் சென்றது. தொல் பொருள் ஆய்வுகள் இடம் பெறுவரும் கந்தரோடைக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளையும் பார்வையிட்டது.

யாழ்ப்பாணம் கோட்டையின் புனரமைப்பு வேலைகளைப் பார்வையிடவும் யாழ்ப்பாணத்தில் நிறைந்துள்ள தொல்லியல் சின்னங்கள் உள்ள இடங்களைப் பார்வையிடவுமே அந்தக் குழு வருகை தந்ததாக அந்தக்குழுவுக்குத் தலைமை தாங்கி வந்த தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலாளர் கே.எம்.எச். விஜயதுங்க தெரிவித்தார். (ம-319)

# குடாநாட்டில் கனத்த மழை தாழ் நிலங்களில் வெள்ளம்

## அவலத்தின் மத்தியில் மீள்குடியமர்ந்துள்ள மக்கள்





யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் திடீரென தொடர்ச்சியாகப் பெய்த மழையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி னர்.

யாழ்.நகரப் பகுதிகளில் கனமழை காரணமாக வீதிகளில் பெருமளவில் வெள்ளம் தேங்கியது. அத்துடன் அங்காடி வியாபார நிலையங்களுக் குள்ளும் மழை வெள்ளம் புகுந்ததால் பலத்த சிரமங்களை வியாபாரிகள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

யாழ்ப்பாணத்தின் மிகத் தாழ்ந்த பகுதிகளான பொம்மைவெளிப் பகுதியில் கனமழை காரணமாக அங்குள்ள குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்தது. அத்துடன் நல்லூர் யமுனா ஏரிப் பகுதி மற்றும் அரியாலைப் பகுதிகளிலும் வெள்ளம் தேங்கியதால் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கினர்.

இந்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் அவர்களின் அன்றாடச் செயற்பாடுகள் யாவும் தடைப்பட்ட நிலையில் இருந்தன.

யாழ்.தனியார் பஸ் நிலையப் பகுதி பண்ணை வீதி என்பனவும் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்பட்டன.

### வடமராட்சியிலும் பெரு வெள்ளம்

வடமராட்சிப் பிரதேசத்தில் காற்றுடன் கூடிய கடும் மழையால் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன் கடல்தொழில் மற்றும் விவசாயச் செய்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு கடும் காற்றுடன் மழை பெய்ததாலும் கடல்கொந்தளிப்பு நிலவியதாலும் பெரும்பாலான மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை.

தொண்டைமானாறு தொடக்கம் முனைவரையான பகுதியில் கடல்தொழிலுக்குச் சென்றவர்கள் மிகமிகக் குறைவானவர்களாகவே காணப்பட்டனர்.

அவர்களும் காற்று, மழை, கடற்கொந்தளிப்புக் காரணமாக மிகச் சிரமத்துடனேயே கரை திரும்பினார்கள்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கடற் பகுதிகளில் நேற்று முன்தினம் கடல் மிகக் கொந்தளிப்பாகக் காணப்பட்டதால் அப்பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களும் கடல் தொழிலுக்குச் செல்லவில்லை.

எனினும் மணற்காடு கடற் பகுதியில் இரண்டு படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் படகுகள் புரளும் நிலை ஏற்பட்டதால் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் கரை திரும்பினர். இதன் காரணமாக இந்தப் பிரதேச சந்தைகளில் மீன்களைப் பெரிதாகக் காண் முடியவில்லை.

மிகக் குறைந்தளவான மீன்களே சந்தைக்கு வந்திருந்த நிலையில் அவற்றின் விலைகளும் மிகவும் உயர்வடைந்து காணப்பட்டன.

### மீள்குடியமர்ந்த மக்கள் அவலம்

வடமராட்சி கிழக்கில் மீள்குடியமர்வு இடம் பெற்ற பகுதிகளில் தகரக் கொட்டில்கள், கொட்டகைகளில் குடியிருந்தோர் கடும் காற்று மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இப் பகுதிகளில் உள்ள வீதிகள் சேதமடைந்துள்ள நிலையில் வெள்ளம் தேங்கியுள்ளதால் போக்குவரத்துச் சிரமங்களும் ஏற்பட்டுள்ளன.

வடமராட்சி வடக்கு, தெற்கு, மேற்குப் பகுதிகளில் நேற்று முற்பகலுடன் மழை ஓய்ந்த போதிலும் வடமராட்சி கிழக்கில் மழை தொடர்ந்தவாறே இருந்தது.

இந்தப் பகுதிகளில் தாழ்நிலப் பகுதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன் புகையிலை, வெங்காயம் மற்றும் மரக்கறித் தோட்டங்களிலும் வெள்ளம் தேங்கி நின்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

கடும்மழை, காற்றால் வடமராட்சிப் பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டிருந்தது. (ம-15-236-253-26)

# நகர சபையின் அனுமதி பெற்றே விளம்பர பலகை நட வேண்டும்

### சாவகச்சேரி நகரசபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

சாவகச்சேரி நகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் விளம்பரப் பலகைகளை நடும் பொதுமக்கள் மற்றும் பொது நிறுவனங்கள் சாவகச் சேரி நகரசபையின் அனுமதியுடன் விளம்பரப் பலகைகளை நட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையிலும், பாதசாரிகள் மற்றும் வாகன சாரதிகளின் நலன் கருதியுமே விளம்பரப் பலகைகள் அமைக்க வேண்டும்.

இந்த நிலையில் நகர சபையினர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோர் தீர்மானிக்கப்படும் இடங்களில் மட்டும் விளம்பரப் பலகைகளை நடுவதற்கு அனுமதிக் கப்பட்டுள்ளது.

இதனால் விளம்பரப் பலகைகளை நடும் தனியார் நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், பொது மக்கள் ஆகியோர் சாவகச்சேரி நகரசபை யின் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது

அண்மைக்காலமாக குடாநாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்திருப்பதற்கு இத்தகைய விளம்பரப் பலகைகளும் முக்கிய காரணம் என்று சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றது. இது குறித்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அண்மையில் யாழ். மாவட்ட அரச அதிபரும் அறிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே அனுமதி பெற்ற பின்னரே விளம்பரப் பலகைகளை நிறுவ வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ம-207-313)

# 'விவாகப் பொருத்தம்' நூல் வெளியீடு



மட்டுவில் கலாபூசணம் சி.சிதம்பரநாதக் குருக்கள் ஆக்கிய விவாகப் பொருத்தம் என்னும் நூல் வெளியீட்டு விழா கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் திருமண மண்டபத்தில் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்களும் நூல் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் நயப்பு ரையை பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மாவும் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சி.கிருபாகரக் குருக்கள் வெளியிட சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் பெற்றுக் கொண்டார். நூலாசிரியர் சி.சிதம்பரநாதக் குருக்களை கல்வயல் சிவஸ்ரீ செ.பரமானந்தக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ம-207)

# டெங்கு ஒழிப்பு அதிரடிச் செயற்பாடு

### 50 இற்கும் அதிகமானோருக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம், டிசெ.20

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவால் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது டெங்கு நுளம்பு பரவக் கூடிய முறையில் சூழலை வைத்திருந்த குற்றச் செயல்களுக்காக 50 இற்கும் மேற்பட்டோருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துவரும் நிலையில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் பிரதேசங்கள் தோறும் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவால் டெங்கு ஒழிப்புத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரின் ஏற்பாட்டில் சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட சாவகச்சேரி நகரம், மட்டுவில் முதல் சரசாலை, கொடிகாமம், மந்துவில் முதல் வரணி, கைதடி முதல் நாவற்குழி ஆகிய ஐந்து வலயங்களிலும் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த ஐந்து வலயங்களிலும் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையச் சூழல் பாதுகாப்புப் பிரிவினர், சாவகச்சேரி பிரதேசப் பொதுச் சுகாதாரப் பிரிவினர், சாவகச்சேரி மலேரியா நோய்த் தடுப்புப் பிரிவினர் ஆகியோர் இணைந்து இந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் முதல் இடம் பெற்று வரும் இந்தச் செயற்பாட்டின் போது வீடுகளில் டெங்கு நுளம்பு உருவாகக் கூடிய, மழை நீர் தேங்கக் கூடிய வகையில் கொள்கலன்கள் காணப்பட்ட வீட்டு உரிமையாளர்கள் 15 பேருக்கு எதிராகவும், வீதியோரங்களில் நுளம்பு தேங்கக் கூடிய வகையில் உக்காத பொருள்களை வைத்திருந்த கடை உரிமையாளர்கள், வெற்றுக் காணிகளின் உரிமையாளர்கள் 35 பேருக்கு எதிராகவும் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் குழுவினர்கள் வீடு வீடாகச் சென்று பிரச்சார நடவடிக்கைகளிலும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-313-207)

# மண்டைதீவு உவர் நீர்தடுப்பு அணைக்கு கதவுகள் இல்லை

### மழைநீர் கடலுக்குள் செல்லும் நிலை

யாழ்ப்பாணம், டிசெ.20

மண்டைதீவு உவர் நீர்தடுப்பு அணைகளுக்கான கதவுகள் இன்னமும் போடப்படவில்லை.

இதனால் மழை நீர் கடலுக்குச் சென்று கொண்டிருப்பதாகவும் நெல் வயல்களில் தண்ணீர் தேங்கி நிற்காது வெளியேறிக் கொண்டிருப்பதால் நெற்பயிர்களுக்குத் தேவையான தண்ணீர் வயல்களில் போதுமான அளவு இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதிய நீரின்மை கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகளால் நெல் உற்பத்தியில் தளர்வு ஏற்படலாம் எனவும் அணைகளுக்கான கதவுகள் உடன் போட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள். (ம-7)

# யாழ்.நகரில் காணாமற்போன மாணவன் திருமலை பஸ் நிலையத்தில் மீட்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

கடந்த சில நாட்களுக்கு முன் யாழ்.நகரப்பகுதியில் காணாமற் போனதாகக் கூறப்பட்ட யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவனான பாக்கியராஜா தனுசன் நேற்று வீடு திரும்பியுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.


அத்தியடிப் பகுதியைச் சேர்ந்த குறித்த மாணவன் கடந்த புதன்கிழமை முதல் யாழ். நகரில் காணாமற் போனதாகத் தெரிவிக்கப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டிருந்தது. அந்த நிலையில் குறித்த மாணவன் திருகோணமலை பஸ்நிலையத்தில் நின்றபோது அப்பகுதியைச் சேர்ந்த பொதுமகன் ஒருவர் இவரை இனங்கண்டு யாழ் பொலிஸ் நிலையத்தில் சேர்ப்பித்ததாக தெரிவிக்கப்பட்டது.

அதன் பின் நேற்றுக் காலை பொலிஸாரால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். தன்னை எவரும் கடத்தவில்லை தனது தந்தையுடன் கோபித்துக் கொண்டே இவர் திருகோணமலை சென்றுள்ளதாகத் தெரிவித்தார் - என்றும் பொலிஸ் நிலையப் சமன் சிகேரா பொறுப்பதிகாரி கூறினார். (ந-319)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கருவான உயிராகி 13 - 07 - 1980

இறையான உயிராகி 30 - 12 - 2010



### அமரர் திருஞானம் ஞானேஸ்வரன்

நேற்றுப் போல் இருக்கிறது நீ இருந்த
நினைவுகள்....! ஆனாலும்
ஆண்டொன்று சென்றுவிட்டதடா...
வசீகர வதனம் கொண்டு
வலம்புரியாய் மிளிர்ந்தவனே
முப்பது ஆண்டுகள் மகிழ்வுடன் இவ்வுலகில்
வாழ்ந்தது போதுமென்று
காலனவன் கவர்ந்தானோ!
கருவறையில் சுமந்தவள் கதறியழ
உடன் பிறந்தோர் துடித்து நிற்க
உறவுகள் பரிதவிக்க எல்லோரையும் ஏங்க
வைத்து ஏனையா ஏகதூரம் சென்றுவிட்டாய்
இலையுதிர் காலம் கிளைகளின் மரணமில்லை
மறுபிறப்பில் மலர்வாயென்று
உன் நினைவுகளுடன் காத்திருப்போம்

(111903) (2,6,7)

1/15, 2 ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் சிவராசா (சிவா)



அரியாலை, 1/1, திருமகள் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் சிவராசா நேற்று (19.12.2011) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவக்கொழுந்தம்மா தம்பதியரின் அன்புமகனும், தங்க ராசா (லண்டன்), தில்லையம்மா, தவமணி, கணேசலிங்கம் (துரை - ஜேர்மனி), தெய்வேந்திரன் ( மாம்பழம் - பிரான்ஸ்), காலஞ்சென்ற உதயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோவிந்தராஜா, கணேசலிங்கம், கலைமேனகா (ஜேர்மனி) , புஸ்பராணி ( பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1/1, திருமகள் வீதி, அரியாலை (11848)(3.6.7) தகவல்: சகோதரர்கள்.

### தம்பு இரத்தினசிங்கம்



நெட்டிலிப்பாய், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு இரத்தினசிங்கம் நேற்று(19.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தம்பு - தெய்வானை தம்பதியரின் மகனும் வல்லிபுரம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சரஸ்வதி, அருளம்மா, பொன்னுத்துரை, நல்லம்மா, கனகம்மா, மற்றும் யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவமலர், சிவகுமாரன், தவகுமாரன், நந்தகுமாரன், சிவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும். தேவராஜன், மனோரஞ்சினி, மஞ்சுளா, சயன்ரா, தவனேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் பிரசாத், பிரசாந்தி, பிரதாப், பிரதீப், பிரகாஷ், ரகுவரன், ரேகா , ரம்மியா, சதுர்ஜன், தாட்சாயினி, துவாரகி, சஜிந்தவி, அபிசன், அபீணன் மற்றும் காலஞ்சென்ற அக்ஷயா ஆகி யோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெட்டிலிப்பாய், கோண்டாவில். தகவல்: குடும்பத்தினர்.

## பொதுசன உதவிப்பணம் வழங்கும் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.குடாநாட்டில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் இந்த மாதத்துக்கான கொடுப்பனவை எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை வரை பெற்றுக் கொள்ளமுடியும் என்று யாழ்.பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரெட்ணம் அறிவித்துள்ளார்.

தபால் நிலையங்கள் மற்றும் உபதபால் நிலையங்கள் ஊடாக வழங்கப்பட்டு வரும் இந்தக் கொடுப்பனவை பயனாளிகள் இன்று 20 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது இந்தக் கொடுப்பனவை 24 ஆம் திகதி பெற்றுக் கொள்ளலாம் எனவும், கொடுப்பனவுக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட பயனாளிகளின் கொடுப்பனவுகளையும் இதுவரைக்கும் உரியவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை எனவும், எனவே சம்பந்தப்பட்டோர் தத்தம் பிரிவுத் தபாலகங்களில் தொடர்பு கொண்டு அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-26)

### வேலைக்கு ஆள்கள் தேவை

மில் (அரைக்கும் ஆலை) வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: T.P.0776154941.
குருமில், இருபாலை வீதி, கோண்டாவில் சந்தி.

### THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில தனியாகவும் குழுக்களாகவும்.
BY: ந. விக்னேஸ்வரன்ஆச்சாரி, சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி முன்பாக. T.P. 0776751649

### துரித மீட்டல் அரசியல் விஞ்ஞானம்

GCE (A/L) 2012
6 மாத காலத்திற்குள் உயர்சித்தி....
முன்னணி ஆசிரியர் V.K. Selva
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி
Note: இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி வினாவிடைப் பயிற்சி நூல் வெளி வந்துவிட்டது
தொடர்புகட்கு: 0774940523 | 221,கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர்.

### வீடு வாடகைக்கு

நல்லூர் கோயில்வீதி, கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் உள்ள சூழலில் வீடு வாடகைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகட்கு: 0774940523, 0212225431

### வாழ்த்துக்கள் பல.....



17.12.2011 இல் கலாபூஷண விருது பெற்ற சிவநெறிக் கலாநிதி
விஸ்வப்பிரம்மதிலகம்
இராசையா ஸ்ரீதரன்

அவர்களை அவரது இசையுடன் கலந்த சைவத்திருத் தொண்டுகள் பல செய்து நீடுழி வாழ எல்லாம் வல்ல நல்லைக் கந்தன் அருளாலும், வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாளின் அனுக்கிரகத்தாலும் வாழ்த்திடும்.

நாச்சிமார் கோயிலடி. நவபவனம் குடும்பத்தினர்.

### பாராட்டுகள் பல....



17.12.2011 கொழும்பு மாநகரில்
"கலாபூஷண" விருது பெற்ற கலைவாணர் நாடக மன்றக் கலைஞர்
இராசையா பீதாம்பரம் (பற்குணம் அண்ணை)

அவர்களை வாழ்த்துவதோடு அருகிவரும் நாடகக் கலையை மேன்மேலும் வளர்க்க வேண்டும் என வேண்டி வாழ்த்தும்
நவபவனம் குடும்பத்தினர்.
நாச்சிமார் கோயிலடி.
(11555) (2-6,7)

### மாபெரும் மலிவு விற்பனை

நத்தார் பண்டிகையை முன்னிட்டு
இன்று 20.12.2011 முதல் 31.12.2011 வரை
விசேட கழிவுடன் விற்பனை
செய்யக்காத்திருக்கின்றோம்.

★ பட்டு சாறி வகைகள் 50 % கழிவு
★ ஆடவர் சேட் வகைகள் 25 % கழிவு
★ சல்வார் வகைகள் விசேட கழிவுடன்

கணேசன் சென்ரர்
கே.கே.எஸ். வீதி, இணுவில்
(சி/6999)(3.7.6)

### வடமராட்சி கிழக்கு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்: முக்கிய அறிவித்தல்

2004.06.01 தொடக்கம் மேற்படி சங்கத்தில் பணியாற்றிய பணி யாளர்கள் அனைவரும் தவறாது எதிர்வரும் 24.12.2011 சனிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு மருதங்கேணி காரியா லயத்தில் சமுகம் கொடுக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்
(11850)(3.7.6)

### யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் வரவு - செலவு த்திட்டம் - 2012

2012 ஆம் ஆண்டுக்குக் கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவின விவரங்களையும் உள்ளடக்கிய மாநகராட்சி மன்றத்தின் வரவு - செலவுத் திட்டம் 2011 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் ஒரு கிழமைக்கு மாநகரசபை அலுவலகம் இல.585/5, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம், பிரதான பொதுநூலகம், இல.15, முற்றவெளி வீதி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அலுவலக நேரத்தின்போது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகரசபை கட்டளைச் சட் டத்தின் அத்தியாயம் (252), (212) பி பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

திருமதி யோ.பற்குணராஜா,
மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.
(சி/6987) (2-6-7)

### காரைநகர் பிரதேச சபை பகிரங்க அறிவித்தல்

காரைநகர் பிரதேச சபையினால் பிடிக்கப்பட்ட உரிமை கோரப்படாத கட்டாக்காலி மாடுகள் எதிர்வரும் 22.12.2011 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படும். கால்நடை வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் சௌக்கிய சான்றிதழுக்கான கட்டணம் ஒவ்வொரு கால் நடைக்கும் ரூபா 70 அறவிடப்படும்.

காரைநகர் பிரதேசசபை,
19.12.2011
(C/6936)(6-7-8)

வே. ஆனைமுகன்,
தலைவர்;

# என்னத்தைச்...
## ...சொல்ல?!
### காலம் மாறிப் போச்சு! கல்விச் சூழலும் மாறிப் போச்சு!!

இற்றைக்குச் சுமார் அறுபதாண்டுகள் பின்னோக்கிப் பார்த்தால், பலதுறைகளிலும் நம் தமிழ் யாழ்ப்பாணம், வேறுபட்டிருந்ததையும், இங்கு நமது மக்கள் வாழ்ந்த வாழ்வும், எமது பண்புகளும், பண்பாடும், பழக்கவழக்கங்களும் உலகில் எங்குமே கண்டிராத தனித்துவத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்கின எனலாம்.

அதற்கு மூல காரணமும் அடித்தளமும், நமது அன்றைய கல்வியையும், அக்கல்வியை ஊட்டிய உத்தம ஆசிரியர்களிடம் இருந்த கல்வி, ஞானமும், ஒழுக்கமும், பண்பும், பண்பாடுமே எனலாம்.

1950ஆம் ஆண்டின் முற்பகுதியில் என ஞாபகம். ஒருநாள் மாலை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் யாழ்ப்பாணத்துக் கல்லூரிகளின் அதிபர்களின் மாநாடு ஒன்று நடைபெற்றது. கல்விமான்கள் பலரும் கலந்துகொண்டனர். விடுதியில் தங்கி இருந்த சிறார்களை தேநீர், கேக் பரிமாறப் பணித்திருந்தனர். அன்று கண்டு கேட்டவை இதனை எழுத வைத்தது.

அன்றைய இளமைப் பருவத்தில், கல்விமான்கள் குறித்து அதிகம் அறிந்திராத வயது. அன்று கூடியவர்களோ பெருமை மிகு கல்வியில் பேரறிவுபெற்ற பெருமக்கள். அங்குகூடிய அந்த அறிஞர் பெருமக்கள் ஆங்கிலத்திலேயே அடித்து முழங்கினார்கள். அவர்களில் சிலரின் திருநாமங்களை அறியத் தருகின்றேன்.

அழகனாக வந்திருந்தார் ஒருவர். சந்தனப் பொட்டோடு கம்பீரமான உடலமைப்பு; இவர்தான் ரி.ரி.ஜெயரட்ணம் - மகாஜனக் கல்லூரி. அடுத்த பெருமகன் ஐ.பி.துரைரட்ணம் - ஹாட்லிக் கல்லூரி. ச.அம்பிகைபாகன் - வைத்தீஸ்வராக் கல்லூரி. வெள்ளை வேட்டி வெள்ளைச் சட்டையோடு (நஷனலுடன்) ஒரு கல்விமான் தமது கில்மன் காரில் வந்தார். அவர் தான் ஒறேற்றர் சுப்பிரமணியம். யாழ்.இந்துவின் என்.சபாரட்ணம், அருணோதயாவின் சி.சிவசுப்பிரமணியம், யாழ்ப்பாணக் கல்லூரியின் கே.ஏ. செல்லையா, கொக்குவில் இந்துவின் உயர்திரு ஹன்டி. பேரின்பநாயகம், உரும்பிராய் இந்துவின் ஏ.வைத்திலிங்கம் இன்னும் பலர். பெயர்கள் சரியாக ஞாபகமில்லை.

வந்தவர்களோ கல்விக் கடலில் நீந்திய கனவான்கள். ஒருகாலத்தில் சு.நடேசபிள்ளை இராமநாதன் கல்லூரியின் தலைமைப் பேராசானாக இருந்தார். அதேபோன்று சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியை அழகுசெய்தார்.தென்மராட்சியில் பூலோகசிங்கம் வெற்றிவேலு மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.தியாகராசா, வி.வீரசிங்கம், வி.பொன்னம்பலம், மு.கார்த்திகேசன். இவ்வாறாக ஒவ்வோர் ஊருக்கும் ஒரு கல்லூரி; ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு கல்விமான் என்று எண்ணற்ற பேரறிஞர்கள் எங்கள் மண்ணுக்கு வளமும் எழிலும் சேர்த்த காலம் ஒன்றுண்டு.

காலத்தால் அழியாதவாறு இந்தக் கனவான்கள் கடமையாற்றி அமரர் ஆனார்கள். பண்டிதமணி கணபதிப்பிள்ளை,


ஹன்டி பேரின்பநாயகம்


என்.சபாரட்ணம்

க.கைலாசபதி போன்றோர் காலத்தால் அழியாத கருத்துக் கருவூலங்களை விட்டுச் சென்றனர். இவர்களால் யாழ்ப்பாணம், வரலாறு படைத்து நின்றகாலம் ஞாபகத்துக்கு வருகின்றது.

இதற்கு முந்திய காலத்தில், சட்டம்பிமார் என்ற பெயரில் ஊருக்கு ஒரு பெரிய சட்டம்பியார் இருந்து அக்காலக் கல்விக்கு வித்திட்டு வளர்த்த பெருமை தனியானதோர் இன்னொரு வகை சார்ந்தது.

ஆறுமுகநாவலர், அவர் வழியில் பற்பல திருத்தங்கள், தொண்டுகள் செய்த அருட்கவி வினாசித்தம்பியும் சிவத்தமிழ்ச் செல்வியும் ஆசிரியர்களே. இவ்விடத்தில் மற்றும் இருவரை மறந்துவிட முடியாது. அமரர் தந்தை செல்வாவும், மூதவை உறுப்பினர் சு.நடேசனும் தமது வாழ்வை ஆசிரியர்களாகவே ஆரம்பித்தனர்.

ஈழத்தமிழரென நாம் தனியான ஒரு முத்திரையைப் பெற்று, உலகளாவிய புகழைப் பெற்றோம் என்றால், எமது கல்லூரிகளை வழிநடத்திய இந்த மாமனிதர்களே அதற்கு வித்தாக விளங்கியவர்கள். அதனை நாம் மறந்தாலும் வரலாறு மறவாது.

இத்தனைக்கும், அன்று யாழ்ப்பாணத்தில் இருந்ததோ ஒரு ஒரு சிறிய கல்விக் கந்தோர். தலைமைக் காரியாலயம் இருந்ததோ கொழும்பில்தான். ஆனால் இன்றோ பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்றன பல கல்விக் கந்தோர்கள். அன்று ஒரு கல்விக் கந்தோரும் ஒரு அதிகாரியும், பத்துக்கும் மேற்படாத கல்விப் பரிசோதகர்களுமே இருந்தனர். இப்போது எத்தனை பெயரில் எத்தனை அதிகாரிகள், எத்தனை கந்தோர்கள், எத்தனை வலயங்கள். கல்விமான்களே! அதிபர்களே! ஆசான்களே! இவை உங்கள் தகவலுக்கும் செயற்பாட்டுக்கும்?


பிரசன்டன்

# வெள்ளைக்காரர்களின் விருப்பத்துக்கேற்ப தீர்மானங்கள் எடுக்கும் காலம் மாறிவிட்டது
## ஜனாதிபதி மஹிந்த கூறுகிறார்

கொழும்பு,டிசெ.20
மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கூறி எகிப்தைப் போல, இலங்கையிலும் ஆட்சியைக் கவிழ்க்கச் சதி நடக்கிறது. ஆனால் அது வெறும் பகல் கனவாகவே முடியும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அவர் அமைச்சரவையின் முடிவுகளில் நம்பிக்கை வைக்காது, வெள்ளைக்காரர்களின் விருப்பத்துக்கேற்ப தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்திய காலம் மாறிவிட்டது. அந்த யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளோம்.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாட்டைப் பிரித்துக் கொடுப்பது தான் தீர்வு என்று வெள்ளைக்காரர்கள் எண்ணியிருந்ததை, நாம் நாட்டைப் பிரிக்காமலேயே தீவிரவாதத்துக்கு முடிவு கட்டிவிட்டோம்.

சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டுள்ள விவகாரத்தைப் பயன்படுத்தி அரசியல் லாபம் தேடப் பலரும் முனைகின்றனர். அவர்கள் எதற்கு இதைச் செய்கின்றனர் என்று மக்களுக்குத் தெரியும். வதந்தி, சூழ்ச்சிகளுக்கு மக்கள் அகப்படக்கூடாது. ஒருபோதும் பின்னோக்கித் திரும்பிவிடக்கூடாது - என்றார். (ச)

# பிரான்ஸ் இராணுவத்துக்கு இலங்கையில் சீருடை

கொழும்பு,டிசெ.20
பிரான்ஸ் இராணுவத்தினருக்கான சீருடை இலங்கையில் தயாரிக்கப்பட்டு வருவதாக நாடு கடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் அரசுத் தலைவருக்கான தேர்தல் அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள நிலையில் அரசு சார்ந்த விடயங்கள் பிரான்சுக்கு வெளியே கொண்டு செல்லப்படுவது பிரான்ஸின் உள்ளக பொருளாதாரத்தைப் பாதிக்கின்றது என்ற விவாதமொன்றிலேயே இந்த விவகாரம் தெரிய வந்துள்ளது.

இந்தநிலையில் இனப்படுகொலை போர்குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக் கூறவேண்டுமென அனைத்துலக மனித உரிமை அமைப்புக்களும் அனைத்துலக நாடுகளும் கோரிவரும் நிலையில், பிரான்ஸ் இராணுவத்தினருக்கான சீருடை தயாரிக்கப்படுகின்றமை பிரான்ஸ் தமிழர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது என்று பிரான்ஸ் அரசுக்கு நாடு கடந்த தமிழீழ அரசின் மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (ச)

# களனிப் பல்கலை மாணவர் எதிர்ப்பு நடவடிக்கையில்

கொழும்பு,டிசெ.20
களனி பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று திங்கட்கிழமை எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மாணவர்களின் விடுதி வசதிகளை குறைத்தமை, மாணவர்களுக்கு எதிரான செயற்பாடுகள் என்பவற்றை கண்டித்து இந்த எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக களனிப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவர் சுரஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் நேற்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்தபோதும் அவர்களுக்கான விடுதி வசதி இல்லாது செய்யப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பொய்யான குற்றச்சாட்டுக்கள் சாட்டப்பட்டு 50 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.இவை அனைத்துக்கும் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்பாட்டம் செய்ததாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச)

# ஐ.தே.கவுடன் இணைந்து செயற்பட சரத் பொன்சேகா இணக்கம்

கொழும்பு,டிசெ.20
நாட்டின் ஜனநாயகத்தை நிலைநிறுத்த எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இணக்கம் தெரிவித்துள்ளார் என்று ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவின் 61ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக சஜித் பிரேமதாச மற்றும் தயாசிறி ஜயசேகர ஆகியோருடன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறைச்சாலைக்குச் சென்றிருந்தபோதே அவர் தனது இணக்கப்பாட்டை தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# தமிழினிக்குத் தொடர்ந்து சிறை

கொழும்பு,டிசெ.20
விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் துறை மகளிர் அணித் தலைவி எனக் கூறப்படும் தமிழினி தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இன்னும் சட்ட மா அதிபர் ஆலோசனை வழங்கவில்லை என்று இரகசிய பொலிஸார் நேற்று திங்கட்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேகநபரான தமிழினி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். தமிழினி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்த அனைத்து அறிக்கையும் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது என்று இரகசியப் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து தெரிவித்தனர். இந்தக் கருத்தைப் பரிசீலித்த நீதிவான் தமிழினியை எதிர்வரும் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.(ச)

# பௌத்த தலைவர்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புகின்றனர்
## - திஸ்ஸ அத்தநாயக்க


கொழும்பு,டிசெ.20
நாட்டின் சிரேஷ்ட பௌத்த மதத் தலைவர்கள் ஆட்சி மாற்றத்தையே விரும்புகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தலைமைப் பொறுப்பை கரு ஜயசூரியவிடம் ஒப்படைக்குமாறு மாகாநாயக்க தேரர்கள் கோரியுள்ளமை தொடர்பில் கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் கலந்து ஆலோசிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைவாக தீர்மானம் எடுக்க வேண்டும் என்று செயற்குழு தீர்மானித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி பலப்படுத்தப்பட வேண்டும் என்று மாகாநாயக்க தேரர்களின் கோரிக்கையானது, மறைமுகமாக ஆட்சி மாற்றத்தை விரும்புவதாகவே அர்த்தப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச)

# பஸ் விபத்தில் 22 பேர் காயம்



கொழும்பு,டிசெ.20
அக்கரப்பத்தனை, மன்ராசி கடை வீதிக்கு அண்மையில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தனியார் பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த பஸ் விபத்தினால் 22 பேர் காயமடைந்த நிலையில் மன்ராசி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

ஹற்றனிலிருந்து போர்டைஸ் வழியாக டயகம நோக்கிப் பயணித்த தனியார் பஸ் கட்டுப்பாட்டை இழந்தமையால் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# வெளிநாடுகளில் பணியாற்றும் 33% பெண்கள் உடல் ரீதியாகத் துன்புறுத்தப்படுகின்றனர்

## கரித்தாஸ் நிறுவனம் தெரிவிப்பு

வெளிநாடுகளில் பணியாற்றும் 33 வீதமான பெண்கள் உடல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாக அண்மையில் கரித்தாஸ் நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

பெண் பணியாளர்களைத் தாக்கல்,அடித்தல்,சூடுவைத்தல் போன்ற உடல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு அதிகளவில் ஆளாகின்றனர்.

முன்னணித் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் ஒன்றான கரிட்டாஸ் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பளம் வழங்காமை, உரிய நேரத்தில் சம்பளம் வழங்காமை, உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை வழங்காமை உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளைப் பெண் பணியாளர்கள் எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதுக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாடுகளில் பணிக்குச் செல்லும் 90 வீதமான பெண்கள், வீட்டுப் பணிப் பெண்களாகவே கடமையாற்றுகின்றனர் என்று தொழில் சட்ட நிபுணர் சியாமளி ரணராஜா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் அநேகமான பெண்கள் உள்நாட்டில் எந்தவித முன் அனுபவமும் பெற்றுக்கொள்ளாதவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஆய்வு அறிக்கை வெளியீட்டு நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாட்டு அமைச்சர் டிலான் பெரேரா, வெளிநாட்டுப் பணியாளர்களின் நலனை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாக்குறுதி அளித்துள்ளார். (வ)

# பிரசவத்தின்போது தாய் மரணம் வீதம் வீழ்ச்சி

கொழும்பு, டிசெ.20

பிரசவத்தின்போது இடம்பெறும் தாய்மார் மரண வீதம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்துள்ளது என தரவுகள் தெரிகின்றன.

கடந்த வருடம் 31.8 வீதமாக காணப்பட்ட இந்தப் பெறுமதியில் தற்போது குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இந்தப் பெறுமானத்தில் வீழ்ச்சி காணப்படுகிறது என்று குடும்ப சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி தீப்தி பெரேரா தெரிவித்துள்ளார்.

எனினும், தற்போது நாட்டில் பதிவாகாத பிரசவத்தின் போதான தாய் மரணங்கள் இடம்பெறுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

கர்ப்ப காலம் மற்றும் பிரசவம் இடம்பெற்ற 6 மாத காலங் களுக்குள் இடம்பெறும் மரணங்கள் இதில் உள்ளடங்குகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இதனால், அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் தமது பணியகத்துக்கு அறிவிக்குமாறு வைத்திய கலாநிதி தீப்தி பெரேரா பொது மக்களிடம் வலியுறுத்தியுள்ளார். (ஒ-சி)



# சரணடைந்த புலிகளின் முக்கிய தலைவர்களை கொன்றுவிடுமாறு கோத்தபாயவே உத்தரவிட்டார்

## அமெரிக்காவில் இராணுவ மேஜர் ஜெனரல் சாட்சியம் ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்கிறது இலங்கைத் தூதரகம்

வன்னியில் சரணடைந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களைக் கொன்று விடுமாறு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இரா ணுவத்தின் கள முனைத் தளபதி களுக்கு உத்தரவிட்டிருந்தார் - என்று இராணுவத்தில் பணியாற்றிய மேஜர் ஜெனரல் ஒருவர் சாட்சியம் அளித்துள்ளார்.

உயிருக்குப் பயந்து இலங்கையை விட்டு வெளியேறிய அவர், தற்போது அமெரிக்காவில் தஞ்சம் அடைந்துள்ளார் என லண்டனில் இருந்து வெளியாகும் 'தி ரெலிகிராப்' நாளிதழ் நேற்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையை விட்டுத் தப்பிச் செல்ல முன்னர் இந்த அதிகாரி மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டார் எனவும், தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கொடுமைகள் குறித்து சாட்சியமளித்துள்ள இலங்கையின் உயர்மட்ட படை அதிகாரி இவரே என்றும் ரெலிகிராப் கூறியுள்ளது.

சக்திவாய்ந்த நபர்கள் சிலருக்கும் இலங்கை இராணுவ அதிகாரிகள் சிலருக்கும் நெருக்கமான தொடர்புகள் இருந்தன எனவும், அவர்களுக்கு உயர் மட்டப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டிருந்தது எனவும் அந்த மேஜர் ஜெனரல் கூறியுள்ளார்.

இவரது இந்தச் சாட்சியம், இலங்கைப் படையினர், பொது மக்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தவில்லை என்று அண்மையில் வெளியிடப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கைக்கு முரணாக இருக்கிறது எனவும் ரெலிகிராப் குறிப்பிட்டுள் ளது.

இலங்கைப் படையினரால் பொதுமக்கள் துன்புறுத்தப்பட்ட சில தனிப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கூறியுள்ள ஆணைக் குழுவின் அறிக்கையில், உயர்மட்ட கட்டளையை பின்பற்றாத படையினர் சிலராலேயே இந்த மீறல்கள் நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஆனால், அமெரிக்காவில் தஞ்சமடைந்துள்ள மேஜர் ஜெனரல், களமுனைத் தளபதி ஒருவருக்கு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ சில கட்டளைகளைப் பிறப்பித்தார் எனவும், சரணடையும் புலிகளை வழக்கமான நடைமுறைகள் எதுவுமின்றிக் கொன்றுவிடுமாறு கூறினார் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பாதுகாப்புச் செயலரிடம் இருந்து அந்த உத்தரவு வந்தபோதிலும், அதில் இலங்கை ஜனாதிபதியும் தொடர்புபட்டிருக்க வேண்டும். அவரும் அதுபற்றி அறிந்திருந்தார். தளபதிகளால் அந்த முடிவை எடுக்க முடியாது - என்றும் அவர் கூறியுள்ளார்.

தனது பாதுகாப்புக் கருதி பெயரை வெளியிட விரும்பாத அந்த மேஜர் ஜெனரல், போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் படுகொலை செய்யப்பட்டதை உறுதிசெய்துள்ளார்.

இது இலங்கை ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலருக்கு எதிராக போர்க்குற்ற வழக்கு அழுத்தங்களைக் கொடுக் கும் என்று தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்த மேஜர் ஜென்ரல் தனது முதலாவது சாட்சியத்தை அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட புலனாய்வு இணையம் ஒன்றுக்கு வழங்கியிருந்தார்.

2005 இல் பாதுகாப்புச் செயலராக கோத்தபாய ராஜபக்ஷ பதவியேற்றதன் பின்னர் கொழும்பு நகர வீதிகளில் விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களுடன் இணைந்து செயற்படுவோர் என்று சந்தேகிக்கப்படுவோரை களையெடுக்க வெள்ளை வான் தாக்குதல் அணியொன்றை உருவாக்கினார் என்றும் அந்த மேஜர் ஜெனரல் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அனைத்துலக மன்னிப்புச் சபையின் இலங்கை விவகார ஆய்வாளர் யொலன்ட் போஸ்டர், இலங்கை அரசு குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தும் என்பது சந்தேகம்தான் என்று கூறியுள்ளார்.

ஆனால், லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று கூறியுள்ளது.

## இளைஞர் பரிமாற்ற உறவுப் பாலத் திட்டத்தில் கேகாலை மாவட்ட இளையோர் மருதங்கேணிக்கு

வடமராட்சி, டிசெ. 20

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் பரிமாற்றத்துக்கான உறவுப் பாலத்திட்டத்தின் கீழ் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த 50 இளைஞர், யுவதிகள் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள குடத்தனையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த 50 இளைஞர், யுவதிகள் கேகாலை மாவட்டத்துக்குச் சென்று ஒருவார காலம் தலா இரண்டு அல்லது மூன்று பேர் வீதம் அங்குள்ள இளைஞர், யுவதிகளின் வீடுகளில் தங்கியிருந்து பரிமாற்றங்களை மேற்கொண்டிருந்தனர்.

இதனடிப்படையில் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த 50 இளைஞர், யுவதிகள் கடந்த 14ஆம் திகதி சனிக்கிழமை குடத்தனைக்கு வந்து சேர்ந்தனர்.

அவர்களை வரவேற்று இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வு குடத்தனை திருச்சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் சம்ரகமுவ மாகாண இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஸ்ரீலால் விக்கிரமசிங்க கலந்துகொண்டு உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து குடத்தனை, மணற்காடு ஆகிய பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட வீடுகளில் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் ஒவ்வொரு வீடுகளிலும் தலா 2 அல்லது 3 பேர் வீதம் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 21ஆம் திகதிவரை அங்கு தங்கியிருக்கும் சிங்கள இளைஞர், யுவதிகள் தமிழர்களின் பண்பாடு, கலாசார விழுமியங்களை நேரடி அனுபவமாகப் பெற்றுக்கொள்வார்கள் எனத்தெரிவிக்கப்பட்டது.(ம-236)

## வடமராட்சி கிழக்கில் நூறு குடும்பங்கள் மழை வெள்ளத்தால் இடம்பெயர்ந்தன



யாழ்ப்பாணம், டிசெ.20

நேற்று முன்தினம் இரவு தொடக்கம் பெய்துவரும் பெருமழை காரணமாக வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த நூறு குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ள நிலையில் பாடசாலையிலும் ஆலயங்களிலும் தங்கியுள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்துள்ள மககளுக்கு நேற்று மாலை வரை எந்த விதமான உதவிகளும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. ஓயாத மழை காரணமாக சிறுவர்கள், முதியோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து பெய்யும் மழையால் ஏற்பட்டுள்ள குளிரால் இவர்கள் பெரும் சிரமம் அடைவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வீடுகளை முற்றாக இழந்துள்ள நிலையில் தற்காலிக கொட்டில்களில் இவர்கள் அண்மையில் மீள்குடியமர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் தற்போது பெய்துள்ள அடை மழை மக்களை சொல்லொணாத் துயரில் ஆழ்த்தியுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த மழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தலையீட்டை கோருகிறது மக்கள் போராட்ட இயக்கம்

யாழ்ப்பாணத்தில் வைத்து கடத்தப்பட்ட தமது யாழ். மாவட்ட அமைப்பாளர் லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முரளிதரன் ஆகியோரை விடுதலை செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவை கோரவுள்ளதாக ஜே.வி. பியிலிருந்து பிரிந்த மக்கள் போராட்ட இயக்கம் தெரிவித்துள்ளது.

இவ்விருவரும் இனந் தெரியாத நபர்களால் கடந்த 9 ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் வைத்து கடத்தப்பட்டனர்.

இந்தக் கடத்தல் தொடர்பாக அரசின் மீது அவ்வமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு கொழும்பிலுள்ள பல்வேறு வெளிநாட்டுத் தூது வர்கள், உயர் அதிகாரிகளின் தலைவர்களிடம் நேர அவ காசம் கோரியுள்ளதாகவும் அவர்களுடன் இவ்வாரம் மக்கள் போராட்ட இயக்கத்தின் பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளதாகவும் அந்த இயக்கத்தின் அரசியல் விவகார செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம், சீனா, கியூபா தூதுவர்கள், இந்திய உயர் அதிகாரிகள் ஆகியோருடனும் சந்திப்புக்கு அவகாசம் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்க்கட்சித் தரப்பிலுள்ள இடதுசாரி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாகவும் இதற்காக ஜே.வி.பிக்கும் அழைப்பு விடுத்துள்ளதாகவும் புபுது ஜாகொட தெரிவித்தார்.

# தங்க விருதுகளைப் பெற்ற DIMO TRIBE




அண்மையில் இடம்பெற்ற 2011ஆம் ஆண்டுக்கான தேசிய வியாபார திறமைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வில் Diesel and Motor Engineering PLC (DIMO) வுக்கு அனைத்துப் போட்டியாளர்கள் மத்தியில் மிகச் சிறந்த நிறுவனத்துக்கான தங்கவிருது கிடைத்துள்ளது. தேசிய வியாபாரத் திறமைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வானது இலங்கைத் தேசிய வர்த்தக சம்மேளனத்தால் நடத்தப்படும் ஒரு நிகழ்வாகும். வியாபாரத்தில் சிறப்பாகச் செயற்பட்ட வணிக நிறுவனங்களையும், நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்களையும் அங்கீகரித்து இவ் விருது வழங்கப்படுகின்றது.

இதனைவிட DIMO வேறு நான்கு பிரிவுகளிலும் தங்க விருதை வென்றுள்ளது. நிகழ்வில் அனேக தங்க விருதுகளை வென்ற பெருமை DIMOவுக்குக் கிடைத்துள்ளது. வணிக மற்றும் நிதிச் சேவைகளுக்கான விருதுகள், மனிதவள நிர்வாக நடைமுறைகள், பன்முகப்படுத்தப்பட்ட குழுமம், மிகப்பெரிய நிறுவனம் ஆகிய பிரிவுகளில் தங்கவிருது வென்றுள்ளது. தேசிய வியாபாரத் திறமைகளுக்கான விருதானது நாட்டின் பொருளாதார அபிவிருத் திக்காகப் பங்களிப்புச் செய்த நிறுவனங்கள், அதிக தொழில் வாய்ப்பை உருவாக்கிய நிறுவனங்கள், பேண்தகுபே சந்தையை உருவாக்கிய நிறுவனங்கள், நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றும் நிறுவனங்கள், வர்த்தக ரீதியில் சிறப்பாக இயங்கும் நிறுவனங்கள் முதலியவற்றை அங்கீகரித்து வழங்கப்படுகின்றன.

விருது வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு முறைமைகளில் வணிக மற்றும் நிதிச் செயற்பாடுகள், உலகளாவிய மட்டத்தில் அடைந்த வளர்ச்சி, அறிவு சார் பலம், தொழில்நுட்ப ரீதியான முதலீடு, ஆற்றல் விருத்தி, மனித வளத்தை நிர்வகிக்கும் திறமை, செயற்பாட்டு முறைமைகள், கம்பனி ஆட்சி முறைமை, சமூகப் பொறுப்புணர்வு ஆகிய அளவீடுகள் உள்ளடங்குகின்றன

2010/2012 நிதியாண்டின் முதல் காலாண்டின் DIMO திறமையான நிதிச் செயற்பாடு களைக் கொண்டிருந்தது. தனியே மோட்டார் வாகனத்துடன் மட்டும் தொடர்புடைய பங்குடமையாக இருந்த DIMO இன்று பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனமாகப் பொறியியல் துறையில் ஒவ்வொரு மட்டத்திலும் பிரதிநிதித்துவம் கொண்ட நிறுவனமாக வளர்ச்சி கண்டுள்ளது. இதில் மருத்துவப் பொறியியல், கட்டுமான நிர்மாண முறைமைகள், மின்சக்தி பொறியியல், சாதனங்கள் கையாள்கை, சேமிப்பகம் மற்றும் களஞ்சிய சாலைகளுக்கான தீர்வுகள் Power Tools, Fixing Solutions, விவசாய உபகரணங்கள், ஒளியூட்டல் உபகரணங்கள், மின்சார உபகரணங்கள், குளிரூட்டிகள், கப்பற் திருத்த சேவைகள் Fluid Management Solutions முதலியவை இவற்றில் அடங்கும்.


# கொழும்பில் காரோட்டப் போட்டி

இலங்கை வரலாற்றில் நீண்ட காலத்திற்குபின்னர் கொழும்பு நகர வீதிகளில் போர்முலா மக்லரேன்ஸ் 1300 இரவுப் பந்தயப் போட்டி எதிர்வரும் 16, 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

2.2 கிலோமீற்றர்படி 10 சுற்றுகளைக் கொண்ட இக் கார் பந்தயப் போட்டியான கொழும்பு நைற் ரேசில் 10 கார்கள் போட்டியிடுகின்றன.

இப்போட்டியாளர்களில் ஏ.எம்.டபிள்யூ சுசுகி மாருதியின் அனுசரணையின் கீழ் கலந்துகொள்ளும் நிகல் பெரேராவும் ஒருவர்.

நீண்டகாலத்தின் பின்னர் இவ்வாறானதொரு போட்டி கொழும்பு கோட்டை வீதிகளில் வர்ண மின்விளக்குகளின் அலங்காரங்களுடன் நடைபெறவுள்ளமை. மகிழ்ச்சியளிப்பளிப்பதாகப் போட்டியாளர்கள் தெரிவித்தனர்.



யூனியன் அஸ்யூரன்ஷ் நிறுவனத்தினர் தமது சமூக சேவையின் ஒரு பகுதியாக டெங்கு தடுப்பு விழிப்பூட்டல் நடவடிக்கையை அண்மையில் வடமராட்சிப் பிரதேசத்தில் மேற்கொண்டனர்.

# கொக்கா கோலா கிரிக்கெட் பயிற்சி முகாம் தொடர்கிறது

நாட்டின் அனைத்து பாகங்களில் இருந்தும் திறமைகளை கண்டறியும், ஊக்குவிக்கும் தனித்துவமான முயற்சியான கொக்கா கோலா கிரிக்கெட் பாத்வே பயிற்சி முகாமின் கொழும்பில் நடைபெறவுள்ள இரண்டாவது விசேட முகாம் பற்றிய அறிவிப்பு மூலம் தமது பயணத்தை தொடர்கின்றது. கொக்கா கோலா கிரிக்கெட் முகாம் முயற்சி அரவிந்த டீ சில்வா கிரிக்கெட் நிதியத்தின் ஒத்துழைப்புடன் கொக்கா கோலாவினால் ஒழுங்கு செய்யப்படுகின்றது.

19 வயதுக்குட்பட்ட தேசிய கிரிக்கெட் அணியில் உள்ள 29 வீரர்களில் 23 பேர் இந்த நிகழ்ச்சியின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளமையில் இருந்து, நிகழ்ச்சியின் வெற்றியினை அறிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது. 2008 ஆம் ஆண்டில் கருத்தாக்கம் செய்யப்பட்ட இந்த முயற்சியின் மூலம், திறன்கள் மேம்படுத்தப்படுவதுடன் சமூக ஒற்றுமை மற்றும் ஆரோக்கியமான, செயற்றிறன் மிக்க வாழ்க்கை முறைக்கும் வழி வகுக்கின்றது.

கிரிக்கெட் பாத்வே முயற்சி குறித்து கருத்து தெரிவித்த இலங்கை கிரிக்கெட்டின், வயது குழுப் பிரிவின் தலைவர், சுனில் விக்ரம நாயக்க "கொக்கா கோலா கிரிக் கெட் பாத்வே என்பது பயனுள்ள நிகழ்ச்சியாகும். அது பின்தங்கிய கிராமப் புறங்களைச் சேர்ந்த கிரிக்கெட் நட்சத்திரங்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. 19 வயதுக்குட்பட்ட தேசிய குழாமை தெரிவு செய்வதற்கு இந்த பயிற்சி நமக்கு உதவியது. எதிர்காலத்திலும் இந்த முயற்சிக்கான ஆதரவை நான் தொடர்வேன்" எனக் குறிப்பிட்டார்.

# ஹமீடியா நிறுவனத்தின் 'ஒரு குதூகலமான நத்தார்'

இலங்கையின் ஆண்கள் ஆடைத்துறையில் நிபுணத் துவம்பெற்ற முன்னணி நிறுவனமான ஹமீடியா 'ஒரு குதூகலமான நத்தார்' (A Dazzling Christmas) என்ற தனது வருடாந்த வருட இறுதி பண்டிகைக் கால வெகுமதித் திட்டத்தினை அங்குரார்ப்பணம் செய்வத னால் இவ்வருட நத்தார் பண்டிகையானது உண்மையிலேயே மிகவும் குதூகலமானதாக அமையவுள்ளது. நவம்பர் 26ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த வெகுமதித் திட்டமானது டிசம்பர் 31ஆம் திகதிவரை நடைமுறைப்படுத்தப்படும். உடனடி மற்றும் மகிழ்ச்சியூட்டும் அன்பளிப்பு வவுச்சர் வடிவிலான வெகுமதிகள் மற்றும் பிளாட்டினம் முலாம் பூசப்பட்டு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட குவளைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு காத்திருக்கின்றது.

நாடெங்கும்அமைந்துள்ள ஹமீடியா நிறுவனத்தின் எந்தவொரு காட்சியறையிலும் மேற் கொள்ளும் ஒவ்வொரு 5,000 ரூபா பெறுமதியான கொள்வனவுக்கும் ஹமீடியாவின் 'ஒரு குதூகலமான நத்தார்' வெகுமதி திட்டத்தின் கீழ் ஒரு சீட்டிழுப்பு அட்டையை (Scratch Card) வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்வர். பரிசுகள் உடனடியாக கிடைக்கக்கூடியவை என்பதுடன் வெகுமதித் திட்டம் நடைமுறையில் இருக்கும் காலப் பகுதியில் மீட்டுக் கொள்ளக் கூடியதுமாகும்.

நத்தார் பண்டிகை காலத்திற்கு அணிசேர்க்கும் வகையில்நத்தார்வர்ணங்களான சிவப்பு, பச்சை மற்றும் வெள்ளி வர்ணங்களினால் அலங்கரிக்கப்பட்டுள்ள நாடெங்கிலும் காணப்படும் ஹமீடியா காட்சியறைகள் விசேட பண்டிகைக் கால ஆடைகளுடன் தமது ஆடைத் தெரிவுகளையும் விஸ்தரித்துள்ளன. இதற்கு மேலதிகமாக (Innovation Unleashed) என்ற எண்ணக்கருவில் உருவாக்கப்பட்ட Platinum மற்றும் Gold ஆகிய கொடுப்பனவுப் பொதிகளைக் கொண்ட ஆண்கள் ஆடைத்தொகுதி (Wardrobe) இன் காரணமாக ஆண்கள் சிறப்பாக ஆடை அணியும் தன்மை மிகத் தெளிவாக புதிய தொரு மட்டத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக ரூபா 500 முதல் ரூபா 5,000 வரையிலான பெறுமதிகளைக் கொண்ட ஹமீடியா நிறுவனத்தின் அன்பளிப்பு வவுச்சர்கள் இந்தப் பண்டிகைக் காலத்திற்கு மிகப் பொருத்தமான கூட்டாண்மை துறைசார் அன்பளிப்பாக அமைவதுடன் நாடெங்கிலும் காணப்படும் அனைத்து காட்சியறைகளிலும் கிடைக்கக்கூடியதாகவும் உள்ளது.

# அங்கருடன் இந்து சமுத்திரத்தில் ஒரு குட்டி உலா

பொனடேரா கொடிக்கப்பல் வகை அங்கர் தற்பொழுது உலகம் முழுவதும் தனது 125 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது.

கடந்த 8 ஆம் திகதி இது தொடர்பான விசேட நிகழ்வு ஒன்று கொழும்பு துறைமுகத்தில் ஜெட்லைனர் கப்பலில் இடம்பெற்றது.

குறித்த நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் விசேடமாக அழைக்கப்பட்ட பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள் என சுமார் நூறு பேர் வரை இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இது தொடர்பான ஆரம்ப நிகழ்வுகள் கப்பலின் கீழ் தட்டில் இடம்பெற்றன. மேல் தட்டில் இசை நிகழ்ச்சியுடன் கூடிய ஒன்றுகூடல் இடம் பெற்றது. ஜெட்லைனர் கப்பலில் சுமார் ஒருமணிநேர உல்லாசப்பயணத்துக்கும் ஏற்பாட்டாளர்கள் ஒழுங்கு செய்திருந்தனர். அந்த ரம்மியமான மாலைப் பொழுதில் ஜெட்லைனர் கப்பல் அலைகளைக் கிழித்துக் கொண்டு சென்றது. ஓர் மறக்கமுடியாத நிகழ்வு ஆகும்.

நியூசிலாந்திலுள்ள பண்ணை ஒன்றில் 1886 ஆம் ஆண்டு முதன்முதலில் அங்கர் ஆரம்பிக்கப்பட்டது.

நியூசிலாந்தில் பெறப்பட்ட தூய, புத்தம்புதிய பாலின் மூலம் அங்கர் தயாரிக்கப்பட்டது. உயர் தரத்திலான பல்வேறு உற்பத்திகளையும் வழங்கி வரும் தனது உறுதிமொழிக்கு உண்மையாக அர்த்தம் கற்பிக்கும் வகையில் பல்வேறு நாடுகளிலும் அங்கர் முன்னிலை வகித்துவருகின்றது. இலங்கையில் அங்கர் தனது பிரசன்னத்தின் மூலம் குழந்தைகளின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் உகந்த இயற்கை மூலத்திலான பாலுணவுப் போஷாக்கில் அன்னையர்களின் நம்பிக்கைக்குரிய தெரிவாக விளங்கும் தனது பிரதான விழுமியங்கள் மீது கவனஞ் செலுத்தியுள்ளது.

அங்கரின் 125 ஆண்டு சாதனை இலக்கின் அடையாளமாகவும், ஒவ்வொரு பிள்ளையின் மத்தியில் உள்ள சாதனையாளரகளைக் கண்டறியவும் 2012 ஜனவரியில் போட்டியொன்றை அங்கர் ஆரம்பிக்கவுள்ளதுடன், 125 உள்நாட்டு மாகாணமட்டத்திலான பாடசாலைகள் இதில் போட்டியிடும் வாய்ப்பைப் பெற்றுப் பாடசாலை உபகரணங்களை யும், கற்றலுக்கு உபயோகமான இதர மூலப்பொருள்களையும் வெல்வதற்கு இது இடமளித்துள்ளது.

எழுத்தாக்கம், சித்திரம் மற்றும் வடிவமைப்பு அடங்கலாக பல்வேறுபட்ட விற்பனை நிலையங்கள் மூலமாக முறையான போஷாக்கு எவ்வாறு சிறப் பான இலங்கையை நோக்கி வழிநடத்திச் செல்கின்றது என்பதை ஆக்கபூர்வமான வழியில்வெளிப்படுத்துமாறு இலங்கை எங்கிலும் உள்ள சிறுவர்களை இப்போட்டி ஊக்குவிக்கின்றது. வெற்றி பெறுகின்ற பாடசாலைகளிலுள்ள 25,000 இற்கும் மேற்பட்ட சிறுவர்களின் வாழ்வுகளை இது எட்டி ஒவ்வொரு பிள்ளையும் சாதனையாளராக மாற வேண்டும் என்பதற்கு ஆதரவளித்து அதனை ஊக்கு விக்கும் அங்கரின் முயற்சிகளுக்கமைவாக பல்வேறுபட்ட கல்வி தொடர்பான மகத்தான பரிசுகளை அவர்கள் பெற்று பயனடையவுள்ளனர்.

# சுனாமி பாதித்த சாய்ந்தமரு மக்களுக்கு 7 வருடங்கள் கழிந்தும் வீடுகள் இல்லை

## இன்றும் அவர்கள் தகரக் கொட்டகைகளில் அவதி

நற்பிட்டிமுனை, டிசெ. 20

ஆழிப்பேரலை ஏற்பட்டு 7 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் சாய்ந்தமருது பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நிரந்தர வீடுகள் கிடைக்கவில்லை என்று கவலையும் விசனமும் தெரிவிக்கப்படுகிறது.

அதிக உயிர், உடைமைகள் எனப் பல்வேறுபட்ட இழப்புகளிலும் கூடுதலாகப் பாதிக்கப்பட்டது. கிழக்கு மாகாணம், குறிப்பாக அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்திலுள்ள சாய்ந்தமருது பிரதேச மக்களுக்கு இன்னமும் வீடுகள் வழங்கப்படாமல் உள்ளமை பெரும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

இதற்கான வீட்டு வேலைத் திட்டங்கள் சில பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன. வீடுகள் பூரணப்படுத்தப்படாத நிலையில் உள்ளமையால் இன்னும் அந்த மக்கள் தகரக் கொட்டகைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு இன்னல்களை அனுபவிக்கும் மக்கள் சிலரைத் தொடர்பு கொண்ட போது,

விரைவாக வீடுகளைக் கட்டித் தருவதாகக் கூறப்பட்டாலும் தற்போதும் அடித்தளம் போட்ட நிலையிலேயே காட்சியளிக்கிறது. அடுத்த வருட நிறைவுக்குள்ளாவது எங்களின் அடிப்படைத் தேவையான வீட்டை சம்பந்தப்பட்டவர்கள் நிறைவு செய்து தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# தொழிலாளர் நலன் பாதிப்புக்கு கூட்டு ஒப்பந்தமே காரணம்

## தொழிற்சங்கங்கள் மௌனம் சாதிக்கின்றன என்கிறது ம.தொ.முன்னணி

நுவரெலியா, டிசெ.21

கூட்டு ஒப்பந்தத்தினால்தான் தொழிலாளர்களின் நலன்கள் காக்கப்படுகின்றன என்று கூறிய தொழிற்சங்கங்கள் இன்று அதே ஒப்பந்தத்தினால் தொழிலாளர்கள் பாதிக்கப்படும்போது மௌனிகளாகிவிட்டார்கள் என்று மலையக தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் க.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

நிர்வாகங்களின் நெருக்கடிகளுக்கு எதிராக ஹற்றன், வெலிஓயா தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மேற்கொண்டுள்ள வேலைநிறுத்தம் சம்பந்தமாக அவர் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறிப்பிட்ட சில தொழிற்சங்கங்களினால் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது, மலையகத்தின் அனைத்துத் தொழிற்சங்கங்களினதும் ஆலோசனைகளுடனேயே அதனை மேற்கொள்ள வேண்டுமென்று தொடர்ச்சியாக வலியுறுத்தினோம். அத்தோடு, இந்த ஒப்பந்தத்தினால் தொழிலாளர்களுக்கு நன்மை இல்லை என்று சகலரும் கூறினோம். ஆனால், கூட்டு ஒப்பந்தங்கள் இதனை அசட்டை செய்ததோடு, இம் மாதிரியான ஒப்பந்தங்களினால்தான் தொழிலாளர்க ளின் நலன்கள் பாதிக்கப்படுவதாகவும் வேறு வியாக்கியானங்களைக் கூறியுள்ளன.

ஆனால், இன்று தொழிலாளர்களை அடிமைகள்போல தோட்ட நிர்வாகங்கள் நடத்த முற்படும்போது கூட, இவர்கள் தங்களின் பிழையை உணர்ந்து கொள்ளாமலும், தாங்கள் செய்து கொண்ட பிழையான ஒப்பந்த சரத்துகளை மாற்றிக்கொள்ளாமலும் தொழிலாளர்களைப் பயமுறுத்தும் பாணியிலேயே நடந்து கொள்கின்றார்கள்.

கூட்டு ஒப்பந்தத்தை விடவும், தொழிற்சங்கங்களை விடவும் இராணுவத்தை நம்புவது போல சில அதிகாரிகள் நடந்து கொள்வது தொழிலாளர்கள் மத்தியில் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது. எனவே, இப்போதாவது கூட்டு ஒப்பந்தக் கட்சிகள் இதில் தலையிடவேண்டும் - என்றார். (ச)

## நவீன துப்பாக்கி வீட்டில் வைத்திருந்த மக்கொனவாசி கைது

களுத்துறை, டிசெ. 20

அனுமதிப்பத்திரமின்றி வெளிநாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட துப்பாக்கியொன்றை வைத்திருந்த நபர் ஒருவரை பயாகல பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர்.

மக்கொன பகுதியிலுள்ள சந்தேகநபரின் வீட்டைப் பொலிஸார் சோதனைசெய்தபோது துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் களுத்துறை மேலதிக நீதிவான் நாமல் பெரேரா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேகநபரை விசாரித்த நீதிவான் அவரை விளக்க மறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச)



திருகோணமலை, சீனக்குடா கொட்பே மீன்பிடித்துறைமுகத்தில் புதிய இறங்குதுறையொன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துறைமுகமானது மீன்பிடிப் படகுகளுக்கு எரிபொருள் மற்றும் குடிதண்ணீர் வழங்குவது போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

# பட்டிருப்புக் கல்வி வலயத்திலிருந்து அதிகளவு ஆசிரியர்கள் இடமாற்றம்

## இரத்துச்செய்யப்படும் என்கிறார் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

மட்டக்களப்பு,டிசெ.20

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வெளிமாவட்டத்திற்கான ஆசிரியர் இடமாற்றம் இரத்துச்செய்யப்படும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

ஆசிரியர் இடமாற்றம் அவசியம். ஆனால், பட்டிருப்பு கல்வி வலயத்திலிருந்து அதிகமான ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களுக்கும், வேறு கல்வி வலயங்களுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதை அனுமதிக்க முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பட்டிருப்பு கல்வி வலய ஆசிரியர்கள், கஷ்ட, அதிகஷ்ட பிரதேசங்களில் கடமை புரிந்தவர்கள். அத்துடன், இந்த இடமாற்றத்தின் மூலம் இந்த வலயத்தின் பல பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடம் ஏற்படுவதுடன் மாணவர்களின் கல்வியும் பாதிப்படையும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மாணவர் கல்வியில் அதிக அக்கறையுடன் செயற்படுபவர் என்பதனால் இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்யும்படி கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். அவரும் எனது கோரிக்கையை ஏற்றுள்ளார். எனவே, நிச்சயமாக இந்த இடமாற்றம் இரத்துச் செய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# தொழிலாளருக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



நுவரெலியா,டிசெ.20

தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவும், தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்தவித சலுகைகளோ அல்லது மானியமோ வழங்கப்படாத அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்திற்கு எதிராகவும் இரத்மலானையில் கடந்த சனிக்கிழமை அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செய லாளரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான முரளி ரகு நாதன் தெரிவித்ததாவது:

பெருந்தோட்டப்புறங்களை தனியார் துறைக்கு கையளித்த பின்னர் பெருந்தோட்ட தொழிலாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருவது தெரிந்த விடயமே.

தொழிற்சங்கங்களுக்கும் கம்பனிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடலின் பின்னர் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கிய கம்பனிகள் தொழிலாளர்கள் மீது வேலைப் பளுவை சுமத்தி வருகிறது.

வழக்கத்துக்கு மாறான செயல்பாடுகள், ஒரு நாள் சம்பளத்துக்கு 20 கிலோ கொழுந்து பறிக்கச்சொல்வது போன்ற பல பிரச்சினைகளை தொழிலாளர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

நாளுக்கு நாள் தொழிலாளர்கள் மீது கம்பனிகளின் கெடுபிடி அதிகரிக்கின்றதே தவிர குறைய வாய்ப்பில்லை - என்றார். (ச)

## இறக்காமம் பிரதேசசபை பட்ஜெட் நிறைவேற்றம்

இறக்காமம், டிசெ.20

இறக்காமம் பிரதேசசபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இறக்காமம் பிரதேசசபையால் 2012 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், வருமான விவரங்கள் தொடர்பாக வரவு - செலவுத்திட்டத்தின் போது விவா தம் இடம்பெற்றது.

வரவு - செலவுத் திட்டத்தில் 8 கோடியே 5 லட்சத்து 51 ஆயிரத்து 200 ரூபா வருமானமாகவும், 8 கோடியே 5 லட்சத்து 23 ஆயிரம் ரூபா செலவாகவும் காட்டப்பட்டுள்ளது.

இறக்காமம் பிரதேசசபையின் முதலாவது வரவு - செலவுத்திட்டத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் அனைத்து உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர். (ச)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் தோட்ட மக்களுக்குப் பொருள்கள்

ஹற்றன், டிசெ.20

மஸ்கெலியா, ஹற்றன், தலவாக்கலை போன்ற பிரதேசங்களுக்குட்பட்ட தோட்டமக்களுக்கு, மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து சுமார் 18 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை வழங்கியுள்ளார். (ச)

# தாதியர் விடுதியின் கூரை உடைந்து விழும் நிலையில்

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

அம்பாறை, டிசெ.20

அம்பாறை, மகாஓயா தாதியர் விடுதியின் கூரை உடைந்து விழும் அபாய நிலையில் இருப்பதாக விடுதியில் தங்கியுள்ள தாதியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடுதியில் 24 பேர் தங்கி மகாஓயா வைத்தியசாலையில் கடமையாற்றி வருகின்றனர்.

20 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட இந்த விடுதியில் தங்கியிருப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் கூரை எந்த நேரமும் தலையில் உடைந்து விழலாம் என்ற நிலையில் அச்சத்துடனேயே தங்கி வருகின்றனர்.

இந்த விடயம் சம்பந்தமாக சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும் இதுவரை எந்தப் பதிலும் கிடைக்காத நிலையில் உள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. இலங்கமுதலி தெரிவித்துள்ளார்.

இந்த வைத்தியசாலையில் கடமை புரிவதற்கென 48 தாதியர்கள் தேவையான நிலையில் 27 பேர் மட்டுமே கடமை புரிகின்றனர். இவர்களில் 24 பேர் தாதியர் விடுதியில் தங்கியே சேவை புரிகின்றனர் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
தொழிலில் புதிய திட்டங்களைச் செயற்படுத்த முற்படுவீர்கள். வியாபாரிகளுக்கு கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். உங்கள் நலனில் அக்கறை கொண்ட சிலரைச் சந்தித்துப் பேசுவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம்.

**இடபம்:**
கஷ்ட காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள். உடன்பிறப்புகள் தொடர்பான விடயங்களில், பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். ஆடம்பர விடயங்களில் நாட்டம் செல்லும். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். அரசு தொடர்பான காரியங்களில் இழுபறிகள் காணலாம்.

**மிதுனம்:**
நம்பிக்கையோடு இருந்த ஒரு விடயம் நடக்காமல் போகலாம். உறவினர் ஒருவர் மூலம் ஆதாயம் பெற முற்படுவீர்கள். தேவையற்ற அலைச்சலுக்கு ஆள்படலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் வேலைப்பளு கூடும். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். முக்கிய நபர் ஒருவரை பற்றி மற்றவர்களிடம் விமர்சிப்பீர்கள்

**கடகம்:**
கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். காலை நேரத்தில் தொலைபேசி வழியில் முக்கியமான செய்தியைக் கேட்கலாம். சர்ச்சைகளில் சிக்காமல் இருக்க வீண் பேச்சுளைத் தவிர்ப்பது நன்மை தரும். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சி நடக்கும்.

**சிங்கம்:**
ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். தொழில் ரீதியான ஒரு விடயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். ஒரு செலவைப் பற்றி கவலைப் படும்போது மற்றொரு செலவு உருவாகும். நேரம், காலம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். சில விடயங் களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம்.

**கன்னி:**
அனுபவ அறிவால் சாதனை படைக்கும் நாள். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றிப் பெருமை சேர்ப்பார். பிரியமானவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம்.

**துலாம்:**
சேமிப்பாக வைத்திருந்த பணத்தை நண்பர் ஒருவருக்குக் கடனாகக் கொடுக்கலாம். குடும்ப உறுப்பினர்களுக்கு உதவிகரமாக சில வேலைகளைச் செய்வீர்கள். உணவு விடயங்களுக்காகத் தாராளமாகச் செலவிடுவீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம்.

**விருச்சிகம்:**
உறவினர்கள் சிலர் உங்களிடம் முக்கியமான உதவி கேட்கலாம். நண்பர் ஒருவருக்கு வாக்குக் கொடுத்துவிட்டு, அதை நிறைவேற்ற முடியாமல் ஏதாவது சொல்லிச் சமாளிக்கலாம். சக ஊழியர் ஒருவர் மீது கோபமாக நடந்து கொண்டு, பின் அதற்காக கவலை அடைவீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும்.

**தனுசு:**
நல்லவர், கெட்டவர் என்று பார்க்காமல் நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். தெய்வ காரியங்களுக்காகச் செலவு செய்வீர்கள். சவாலாக நினைத்து சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்றை அலைந்து திரிந்து முடிக்கலாம். பார்க்கச் சென்ற நண்பர் ஒருவரை வழியில் சந்திக்கலாம். குரு வழிபாடு குதூகலம் தரும்.

**மகரம்:**
நண்பர்கள், உறவினர்களுக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். தொழில் ரீதியாக சிலர் உங்களை விமர்சிக்கலாம் அல்லது பாராட்டலாம். குடும்ப உறுப்பினர்கள் விவகாரங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். நீண்ட தூரப் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும்.

**கும்பம்:**
நீண்ட நேரம் காத்திருந்து சில வேலைகளை முடிக்க வேண்டிய கட்டாயம் உருவாகும். திடீரென ஏற்படும் பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கடன் வாங்க நேரிடலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவர் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். உங்களின் மனம் நோகும் வகையில் சிலர் பேசலாம். கவனக்குறைவைத் தவிர்க்கவும்.

**மீனம்:**
மன உளைச்சசல் விலகி மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். நண்பர் ஒருவருடன் சில நாள்களுக்கு முன் ஏற்பட்ட கோபம் விலகும். சிறு பண உதவிகளைப் பெறலாம். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள். சுறுசுறுப்பாகச் செயற்படும் நாள்.

# வசந்தத்தை வ

புரிந்துணர்வு உடன்படிக்கை
பாதைத் திறப்பின் தொ
இன்றுவரை சுமார் பத்து
நெருங்கப்போகும் இனப்பி
தீவிரம், இன்றைக்கு அ
கட்டத்தையும் தாண்டியிருப்
அதேயளவு காலமாய், இந்த
எதிராக எழுப்பப்படும் குரல்
பத்திகளும், எடுக்கப்ப
நடவடிக்கைகளுமாகக்
கொள்ளப்படாத முற்போக்
மிகவும் அதிக

“நோயாளியாகிய சமூகம் போராடுவதேயில்லை” எனும் பிரபல்யமான கூற்றினுள் ஒளிந்திருக்கும் உண்மையை, அடக்கியாளும் தேவையைக் கருதியிருப்போர் நன்கு ஆழ்ந்துணர்ந்தே வைத்துள்ளனர்.

ஏதாவது வகையிலான ‘‘குறைபாடு’ அல்லது ‘‘மிகைப்பாடு’’ ஒன்றினையாவது ஏற்படுத்திவிடுவதன் மூலம் எந்தவொரு நோயையும் பிணிக்கச் செய்ய முடியும்.

சாதாரண மனித உடல்களில் ஏற்படுகின்ற நோய்களுக்கான காரணிகளும், தாக்கங்களும், பாதிப்புகளும், தடுக்கும் முறைகளும், மருத்துவ உதவிகளும், பின் விளைவுகளுமான முழுவற்றினையும் சமூக நோய்களுக்கும் சொற்ப மாற்றங்களோடு பொருத்திப் பார்த்து ஒற்றுமை காண முடியும்.

மேல்வகைக் கூறிய இணக்கத்தின் முடிவில், மிகப் பலத்த தீவிரத் தன்மையின் காரணமாக, தாக்கத்துக்குள்ளான உறுப்பின் பகுதியையோ அன்றி முழுமையையோ வெட்டியகற்றும் ‘‘சத்திர சிகிச்சை’’ நிபுணர்களின் பிரசன்னமின்மை, என்கின்ற ஏகத்துணிவுதான், இன்று நாம் எதிர்கொள்கின்ற பலவகை பிணி மூலங்களின் தோற்றுவாய்!

‘‘எத்தனையோ பேனாக்கள் எழுதித் தீர்த்துவிட்ட’’, ‘‘எத்தனையோ அட்சர சுத்தம் பிசகாத குரல்களால் உச்சரித்துக் களைத்துவிட்ட’’, ‘‘எத்தனையோ கருத்துரைகளாலும், விழிப்புணர்வுப் பரப்புரைகளாலும் எதிர்கொண்டு தோற்றுவிட்ட’’, சமூக அவலங்களின் ஆகப் புதிய பரிமாணமொன்றினுள் குப்புற வீழ்ந்து, மீள வழியின்றிக் கிடக்கின்றது வட தமிழினம் என்பதே நிதர்சனம்.

எமது இனத்தின் பொது நோக்கமொன்றை மழுங்கடிக்கச் செய்துவிடவேண்டும் என்கின்ற வீணவாவில், பல்வேறு முகங்களினால் ஏவிவிடப்பட்ட கொடூர மனங்கொல்லிகளின் தொகுப்புக் கள் இவையென்று யாவரும் நன்குணர்ந்து கொண்டுள்ள போதிலும், இழைக்கப்பட்ட, இழைக்கப்படுகின்ற, எல்லாப் பண்பாட்டு விரோத செயல்களுக்கும், ‘‘எதிரி’’லிருப்பவனையே கைகாட்டி விட்டு எமக்கு நாமே ‘குற்றமற்றவர்கள்’ என்ற கோயில் சந்தனத்தைக் குழைத்துப் பூசி முகர்ந்து மகிழ்வதில் அர்த்தமேயில்லை!

தற்துணிவும், புரட்சிகரமான தனிமன மாற்றங்களையும் தனக்குள் அனுமதிக்காத மனிதர்களை உருவாக்கிக் கொள்வதற்காக எமது சமூகத்தில் நாமே ஏற்படுத்திக் கொண்ட தடைகளை கொஞ்சமாவது உணராமல், ‘‘வேண்டாப் பொண்டாட்டி, கைபட்டால் குற்றம், கால்பட்டால் குற்றமென்று’’ ‘‘அனுராதபுரவுக்கு’’ அப்பாலே மட்டும் கைநீட்டிச் சாடுவது சற்றும் பொருந்தாது.

‘‘போராட வேண்டும்’’, ‘‘உரிமைகளையும், சுயநிர்ணயத்தையும் விட்டுக் கொடுக்க முடியாது’’, ‘‘தமிழ்த் தேசியம் என்ற மாபெரும் இலக்கு விலைகளுக்கு அப்பாற்பட்டது’’ என்கின்ற ஆகக் குறைந்த மனவெழுச்சிகளைக் கூட, செம்மொழியை உச்சரிக்கும் தேகத்தின் நரம்புகளில் ஒரு துளியும் எஞ்சாது துடைத்தழிக்க வேண்டும் என்கின்ற வெறியை, சதா காலமும் சொல், செயல், சிந்தனைகளில் சுமக்கும் ‘‘பலமானதொரு பகைவன்’’ எம் முன்னே நிற்பதை எப்படித்தான், அடிக்கடி மறக்க முடிகிறதோ?

இந்த ஞாபகக்குறைவின் விரோதமாய், ‘‘அவர்களே’’ எதிர்பார்க்காத சில, பல ‘‘இலட்சியக் குறுக்கீடுகளை’’ எமக்கு நாமே வரிந்து கட்டிக் கொள்கின்றோம், என்பதிலும் நிச்சயம் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை!

‘‘ஈழத்தமிழினம்’’ என்கின்ற பெருஞ்சொற்றொடர், பல்தேசங்களில் வாழும் தமிழர்கள் எனப் பிரிந்து, மாகாணங்களாகக் கிளைத்து, மாவட்டங்களாக விரிந்து, நிலச்சூழல்களினால் வேறுபட்டு, சமூகங்களாகத் துண்டாகி, குடும்பங்களாக ஒடுங்கி, தனி மனிதனாக அல்லது தனித் தமிழனாக ஓய்வடைகின்றது.

ஆக ‘‘ஈழத்தமிழினம்’’ என்ற இப்பேரினத்தின் இயக்கத்துக்கும் தொழிற்பாட்டுக்கும் உரிய ஆகச் சிறிய கூறு, ‘‘தனிமனித மனம்’’ எனத் தெளிவதில் தவறில்லை.

இதே எதிர்த் தாக்கத்தில் தனிமனித மனமொன்றினுள் ஏற்படுகின்ற வேண்டாத் தகாத கலாசார விரோத குற்றவியல் கருதி அளவு மீறிய ஆசைகளின் வெளிப்பாடுகள் ஒட்டுமொத்த மேற்சொன்ன எல்லா ‘‘இடைக் கட்டமைப்புக்களோடும்’’ சேர்த்து, ‘‘இனப் பெருவமைப்பையும்’’ ஆட்டங் காணச் செய்யும் என்பது தெளிவு.

கடந்துபோன மாதமொன்றின் குற்றச்செயல்களின் தன்மைகளை வெளிக்கொணர்ந்த, ஊடகங்கள் சொல்லும் சேதி மிகப்பயங்கரமானது. இதுவரை கேள்விப்பட்டறியாத வகையிலான, விசித்திரமான மனவோட்டங்களினால் உந்தப்பட்ட எம்மினத்தின் ஏதோவொரு அடிப்படைக் ‘கூறு’ ஆக்கியருளிய இந்தச் சமூக விரோத செயலினால் தலைகுனிந்தவர்கள் மட்டுமல்லர். எண்பத்து மூன்று உலக நாடுகளில் பரந்து வாழ்வதாக கணக்கிடப்பட்டுள்ள ஒட்டுமொத்த ஈழவர்கள்!

‘‘புலம்பெயர்ந்து மீண்டுவந்த தமிழ் நங்கையொருத்தியை, கலவரத்தில் இறந்ததாக கதையுரைத்து, ஆதாரம் திரட்டி ஆவணங்கள் புனைந்து வெறும் நிலப்பரப்பை தமதுரிமையாக்க எண்ணியவர்களை, தமது அங்கமாகக் கொண்ட இதே சமூகம், ‘‘போகிறேன்’’ எனும் சொல்லைக் கூட சாவுக்கு நிகரான அபசகுணமாகக் கருதி இன்றுவரை ‘‘போய்வருகிறேன்’’ என்று வழங்கும் நற்பண்பாடும் நடத்திய செய்கையும் ‘‘படித்த தேவாரங்களுக்கும், இடித்த கோயில்களுக்கும்’’ இடையான முரண் இல்லையா?

வெளிநாடு வாழ் உறவொன்றின் உடைமையான, தோட்ட நிலமொன்றை பராமரிப்பது தொடர்பில் எழுந்த வாய்த் தகராறு முற்றி, தனது சகோதரியையும், மைத்துனரையும் தம்பதிகளாக வீட்டு முன்றலில் வைத்து கோடாரியால் கொத்திச் சரித்தும் போதாமல் மருமக்களான சிறுவர்களையும் விரட்டி விரட்டி வெட்டிய- கொலைவெறியால் பேராசையின்பால் தூண்டல் கொண்டு இரட்டைக் கொலைப்பழி சுமக்கும்- இன்றைய மாமனுக்குத்

# வரவேற்போம்

க்கையின் பின்னான
ன் தொடக்கமாய்
பத்து வருடங்களை
னப்பிரச்சினைகளின்
கு அதி அபாயக்
பிருப்பதே உண்மை.
இந்த விடயங்களுக்கு
குரல்களும், எழுதிய
கப்பட்ட தடுப்பு
ாகக் கவனத்தில்
போக்கு வாதங்களே
அதிகம்!

■ செந்தூரி

தானே, இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன்பு மருமகள்கள், ''...மாமா, மாமா! வரட்டா போராட?'' என்று, வினாவியதும், ''என் ஆயுதங்களும் உனக்குத்தான்!, என் சீருடைகளும் உனக்குத் தான்!'' என்று மாமாக்கள் பதிலிறுத்த வீரப்பாடல்களின் வரிகளும்? மறந்தா போய் விட்டது,

வரும் நாள்களில் நீதிமன்றங்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் சாட்சிக் குரல்களாக இன்றைய மருமக்களின் வாக்குமூலங்கள் என்ன சொல்லப் போகின்றன?

பழப்பாணிப் போத்தல்களின் அடிப்பகுதியில் பஞ்சு வைத்து, கொஞ்சமாய் கிடைக்கும், ''நீல'' நிற வெண்ணையைத் துளித்து திரியில் ஏற்றிய ஒளியிலும் கல்வியின் பால் நாட்டம் சற்றும் தளராத ''விக்கிரமாதித்தர்களின்'' சாதனைகள் போர்க்காலங்களிலும் ''அகில இலங்கை'' வரை பேசப்பட்டன.

''எழுமைக்கும் ஏமாப்புடைக்கும்'' இச்செல்வத்தின் ஏற்புக்காய், தாலியையும் அடைவு வைத்த தமிழச்சிகளையும் தாண்டிய தலைமுறையின் வழிவந்த ''சில்லறைகள்'' சிலவற்றின் சூட்சுமப் பண ஈட்டல் வழிகளுக்கு, ''போலி வினாத்தாள்'' புளுகை கொட்டி விற்ற கேவலங்களும் எமக்கென்றானதே ஈற்றில்?

கண்ணீர் சிந்திக் கற்று, வருடங்களை விழுங்கிய முழுக்குடும்ப உழைப்பையும் ஒரே புள்ளியில் செலுத்தி விழி துஞ்சாது படித்து நேர் வழியில் முன்னேற்றம் காண வேண்டியவர்களை, நீதிக்குப் புறம்பான நாசங்களினுள் தள்ளிவிட்டுக் காசு பார்க்கும் கயமையை காலம்தான் மன்னிக்குமா?

நிறை குடமாகி, எம்மினத்தின் எழுதா விதியை இழிவிலிருந்து மீட்டெடுத்து, பார்போற்ற வைக்கும் மாகாரியச் சிற்பிகளை, வெறுங்குடமாக்கி வர்ணம் பூசி அழகு காட்டும் கோமாளித்தனத்தை கற்றுத் தந்தது யார்?

ஆக இறுதி வாரத்தில் மட்டும் அரங்கேறிய எம்மிகப் பிரகிருதிகளின் ''புதுஅவதார'' விரோதச் செயல்களில் சிலவே இவை.

இவையொத்த இன்னும் பலப்பலவாய், மாதமொன்றுக்கும் வருடத்துக்குமான விகிதங்களின்படி மோசடிகள் பெருகுமேயன்றி குறையும் வழியெதுவும் அண்மையில்லை.

''நெருங்கிய உறவினன்'' முறையினால் வன்புணரப்பட்ட பதின்மச் சிறுமிகளும், ''பாலியல் தொழிலாளிகளாக அடையாளம் காணப்பட்ட விடுதி யுவதிகளும்'', ''மதுச்சாலைகளிலும் மறைவிடங்களிலும் போதைப்பொருள்களுக்கு அடிமையாகிக் கிடக்கும் வெள்ளைச் சீருடைகளும்'', ''காலையில் பஸ்ஸில் ஏறி, மாலைக்குள் திரும்பும் அயல் மாவட்ட பயணங் களில் தேக சுகம் தேடும் கற்கும் ஜோடிகளும்'' ஆரோக்கியமான சமூகத்தின் அடையாளங் களா? இவர்களே எம் ''நோய் முதல்கள்'' என்று கைநீட்டுவதில் தவறென்ன?

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னான பாதைத் திறப்பின் தொடக்கமாய் இன்றுவரை சுமார் பத்து வருடங்களை நெருங்கப்போகும் இனப்பிரச்சினைகளின் தீவிரம், இன்றைக்கு அதி அபாயக் கட்டத்தையும் தாண்டியிருப்பதே உண்மை. அதேயளவு காலமாய், இந்த விடயங்களுக்கு எதிராக எழுப்பப்படும் குரல்களும், எழுதிய பத்திகளும், எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளுமாகக் கவனத்தில் கொள்ளப் படாத முற்போக்கு வாதங்களே மிகவும் அதிகம்!

தனி மனிதர்களால் சுய பரிசோதனைகள் மூலமும் மனக் கட்டுப்பாடுகள் மூலமும், ஆகக் குறைந்த ஆசைக்கெதிரான ஒழுக்கங்களை பேணுவதன் மூலமும் மிகச் சுலபமாக கட்டுக்குள் கொண்டு வரக்கூடிய இவ்வகைச் சிக்கல்களுக்கு மருந்து தேட நாம் தயாராக இல்லை.

ஆலய வழிபாடுகளையும் சமய நம்பிக்கைகளையும் வெறும் போலியான ஆசாரங்களோடு கடைப்பிடிக்கும் கபடத்தனமான உள்ளங்களில் பகுத்தறிவென்ற வெளிற்றும் தூள் போட்டு விளக்கிப் பார்க்க எம்மினம் விரும்புவதேயில்லை.

வேண்டாத குடும்பச் சண்டைகளையும் வன்முறைகளையும் குழந்தைகளிடம்கூட விதைத்துவிடும் இயல்பு கொண்ட சின்னத்திரை சீரியல்களுக்காக இரவுச் சாப்பாட்டைக் கூடத் தியாகம் செய்யும் தேவையுடையவர்களாக நாம்!

''நாடகம்தானே!'' எனும் வாய்ச் சொல்லில் சமாளித்துவிட்டு, மனம்லயித்துக் கிடக்கும் இந்த அரை மணிநேர ஆயுதங்கள்தான், ''வக்கிரமான எண்ணவோட்டங்களையும்'', ''எதையும் மறுதலித்துச் சிந்திக்கும் எதிர்மறை சித்தரிப்புக்களையும்'', ''பெண்களுக்கெதிராக, பெண்களே கட்டவிழ்த்து விடும் வீட்டுக்கு உள்ளேயான குடும்ப வன்முறைகளையும்'', ''பழிவாங்கல் நடவடிக்கைளுக்கான ஒத்திகைகளையும்'', ''புதிய வகையான இரத்தக் கலாசாரத்தையும்'' சத்தமில்லாமல் எம் வீட்டு வரவேற்பறைக்குள் துப்பி விடுகின்ற சாக்கடைகள்.

''இதெல்லாம் எப்பவோ, தெரியும். கொஞ்சம் விலகி நிக்கிறீர்களா, நேரமாகுது!'' என்று தத்துவார்த்தம் பேசிவிட்டு தானியங்கியை கைக்கொண்டு அகலத்திரைகளின் முன்னமர்வோரின் எண்ணிக்கையும் செலவழிக்கும் மணித்துளிகளும், தென்னிந்திய விளம்பரதாரர்களை மட்டும் உடலுப்ப வைக்கும் தொலைக்காட்சி வரிசைப்படுத்தல் புள்ளியிடலின் வெற்றிக்கு மட்டுமே வழி செய்கின்றது என்பதும் நாம் புரிந்துகொள்ள மறுக்கின்ற மறுபக்கங்களில் ஒன்று.

எவ்வளவோ மனக்கட்டுப்பாடுகளோடு, அன்போடு, அக்கறை கலந்த நேசத்தோடு நெருங்கி வாழ்கின்ற அழகிய தமிழ்ச் சமூக குடும்ப அமைப்புகளுக்குள் வேண்டாத விருந்தாளிகளாக வந்து, நெஞ்சில் வஞ்சம் விதைத்து நோக்கம் மறந்த வெற்று மரங்களாக எம்மை மாற்றி விடும் வல்லமை வாய்ந்த சின்ன, பெரிய திரைகளுக்கு, என்றைக்கு ''சுபம்'' சொல்கின்றோமோ, அன்றிலிருந்துதான் எம் வசந்தங்கள் ''தொடரும்''. ✱

## மருத்துவமனைப் பண்பாடுகள்



வேண்டப்பட்ட ஒருத்தர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்தால் அவரைப் பார்க்கப் போகும் சமயத்தில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அமெரிக்க வைத்தியர் ஒருத்தர் சில ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்.

படுத்திருக்கின்ற ஒருவர் சீக்கிரம் குணமாகி விடுவது, அவரைப் பார்க்க வருபவர்களைப் பொறுத்தும் இருக்கிறது.

ஒரு நோயாளி ஓர் அறைக்குள் தனியாகப் படுத்திருக்கிறார் என்றால் அந்தத் தனிமையே அவருக்கு ஒரு சிகிச்சை மாதிரி. அந்தத் தனிமையைக் கெடுக்கிற மாதிரி நீங்கள் நடந்து கொள்ளக்கூடாது. திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் அறைக்குள் போய் அவருக்கு ஆச்சரியத்தையோ அதிர்ச்சியையோ ஏற்படுத்தக்கூடாது. கதவைத் தட்டி அனுமதி கேட்டதன் பின்னர்தான் அறைக்குள் போவது சிறந்தது.

உள்ளே போனதும் அங்கேயிருக்கின்ற மருந்து, சாதனங்கள் படுக்கை வசதி இவற்றையெல்லாம் பார்த்துக் குறை சொல்லக் கூடாது. ஏதாவது குறை இருந்தால் அதை வைத்தியரிடம் அல்லது தாதியரிடம் சொல்லலாமே தவிர நோயாளி காதில் விழுகின்ற மாதிரி சொல்லக் கூடாது. எமக்குச் சிகிச்சை கொடுக்கின்ற குழுவினர் சரியில்லை என்று நோயாளி நினைக்க ஆரம்பித்தால் கூட அது மிகவும் கெடுதல் ஆகிவிடும்.

நோயாளியின் கையைக் குலுக்க வேண்டுமா? அவர் உடம்பைத் தொட்டு தடவ வேண்டுமா? மிகவும் பக்குவமாக அதைச் செய்யுங்கள். உங்கள் பலத்தையெல்லாம் அங்கே காட்டிக் கொண்டிருக்காதீர்கள். நிதானம், பரிவு, அன்பு இதை மறந்துவிடக் கூடாது. நோயாளி பக்கத்தில் உட்கார்வதற்கு இடமும் வசதியும் இருந்தால் உட்கார்ந்து பேசுங்கள். நிற்காதீர்கள். ''என்னைப் பார்ப்பதற்காக வந்தவர் நிற்கின்றாரே'' என்ற நினைப்பு நோயாளிக்கு மனவேதனையைக் கொடுக்கும். அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது.

நோயாளியிடம் ஆறுதல் வார்த்தை பேசுவதாக நினைத்துக் கொண்டு ''ஐயோ பாவம்! முன்னர் இந்த உடம்பு எவ்வளவு திடகாத்திரமாக இருந்தது. இப்போது இப்படி ஆகிவிட்டதே'' என்று கூறக்கூடாது.

''இப்போது எப்படி இருக்கிறீர்கள்?'' என்று உற்சாகமாக உரையாடலை ஆரம்பிக்க வேண்டும். வைத்தியசாலை வசதி எப்படியிருக்கிறது? சாப்பாடு எப்படிக் கொடுக்கிறார்கள்? என்று விசாரிக்க வேண்டும்.

குறை இருந்தால் நிர்வாகத்திடம் சொல்லுங்கள். முதலில் உங்களோடு பேசிக் கொண்டிருப்பதற்கு நோயாளி விரும்புகிறாரோ என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எப்போதும் நோயாளியிடம் அவருடைய நோயைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல. அவருக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையில் உங்கள் பேச்சு இருக்க வேண்டும். '' என் உதவி உங்களுக்கு ஏதாவது தேவையா?'' என்று கேளுங்கள். இப்படி நீங்கள் கேட்பதனால், நோயாளிக்குத் தன் உடல் நலத்தில் அக்கறையுள்ள ஒருத்தரைப் பார்த்த தெம்பும் உற்சாகமும் ஏற்படும். மனம் நிம்மதி கிடைக்கும்.

மருத்துவமனை வைத்தியர், தாதியர் அவர்களையும் பார்த்து நோயாளி பற்றி விசாரித்து அவருடைய நல்வாழ்வில் உங்களுக்கும் அக்கறை இருப்பதைக் காட்டிக் கொள்ளுங்கள். இதனால் நோயாளியைப் பற்றிக் கவலைப்பட யாரும் இல்லை என்ற எண்ணம் அவர்கள் மனதைவிட்டுப் போய்விடும்.

நோயாளி சாப்பிடுகிறாரோ, இல்லையோ நிறைய சாப்பாட்டுப் பொருள்கள் வாங்கிப் போய் குவித்தால் தான் சிலருக்கு நிம்மதி. அது முக்கியமில்லை. அதிகமாக மணம் வீசக் கூடிய நறுமணப் பொருள்கள் எதையும் எடுத்துச் சொல்லக் கூடாது.

ஒரு நோயாளியைப் பார்க்கப் போகிறோமே, கையில் ஒன்றும் கொண்டு செல்லவில்லையே என்ற கவலை உங்களுக்கு வேண்டாம். அவர் இருக்கிற நிலைமையில் உங்கள் கையில் என்ன இருக்கிறது என்று கவனித்துக் கொண்டிருக்கமாட்டார்.

நோயாளிக்கு வைத்தியர் சிகிச்சை கொடுக்கிறார். நீங்கள் அவருக்குத் தைரியத்தையும் உற்சாகத்தையும் கொடுத்தால் போதும். இவையெல்லாம் அந்த அமெரிக்க வைத்தியர் சொல்லியிருக்கின்ற ஆலோசனைகள். அதுமட்டுமன்றி நோயாளியைப் பார்க்கப் போகின்றவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்.

ஒருத்தர் நோயாளியைப் பார்க்கப் போய் பத்து நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்து விட்டு உடம்பைக் கவனித்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டுப் புறப்பட ஆயத்தமானார். அப்போது அவர் '' என் உடம்புக்கு ஒன்றுமில்லை; என் தம்பிக்குத்தான் நெஞ்சு வலி'' என்றார். "அவர்எங்கே?" என்றார். "அவரை எக்ஸ்ரே எடுக்க அழைத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். இந்தக் கட்டில் சும்மாதனே இருக்கிறதென்று கொஞ்ச நேரம் படுத்திருந்தேன்; நான் துணைக்கு வந்த ஆள்'' என்றார்.

**கோ.சுவாமிநாதன்**

உதயன்
20 டிசெம்பர் 2011 செவ்வாய்க்கிழமை



யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த 4 ஆம் திகதி தவநாதன் றொபேட்டின் தலைமையில் இடம்பெற்ற அமரர் சங்கீதபூஷணம் எல். திலகநாயகம் போலின் இரண்டாம் ஆண்டு நினைவாக இசை ஆராதனை (எ)

# மாணவர்களுக்கு சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்த ஆசிரியருக்கு பயிற்சிகள் வழங்க வேண்டியது அவசியம்

## வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வைக் கொண்டு வருவதற்கு ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

ஏனெனில் சுகாதாரம் கற்பிக்கும் ஆசிரியர் மட்டும் சுகாதாரத்தைக் கற்பிப்பதால் பயன் இல்லை. அனைத்துப் பாட ஆசிரியர்களும் சுகாதாரக் கல்வி தொடர்பான தகவல்களை அறிந்திருக்க வேண்டும் என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்திய சாலையின் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ந.ஜெயகுமாரன் எழுதிய ''நோய் நாடி நோய் முதல் நாடி'' எனும் புற்றுநோய் விழிப்புணர்வு நூலின் வெளியீட்டு விழா கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது:

சுகாதாரக் கல்விப் போதனை பாடசாலைகளில் தரம் ஒன்றிலே வழங்கப்படுகிறது. இதனை இன்னும் மேம்படுத்த முடியும். சுகாதாரக் கல்வி தொடர்பான அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் தமது பாட நேரங்களில் இவற்றைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

அத்துடன் வைத்தியர்கள் சுகாதாரக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, பாடசாலை ஆசிரியர்களுக்கு, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் உள்ள மாணவ ஆசிரியர்களுக்கு சுகாதாரக் கல்வியின் முக்கியத்துவம்பற்றி தெரியப்படுத்த வேண்டும்.

மாணவர்களுக்கு தகவல் சென்றடையக் கூடிய வழியை ஏற்படுத்துவது ஆசிரியர்கள் என்பதால் ஆசிரியர்களுக்கே அதிகமான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் - என்றார். (எ-313)

# குடாநாட்டு மக்கள் புகையிலைக்குப் பதிலாக மாற்றீடான செய்கையில் ஈடுபட வேண்டும்

## நோய்களில் இருந்து விடுபட்ட சமூகமாக மாற இதுவே வழி

யாழ்ப்பாணம், டிசெ.20

புகையிலைக்குப் பதிலாக மாற்றீடான பயிர்ச்செய்கைகள் யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட வேண்டும். தற்போது புகையிலைக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன. புகையிலையால் ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து முற்றிலும் விடுபட்ட சமூகமாக வளர வேண்டும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் புகையிலைக்கு மாற்றீடான பயிர்ச் செய்கை தொடர்பான ஆய்வு நூலின் தமிழாக்க நூல் வெளியீட்டு விழா யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆ.கேதீஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:

புகையிலை பயிர்ச் செய்கையானது பணப் பயிர் என்றே அழைக்கப்படுகிறது. அவ்வாறான பயிர்ச் செய்கையால் நோய்கள் அதிகரிப்பதை அவதானிக்க முடிகிறது.

பொது இடங்களில் புகைத்தல், மதுபாவனை போன்ற செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு புகையிலை விற்றால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். புகையிலை உற்பத்தி முற்றிலும் தவிர்க்கப்பட்ட வலயமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும். அதனை யாழ். மாவட்டத்தில் உள்ள அரச வைத்திய சாலைகள், சுகாதார நிறுவனங்கள் போன்றவற்றினூடாக பிரகடனப்படுத்தவுள்ளோம்.

புகையிலைக்கு மாற்றீடான பயிர்ச்செய்கையை மேற்கொண்டு அதனூடாக வருமானத்தை ஈட்ட வேண்டும். புகையிலையால் ஏற்படக் கூடிய நோய்களிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான சமூகமாக மாறவேண்டும்.

இதுபற்றிய விழிப்புணர்வு எதிர்கால சந்ததியினருக்கு அவசியம். நீண்டகாலமாக புகையிலையால் ஏற்படும் தீங்குகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும் - என்றார். (எ-311)

# அறிவு என்பது எவரும் அபகரிக்க முடியாத சொத்தாகும் மாணவர்கள் உணர்ந்து படித்து முன்னேற வேண்டும்

## வடபிராந்திய கட்டளைத் தளபதி

காரைநகர், டிசெ.20

ஒருவருடைய அறிவு என்பது எவராலும் பறிக்கவோ, களவாடவோ முடியாத சொத்தாகும். எனவே மாணவர்கள் கஷ்டப்பட்டு படித்து வாழ்க்கையில் உயர்வடைய வேண்டும். பெற்றோர்களும், மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கும் கல்வி கற்பதற்குமான சூழலை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என இலங்கை கடற்படையின் வடபிராந்திய கட்டளைத் தளபதி அட்மிரல் ஆர்.சி.விஜயகுணவர்த்தன தெரிவித்தார்.

காரைநகர் வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலய கட்டடம் கொழும்பு வோக் ஜூவெல்லறி நிறுவனத்தின் நிதி உதவியில் கடற்படையினரால் புனரமைக்கப்பட்டு, பாடசாலை அதிபரிடம் கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தளபதி அட்மிரல் ஆர்.சி.விஜயகுணவர்த்தனா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து கல்வியில் உயர்நிலை பெற்று வரும் கிராமங்களில் காரைநகரும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இந்த மண்ணிலே பிறந்து கல்வி கற்ற பலர் உயர் அதிகாரிகளாகவும், உயர் பதவிகளையும் வகித்து வருகின்றனர்.

நான் கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் எனக்கு கணித பாடத்தை போதித்த ஆசான் காரைநகரைச் சேர்ந்தவர் என்பதைக் கூறுவதில் பெருமையடைகின்றேன்.

குழந்தைகள் எமது எதிர்கால செல்வங்கள். எனவே அவர்களுக்குச் சிறந்த கல்வி புகட்டி உயர் நிலை அடைய வைப்பது பெற்றோர்களாகிய உங்களது கைகளிலேயே தங்கியுள்ளது.

கடந்த இருபது வருடங்களாக மூடப்பட்டிருந்த இந்தப் பாடசாலை கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னரே மீள ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அடிப்படை வசதிகள் எவையும் இன்றிக் காணப்பட்ட இந்தப் பாடசாலைக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் கடற்படையினர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்- என்றார். (எ-250)

## வினாடி வினாப் போட்டியில் வெற்றி பெற்ற கல்வி வலயம்

வலி.வடக்கு, டிசெ.20

இலங்கை கல்வியமைச்சால் பாடசாலைகளின் சுகாதார மேம்பாடு மற்றும் எயிட்ஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான உங்களுக்குத் தெரியுமா வினாடி வினாப் போட்டி கடந்த 15 ஆம் திகதி கொழும்பு சரசவி கலைக்கூடத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியின் மாகாண மட்ட இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட வவுனியா தெற்கு கல்வி வலயம் முதலாம் இடத்தையும் (150 புள்ளிகள்), தென்மராட்சி கல்வி வலயம் இரண்டாம் இடத்தையும் (30 புள்ளிகள்), கிளிநொச்சி கல்வி வலயம் மூன்றாம் இடத்தையும் (15 புள்ளிகள்), பெற்றுள்ளன. (எ-86)

## இரு மாணவர்களுக்கு ஓவிய, சித்திரப் போட்டிப் பரிசு



அச்சுவேலி, டிசெ.20

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் தரம் 3 மாணவி செல்வி ஆரணி பாலரஞ்சன் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சிறுவர் சித்திரப் போட்டியில் கோப்பாய் கல்விக் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் யாழ்.வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று வடக்கு மாகாண மட்டத்திலும் பரிசில் பெற்றுள்ளார். (எ-11)

* * *



அச்சுவேலி, டிசெ.20

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி தரம் 2 மாணவன் செல்வன் கிறீஸ்ரி தேவராசா சாம்சன் சுகாதார அமைச்சு நடத்திய ''வீதி விபத்துக்கு உள்ளானோரின் உலக ஞாபகார்த்த தின ஓவியப் போட்டியில் வடக்கு மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார். (எ-11)

## புதிய தலைவி, செயலாளர் தெரிவு

குருநகர், டிசெ.20

குருநகர் மவுண்ட்காமல் வீதியில் அமைந்துள்ள குருநகர் துணை இழந்தோர் மாதர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு நாள் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது நடைபெற்ற புதிய நிர்வாக சபைத் தேர்தலின் போது திருமதி அந்தோனிப்பிள்ளை மேரியம்மா தலைவியாகவும், யேசுதாசன் எஸ்பீரித்தம்மா செயலாளராகவும், யேசுதாசன் மேரி அஞ்சலா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்கள். (எ-51)

# அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டிய வடமராட்சி கிழக்குப் பகுதி

## எமக்கு எப்போது விடிவு? ஏங்கும் இந்தப் பகுதி மக்கள்

பருத்தித்துறையில் இருந்து சுமார் 30 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கிறது மருதங்கேணிப் பிரதேசம். தனி உதவி அரச அதிபர் பிரிவாக இருக்கும் இந்தப் பகுதி போர் தின்ற பிரதேசங்களில் முன்னணியில் திகழ்கிறது.

ஒரு காலத்தில் இந்தப் பகுதி அழகு ஆட்சி புரியும் பூமியாக விளங்கியது. கடற்கரை ஓரமும் பச்சைப் பசேலென நிறைந்திருக்கும் மரங்களின் குளிர்ச்சியும் இந்தப் பிரதேசத்தை வளம் மிகுந்த அழகு கொழிக்கும் மண்ணாக விளங்க வழிசெய்தன. இந்தப் பிரதேச மக்களின் பிரதான ஜீவனோபாயத் தொழில்களாக விவசாயமும் மீன்பிடியும் அமைந்தன.

வைத்தியசாலைகள், கட்டடங்கள் என சகல வசதிகளுடன் இந்தப் பகுதி விளங்கியது. ஆனால் கடந்த முப்பது ஆண்டுகால போர் இந்தப் பிரதேசத்தை சின்னாபின்னமாக்கிவிட்டது.




இன்று இந்தப் பகுதி கண்ணிவெடிகள் நிறைந்த பிரதேசமாக உள்ளது. சன நடமாடமற்று வெறுமையான தெருக்களும் உடைக்கப்பட்ட மதகுகளும் இங்கு இடம்பெற்ற போரின் கொடுமைக்குச் சான்று பகர்கின்றன.

குறிப்பாகப் போரின்போது சேதமாக்கப்பட்ட பல மதகுகள் இன்னும் புனரமைக்கப்படாமல் உள்ளன. இதனால் மழை காலங்களில் பயணம் செய்யும் மக்கள் இந்த மதகுகளின் சேதங்களுக்குள் விழுந்து விபத்துக்குள்ளாகும் சூழ்நிலையும் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

போரின்போது சேதமான நாகர் கோயில் மதகு இரண்டு இரும்புத் தகடுகளைக் கொண்டு தற்காலிகமாகப் போடப்பட்டுள்ளது.

கனரக வாகனங்கள் இந்தப் பாலத்தின் ஊடாகப் பயணம் செய்யும்போது இரும்புத் தகடுகள் விலகினால் பின்னால் வரும் வாகனங்கள் பயணிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுவதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

மருதங்கேணிப் பகுதிக்குப் பயணம் செய்யும் வாகனங்கள் குன்றும் குழியுமான இந்த வீதியூடாகப் பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மழை காலங்களில் வீதிகள் சேறும் சகதியுமான நிலையிலேயே காணப்படுகின்றன.

வீதியின் ஓரங்களில் முட்கம்பிகள் போடப்பட்டு மிதிவெடி அபாயப் பலகைகள் நடப்பட்டுள்ளன. சில சேத மான மதகுகளுக்கு முன்னால் 'அபாயம்' கவனமாகச் செல்லுங்கள் என்னும் அறிவித்தல் பலகைகள் தொங்க விடப்பட்டுள்ளன.

போரின் சின்னமாகப் பல பகுதிகள் கண்ணிவெடிகள் நிறைந்த பகுதிகளாகவே உள்ளன. குறிப்பிட்ட பிரதேச மக்களின் முகங்களில் இனந்தெரியாத தவிப்பு நிறைந்துள்ளது. தலையற்ற முண்டமாகப் ஆயிரக்கணக்கான பனைகளையும், எறிகணைகள் விழுந்ததை ஞாபகப்படுத்தும் பள்ளங்களையும் இப்போதும் இந்தப் பகுதியில் காணக் கூடியதாக உள்ளன.

குறிப்பாக மருதங்கேணிப் பகுதியில் இருந்து சுமார் 9 கிலோமீற்றர் தூரத்தில் கட்டைக்காட்டுப் பகுதிக்குச் செல்ல வேண்டிய மக்கள் மழை காலங்களில் அனுபவிக்கும் துயரங்கள் சொல்ல முடியாதவை. வீதிகளை குறுக்கறுத்து வெள்ளநீர் பாய்ந்தோடுவதால் பயணம் என்பது பெரும் சுமை நிறைந்ததாகவே உள்ளது. இந்த வீதிகள் எப்போது புனரமைக்கப்படும் என்ற ஏக்கத்துடன் இந்தப் பகுதி மக்கள் உள்ளனர்.

இந்தப் பகுதிக்கான மின்சார விநியோகம் எட்டாக்கனியாகவே உள்ளது. மருதங்கேணிக்கு அப்பால் மின்சாரமே இல்லை.

இதனால் இந்தப் பகுதி மக்கள் தமது அன்றாட அலுவல்களுக்காகப் பல்வேறு துன்பங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்தனர். மண்ணெண்ணெய் விளக்கின் உதவியுடன் இவர்களின் இரவுப் பொழுது கழிகிறது.

இந்தப் பகுதிக்கான பிரதான பொலிஸ் சேவை மருதங்கேணியில் உள்ள பொலிஸ் சாவடி மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்தப் பகுதியில் அனர்த்தங்கள், விபத்துக்கள், நோய்கள் ஏற்பட்டால் 30 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மந்திகை ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

மருதங்கேணிப் பகுதியில் வைத்திய சாலை அமைந்திருந்தாலும் அது அவசர சிகிச்சைப் பிரிவு இல்லாத நிலையே காணப்படுகிறது. எனவே இந்தப் பகுதிக்கு நவீன பிரதேச வைத்திய சாலை ஒன்றின் தேவை அவசியமாக உள்ளது.

அழகும் வளமும் மிகுந்த இந்தப் பிரதேசங்கள் இன்னும் போரின் ஞாபகங்களைப் பறைசாற்றும் பிரதேசங்களாகவே உள்ளன. எப்போது இந்த மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படும் என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி. ✱

■ ஹரிஸ்

---

# ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் அரசியல்வாதிகளின் நிலைப்பாடு என்ன?

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகியுள்ள நிலையில் அறிக்கை குறித்து சர்வதேச அமைப்புகள் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்துள்ளன. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் உள்ளூர் அரசியல்வாதிகளின் நிலைப்பாடு என்னவென்று நாம் வினாவினோம்.

## அரசைக் காப்பாற்றும் முயற்சி

அப்பாத்துரை விநாயகமூர்த்தி

சர்வதேச அழுத்தங்களிலிருந்து இலங்கை அரசைக் காப்பாற்றும் நோக்கிலேயே நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தயாரித்துள்ளது.

அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள சிபாரிசுகளை அரசு அமுல்படுத்துமா என்ற சந்தேகம் தற்பொழுது. கருணா, பிள்ளையான், ஈ.பி.டி.பியினர் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆணைக்குழு சிபாரிசு செய்துள்ளது. இதனை அரசு செய்யுமா?

நடைமுறைக்குச் சாத்தியமற்ற சிபாரிசுகளையே குறித்த ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. ஏனைய குழுக்களின் அறிக்கை போன்று இதுவும் குப்பையில் எறியப்படலாம் - என்றார் தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

## இது ஓர் அர்த்தமற்ற செயற்பாடு

குணதாச அமரசேகர

எமது நாட்டுக்குள் இடம்பெற்ற சம்பவங் களை எமது மக்கள் நன்கு அறிவர்.

கடந்தகால சம்பவங்களை அறிக்கை மூலம் சொல்வதில் எதுவித பயனுமில்லை. அரசின் அர்த்தமற்ற செயற்பாடுகளுள் ஒன்றே ஆணைக் குழு அறிக்கை.எல்.எல்.ஆர்.சி. அறிக்கையை மனித உரிமைகள் கண்காணிப்பகம் உட்பட சர்வதேச அமைப்புகள் எதிர்க்கும் என்பதை முற்கூட்டியே நாம் அறிவோம்.

எமது நாட்டு மக்களுக்கு அறிக்கை மூலம் கடந்தகால சம்பவங்களை நினைவூட்டத் தேவையில்லை. அவற்றை நாம் நன்கு அறிந்துவைத்துள்ளோம்.

அப்படியானால் யாருக்காக அரசு அறிக்கை தயாரித்துள்ளது? இது ஓர் அர்த்தமற்ற செயற்பாடாகும்.

- இப்படித் தெரிவித்தார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர.

## எமது நிலைப்பாடு விரைவில்

சுனில் ஹந்துன்நெத்தி

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக் கையை நாம் ஆழமாகப் பரிசீலித்து வருகின் றோம்.

அதில் கூறப்பட்டுள்ள சிபாரிசுகள் தொடர்பிலும் நாம் ஆராய்ந்து வருகின்றோம். அறிக்கையை முழுமையாகப் படிக்காமல் அதுகுறித்து கருத்து வெளியிடமுடியாது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டை விரைவில் அறிவிக்கும்.

- இப்படித் தெரிவித்தார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி.

## அரசு மீது படிந்த கறைக்கு வெள்ளையடிப்பு

சிறிதுங்க ஜயசூரிய

உண்மைச் சம்பவங்களை நல்லிணக்க ஆணைக்குழு கடுகளவேனும் தொட்டுப்பார்க்கவில்லை. அனைவரும் அறிந்த விடயங்களையே அறிக்கையாகத் தயாரித்து அந்தக் குழு வெளியிட்டுள்ளது.

அரசின் கறைபடிந்த வரலாற்றுக்கு வெள்ளையடிக்கும் வேலையை அற்புதமாகச் செய்துள்ளது நல்லிணக்க ஆணைக் குழு.

பெருமளவு நிதியும், காலமும் விரையமாக்கப்பட்டதே தவிர அறிக்கையால் எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

மிகவும் ஆடம்பரமாக நல்லிணக்கக்குழுவை நியமித்த அரசு மிகவும் சூட்சுமமான முறையில் தனது இலக்கை அடைந்துள்ளது.

இப்படித் தெரிவித்தார் ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய.

# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா தம்பையா

*(முன்னாள் பிரபல வர்த்தகர், பெரியரசடி, சாவகச்சேரி)*



கச்சாய், கொடிகாமத்தைப் பிறப்பிட மாகவும், ஆசிரியர் வீதி, பெரியரசடி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தம்பையா (17.12. 2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணப திப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதி யரின் அன்புமருமகனும், செல்லம்மா (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், சாவகச்சேரி ப.நோ. கூ.சங்கம்) அவர்களின் அன்புக் கணவரும், சேந்தன் (லண்டன்), கீர்த்திகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகம்மா, யோகராசா, தங்கராசா, செல்வராசா (ஜேர்மனி), தவமணி தேவி, புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவக்கொழுந்து, மல்லிகாதேவி (லண்டன்), ஜெயராணி, மனோன்மணி, சுமதி (ஜேர்மனி), மாணிக்கம், லோகநாதன், செல்லத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரதீபன் (லண்டன்), வாகீசன், டயானி, கஜானி (ஜேர்மனி), கஜன் (ஜேர் மனி), பார்த்தீபன், நிஷாந்தன், பரிதா, சிவமாலினி (லண்டன்), குமுதினி (கனடா), சிவமதி(கனடா), குமணன் (லண்டன்), அருள் (லண்டன்), பிரசாந் (லண்டன்) ஆகியோரின் சித்தப்பாவும், விஜிந்தன், சஞ்சீவன், டிலக்ஷனா, கலையழகன், தயாளன் (ஜேர்மனி), துஷானி, சுபாஜினி, கபில்ராஜ், லவனுகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆசிரியர் வீதி,
பெரயரசடி, சாவகச்சேரி. (C/6985)(6,7,8)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திருமதி தங்கரத்தினம் குமாரசாமி



''நந்தவில்லா'', Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் குமாரசாமி கடந்த 17.12.2011 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- அம்மாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குமாரசாமியின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற வர்களான சிவக்கொழுந்து - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், நந்தகுமாரின் (சுவிஸ்) அன்புத் தாயும், இந்திராவின் பாசமிகு மாமி யும்,நிவேதன்(சுவிஸ்),தர்ஷி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற மருதலிங்கம் மற்றும் கதிர்காமத்தம்பி (கொழும்பு), பத்மா வதி (சுன்னாகம்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், தர்சன் (லண்டன்), தயன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பெரியதாயும், காலஞ்சென்ற இரட்ணபரராஜசிங்கம் மற்றும் நித்தியலக்சுமி, சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும், யசோதா (அமெரிக்கா), கிரிதரன் (கனடா), பிருந்தா (கனடா), மீரா (கனடா), சுவர்னேஞ்சநாயனி (கொழும்பு), மிதிலா (லண்டன்), ராஜினி (மக்கள் வங்கிக்கிளை, பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (21.12.2011) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''நந்தவில்லா'',
Dr.சுப்பிரமணியம் வீதி,
…னாகம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(11857) (2-6-7)

# முன்பள்ளிகளில் சுகாதார நடவடிக்கை

வலி வடக்கு டிசெ 20

அடுத்த ஆண்டு முதல் முன் பள்ளிகளிடையே சுகாதார நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளிலும் பார்க்க கூடிய முக்கியத்துவம் கொடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

முன்பள்ளிப் பாடசாலை மாணவர்களுக்குஇடையே சுகாதாரப் பழக்க வழக்கங்களை மேம்படுத்துவதன் மூலம் கூடியளவு சுகாதரச் செயற்பாடுகளை எதிர்காலத்தில் அவர்கள் பின்பற்றக் கூடியதாக இருக்கும் என்ற அடிப்படையில் இந்த நடவடிக்கையை சுகாதார அமைச்சு மேற் கொள்ளவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகள் பற்சிகிச்சை சுகாதார பொறுப்பதிகாரி வைத்தியர் எழிலரசி இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்பள்ளிச் சிறார்களின் பற்சுகாதார மேம்பாட்டில் பெற்றோர்களுடன் முன் பள்ளி ஆசிரியர்களும் இணைந்து கூடியளவு கவனம் செலுத்தும் முகமாக இந்த நடவடிக்கையை சுகாதாரத் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

(ம-86)

# இலவச கிசிச்சை

யாழ்ப்பாணம், டிசெ.20

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் கடந்த செப்டம்பர் மாதம் வெளிநாட்டு கண் சிகிச்சை நிபுணர்களால் நடத்தப்பட்ட கண் பரிசோதனையின் விழி வெண்படல பூப்படர்வு (கற்றாக்) உடையவர்களுக்கான இலவச சத்திர சிகிச்சை யாழ் போதனா வைத்தியசாலையில் இடம் பெற்று வருகின்றது.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் ஊடாக பிரதி வெள்ளிக்கிழமை தோறும் 5 பேர் யாழ். பேதானா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு மறுநாள் வெள்ளிக்கிழமை சத்திர சிகிச்சை இடம் பெற்று வருவதாக சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ம-207-313)

# மரண அறிவித்தல்கள்

## எஸ். மகாலிங்கம்

(ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர்- இலங்கை வங்கி)



கரணவாய் கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகாலிங்கம் 17.12.2011 சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (பிரதம லிகிதர்- பொலிஸ் திணைக்களம், கொழும்பு) -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியத்தின் (சரசு) பாசமிகு கணவரும் திருமதி ரஜனி ராசலிங்கம் (இந்தியா), திருமதி பவானி விமலேஸ்வரன் (கனடா), விமலேந்திரா மகாலிங்கம் (லண்டன்), நிர்மலேந்திரா மகாலிங்கம் (லண்டன்), திருமதி மாலினி நித்தியானந்தன் (கனடா) ஆகியோரது பாசமிகு தந்தையும், திருமதி பத்மநிதி விமல்ராஜாவின் (கொழும்பு) அன்புச் சகோதரனும், வி.விமல்ராஜா (ஓய்வு பெற்ற தொழில் நீதிமன்ற நீதிபதி - கொழும்பு), வி.கணேசராஜா (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), வி. விஸ்வேஸ்வராஜா (நியூ சிலாந்து), வி.நிம்ல்ராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்..

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
ம.பாக்கியம் (சரசு-மனைவி)



## திருமதி. இராசம்மா கனகரத்தினம்

**கோண்டாவில் கிழக்கு**

தாவடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும், கனடாவில் வசித்தவருமாகிய இராசம்மா கனகரத்தினம் வெள்ளிக்கிழமை 16.12.2011 இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி முத்துவேல் முத்துப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி. தம்பு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் (VTK) திரு. கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சோதிப்பிள்ளை, நடராஜா, ரத்தினம், செல்லம்மா, கனகம்மா, மகேஸ்வரி, மாணிக்கவாசகர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சரோஜினிதேவியின் மைத்துனியும், விக்கினேஸ்வரன் (Vicks), மனோரஞ்சிதம் (ரஞ்சி - உரிமையாளர் Ceycan Trades), காலஞ்சென்ற புவனேஸ்வரன் (Bobi), குணேஸ்வரன் (உரிமையாளர் VTK Wheel Clips) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பூபாலசிங்கம், காலஞ்சென்ற விவேகானந்தன், சரோஜினிதேவி (USA), கமலாதேவி, பத்மாதேவி ஆகியோரின் சிறிய தாயாரும், மதனலோஜினி, குகதாசன் (உரிமையாளர் Ceycan Trades), காலஞ்சென்ற சாந்தி, விஜயகுமாரி, அழகாதேவி, காலஞ்சென்ற ஞானம், காலஞ்சென்ற நாகேஸ்வரன், காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிரா, அபர்ணன், நிஷியா-சிவரூபன், நிமல்ராஜ், நிவாரகா-ஆனந்த், நிலுசா, ஆனந்த், மீனு, சிந்துஜானி-கீதன், சானுஜா-பிரதாப், பார்த்தீபன், ஜெயதீபன், கவிதா, சுகந்தன், காண்டீபன், மோகன், அகிலன், சுதா, தர்ஷினி, குமுதா, ரூபன், சாமினி, ரமணன் ஆகியோரின் பேத்தியாரும், மாதங்கி, ஈஸ்வர், மாறன் ஆகியோரின் பூட்டியாருமாவார். அன்னாரின் பூதவுடல் 8911 Woodbine இல் அமைந்துள்ள Chapel Funeral Home இல் புதன்கிழமை (21-12-2011) மாலை 5.00 மணி தொடக்கம் 9.00 மணிவரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் வியாழக்கிமை (22-12-2011) பிற்பகல் 1.30 மணி முதல் 3.30 மணிவரையும் அதே இடத்தில் ஈமைக்கிரியைகள் நடைபெற்று பின்னார் Leslie & Elginmills இல் அமைந்துள்ள Elginmills மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு : பத்மா - 416 289 4996, ரஞ்சி குகதாசன் - 905 231 1005, 416 7232276, விக்கி - 514 731 8813, ஞானம் 2580895

# இரண்டாவது வருட நிறைவு நிகழ்வில் மாணவர்களுக்கு பரிசில் வழங்கி ஊக்குவித்த திருநாவலூர் ச.ச. நிலையம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

திருநாவலூர் சனசமூக நிலையத்தை வளர்த்தெடுத்ததாக அந்தக்கால நிர்வாகக் குழுவினர் அனைவரும் இன்று அமரத்துவம் அடைந்துவிட்ட திருநாவலூர் கிராமத்து நன் முத்துக்களாகும்.

இவர்களுக்காவும் நிலைய வளர்ச்சியில் இணைந்து பணியாற்றி இன்று அமரத்துவம் அடைந்த ஏனைய பெரியவர்களுக்காகவும் வளர்ந்து, உயர்ந்து நிற்கும் நாவலர் சனசமூக நிலையம் சிரம் தாழ்த்தி தனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது என்று தற்போதைய நிர்வாகத்தினர் உள்ளம் உருக கண்ணீர் மல்க எம்மிடம் கூறினர்.

1987 ஆம் ஆண்டு விவசாய சேவை விற்பனை நிலையம் ஒன்றை சனசமூக நிலையம் ஆரம்பித்தபோது விற்பனை நிலையத்தை நடத்துவதற்கு கிருஷ்ண பிள்ளை தனது வீட்டைத் தந்து உதவினார். விற்பனை நிலையத்துக்கு சனசமூக நிலைய நிதியோடு மேலதிக நிதியை அமரர் விஜயரத்திணம் வழங்கி ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். இதன் விற்பனைப் பொறுப்பை சனசமூக நிலையப் பொருளாளர் வ.ச.செல்வராசா ஆற்றியிருந்தார்.

இவருக்கு உதவியாளராக இணைந்து பணியாற்றிய கா.தருமராசா வெளிநாடு சென்றதும், இவரைத் தொடர்ந்து பல இளைஞர்கள் வெளிநாடு சென்றமையும், விவசாய சேவை விற்பனைச் சேவை செயலிழந்து போனமைக்கு முக்கிய காரணமாக அமையப் பெற்றது. சேவையினால் சனசமூக நிலையம் நிதி வளங்களைப் பெற்று சிறப்புப்பெற்றது.



1987 ஆம் ஆண்டு திருநாவலூர் சனசமூக நிலையத்துக்கு அருகில் அம்பன் கமநல சேவை நிலையத்தின் உப அலுவலகக் கட்டடம் ஒன்றைக்கட்ட முற்பட்டவேளை, அந்தக் கட்டடம் அந்த இடத்தில் அமைய வேண்டுமா, வேண்டாமா என்ற வாதப்பிரதிவாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, இந்தக் கட்டடம் அந்த இடத்தில் அமைவதற்கு அப்போதைய கிராமசேவையாளர் அமரர் க.சண்முகநாதன் முன்னின்று உழைத்தார். கட்டடம் உரக்களஞ்சியமாகவும்,விவசாய உபகரணங்களை விற்பனை செய்யும் நிலையமாகவும் பின்னர் செயற்பட்டது. விவசாயப் பெருமக்களைப் பெருமளவில் கொண்ட இந்தக் கிராமத்தில் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு, என்னும் பாரதியின் ஒற்றுமை கீதத்தை ஓங்கி ஒலிக்கவைத்த பெருமைக்குரிய கட்டடமாக இது திகழ்கின்றது.

நாவலர் சனசமூக நிலையம் இந்தக் கிராமச் சிறார்களின் கல்வியில் அக்கறை காட்ட என்றுமே பின்நின்றதில்லை. 1958ஆம் ஆண்டு இந்தப் பாடசாலையை ஆரம்பித்து செயற்படுத்தி பின்னர் தொடரமுடியாது நிறுத்தப்பட்ட கல்வி நிலையத்தை 1990ஆம் ஆண்டளவில் நாவலர் இலவசக் கல்விநிலையம் என்ற பெயரில் மீண்டும் மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் ஆரம்பித்தனர். இந்தச் சேவையினால் பல மாணவர்கள் பயன் பெற்ற போதிலும், தனியார் கல்வி நிறு வனங்களின் செயற்பாட்டுக்கு முன்னால் இந்த நிலையம் நின்று நிலைக்க முடியவில்லை. நாவலர் இலவசக் கல்வி நிலையம் தொடர்ந்து செயற்பட முடியாத போதும் தன் பணியை 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்கள் வரை தொடர்ந்து செய்து முதலாமாண்டு, இரண்டாமாண்டு நிறைவு விழாக்களை நடத்தி மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி உற்சாகப்படுத்தியது மிகவும் முக்கியமானதாகும். இதற்கு சனசமூக நிலைய அங்கத்தவர்கள் பலர் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்.

கறுப்பு,வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டியில் நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு பயன் அடைந்த திருநாவலூர் கிராமத்தவர்களுக்கு நோர்வேயில் தற்போது வசிக்கும் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த லே.உதயராஜன் என்பவர் கடந்த 2001ஆம் ஆண்டில் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை அன்பளிப்புச் செய்திருந்தார். சனசமூக நிலையத்தின் இந்தத் தொலைக்காட்சிப் பெட்டி இரண்டு வருங்களின் பின்னர் அதாவது 2003ஆம் ஆண்டில் திருடப்பட்டது. இதனைத் தெரிந்து கொண்ட போது காலத்தின் கோலத்தை எண்ணி இந்தக் கிராம மக்கள் கவலையடைந்தனர்.

## கர்ணன்

இவர்களின் மனவேதனைகளைக் கலைத்து மகிழ்ச்சியை விதைக்கும் எண்ணத்துடன் தொலைக்காட்சிப்பெட்டி திருட்டுப்போன ஆறு மாதகால இடைவெளிக்குப்பின் மீண்டும் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று லண்டனில் வசிக்கும் திருநாவலூர்க் கிராமத்து இளைஞர்களான பொ.ஜெகதீஸ்வரன், ஆ. ஜெயராஜன், சி.செல்லக்கண்ணன் ஆகியோ ரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. மீண்டும் திருட்டுப் போவதைத் தவிர்க்கும் நோக்கோடு சனசமூகநிலைய நிர்வாகம் தொலைக்காட்சிப் பெட்டிக்கான பாது காப்புக் கவசத்தை அமைத்துக் கொண்டது.

(தொடரும்)

**வேலை வாய்ப்பு**

வருமானம் போதவில்லையா?
பகுதி நேர வேலை. அனைவரும் பங்குபற்றி வருமானம் ஈட்டலாம்.
தொடர்பு: 0771054200

**காணி விற்பனைக்கு**

யாழ். நகரை அண்மித்து, வேம்படி பெண்கள் மற்றும் மத்திய கல்லூரிகளுக்கு சமீபமாக, வேம்படி வீதியில் கடை, கந்தோர், workshop, அல்லது வீடு கட்டுவதற்கு ஏற்ற இரு வீதி களை முகப்பாகக் கொண்டு, கிணற்றுடன் கூடிய ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
விவரங்கட்கு: 0772172163/0773561991

**Pharmacy Assistant (1 Yr)**

தனியார் மருந்தகங்களிலும்,மருத்துவமனைகளிலும்(வெளிநாட்டிலும்) வேலை வாய்ப்பை நாடும் அனைவரும் கற்கக்கூடிய கல்வி.

**Knowledge Universe** No 75,Temple Road,Jaffna. www.kugroup.info
Professional Education by Graduate Professionals
K.U Education -"Practical and Result Oriented." Tel:0776458253

## சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு விசேட யாகம்

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரத ராஜப் பெருமாள் ஆலயத்தில் சனிப் பெயர்ச்சியை முன்னிட்டு விசேட நவக்கிரக ஹோமம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் நவக்கிரக தேவர்க ளுக்கு விசேட ஹோமம், அபி ஷேகம் செய்யப்பட்டு சனீஸ்வரனுக்கு 1008 அர்ச்சனைப் பூசையும் இடம்பெறும்.

இந்த நவக்கிரக ஹோம வழிபாட்டில் பங்குபற்றும் அடியவர்கள் எள் தீபம் ஏற்றி தமது கிரக தோஷ கிரியை வழிபாடுகளை நிறைவேற்றலாம். (வ-313)

* * *

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவன நாதர் சிவன்கோயிலில் நாளை புதன்கிழமை சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு சனிமாற்ற விசேடயாகம் இடம் பெறவுள்ளது.

உமாசுதன் குருக்கள் தலைமையில் பல சிவாச்சாரியர்கள் இணைந்து நடத்தும் இந்த யாக நிகழ்வில் சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம், மீனம், இடபம்ஆகிய இராசிகளில் பிறந்தவர்கள் கலந்து கொண்டு தமது கிரக தோஷங் களை நிவர்த்தி செய்யலாம். (வ-207)

* * *

சுழிபுரம் வடக்கு - கிழக்கு சாத்தாவோலை சம்புநாதர் ஆலயத்தில் நாளை புதன் கிழமை ருத்ர சனீஸ்வரர் கிர கதோஷ நிவர்த்தி அபிஷேகமும் ஹோமமும் நடைபெறவுள்ளது. அன்று காலை 9 மணிக்கு அபிஷேக கிரியைகள் நடைபெற்று ஹோமம் நடைபெறும். கிரியை நிகழ்வுகளை சிவஸ்ரீ. சு.சுந்தரராசக் குருக்கள், சிவஸ்ரீ சோ.நடராசக் குருக்கள் நிறைவு செய்துவைப்பர். (வ-28)

**சாவகச்சேரியில்**
20% தள்ளுபடியுடன்
**மாபெரும்**
**மலிவு விற்பனை**
இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பெண்களுக்கான அழகிய சல்வார், சாறி, கொட்டன் சாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள்.
**மரியம்'ஸ்**
பெண்களுக்கான பெருமை மிகுந்த ஆடையகம்
இடம் : "கலா, காமெண்ட்"
16 A, கண்டி வீதி, சாவகச்சேரி (கொமஸியல் வங்கி அருகில்)
திகதி : 20.12.2011 தொடக்கம் 31.12.2011 வரை.
நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
5000/= இற்கு அதிகமாக கொள்முதல் செய்தால்
800/= பெறுமதியான அழகிய With பிளஸ் கொட்டன் சாறி Free
தொடர்புகளுக்கு: 0777140844,0718034848
(11851)(3.6.7)

## மரண அறிவித்தல்

**இராமலிங்கம் நகுலேசபிள்ளை** சமாதான நீதிவான்(J.P)

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது வவுனியா தோணிக்கல்லை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சமாதான நீதி வான் (J.P) இராமலிங்கம் நகுலேசபிள்ளை 18.12.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்துரை - பொன்னாச்சி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, இராசம்மா, சிவக்கொழுந்து, பொன்னம்மா, சிந்தாமணி, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோ தரனும் நந்தினி, மகேந்திரகுமார், நந்தவதனி, காலஞ்சென்ற ஜெயக்கு மார் , ஜெயமாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயக்குமார், அகிலா, குணரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனும் பிரியதர்சன், சுதர்சன், கிருபாகரன், பிரதீபா, கார்த்தீபா, அபினன், அட்ஷயா, மதுஷியா, ஜெசிபா, ஜெனோபன், ஜெனனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.12.2011) திங்கட்கிழமை தோணிக்கல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோணிக்கல்,
வவுனியா.
(11853)(3.6.7)
தகவல்: மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு

கடந்த 20.11.2011 அன்று சிவப்பேறெய்திய
எமது செல்லப்புதல்வன்
பத்மலிங்கம்
சந்திரகாந்தன் (கண்ணன்)



அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (20.12.2011) செவ்வாய்க்கிழமை நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.
(11839)(6,7,8)
இ. பத்மலிங்கம்
குடும்பத்தினர்.

# 'இசட் ஸ்கோர்' முறையை புரிந்து கொள்ள கல்வி அமைச்சருக்கே முடியவில்லையாம்

கொழும்பு,டிசெ. 20

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள இசட் ஸ்கோர் முறையை தம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

புதிய, பழைய பாடவிதானங்களுக்கு அமைவான முறையில் இசட் ஸ்கோர் வெட்டுப் புள்ளி சராசரியை பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் தயாரித்துள்ளனர். இதில் சில குறைபாடுகள் காணப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இரண்டு பாட விதானங்களிலும் தோற்றிய மாணவர்களுக்கு சம சந்தர்ப்பம் வழங்கும் வகையில் இசட் ஸ்கோர் வெட்டுப் புள்ளி தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, இசட் ஸ்கோர் வெட்டுப் புள்ளிகளை சரியான முறையில் வெளியிடும் நோக்கில் கணித மேதைகளின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இசட் ஸ்கோர் வெட்டுப் புள்ளிகள் தொடர்பான சர்ச்சை காரணமாகவே உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. இசட் ஸ்கோர் வெட்டுப் புள்ளி தொடர்பான சர்ச்சைக்குத் தீர்வு காணப்பட்டதன் பின்னர் விரைவில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# பராக்கிரம சமுத்திரத்தின் 10 வான்கதவுகள் திறப்பு

கொழும்பு,டிசெ.20

தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழை காரணமாக பராக்கிரம சமுத்திரத்தின் 10 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக அதன் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். அதனால் வான்கதவுகளில் இருந்து செக்கனுக்கு 350 கன அளவு நீர் வெளியேற்றப்படுவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நீர் மகாவலி கங்கையில் சேர்வதால் மகாவலி கங்கையை அண்மித்த இரு பகுதிகளிலும் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மழை தொடர்ந்தும் நீடித்தால் பராக்கிரம சமுத்திரத்தின் வான் கதவுகள் அனைத்தையும் திறக்க வேண்டி ஏற்படும் என்று அதன் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் காலநிலை சீர்கேடு ஏற்பட்டுள்ளதால் மீனவர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று காலநிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ச)

# ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் பொன்சேகா விடுதலையாகலாம்

## உயர்மட்ட ராஜதந்திர தரப்பு தகவல்

கொழும்பு,டிசெ.20

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் எதிர்வரும் முதலாம் திகதி விடுதலை செய்யப்படலாம் என்று உயர்மட்ட ராஜதந்திர தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் ஜனநாயக தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் இடையில் இரண்டு மாதங்களாக நடைபெற்ற பேச்சு வெற்றியளித்ததை தொடர்ந்து, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு அரசிடம் பல தரப்புக்கள் கோரிக்கை விடுத்திருந்தன. சரத் பொன்சேகா, ஹைகோப் வழக்கில் இராணுவ நீதிமன்றம் வழங் கிய 30 மாத சிறைத் தண்டனை மற்றும் வெள்ளைக்கொடி வழக்கில் வழங்கப்பட்ட மூன்று வருட சிறை தண்டனையையும் அனுபவித்து வருகிறார்.

இந்த நிலையில், அரசியல் அமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தின் கீழ் எதிர்வரும் முதலாம் திகதி சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட உள்ளதாக கூறப்படுகிறது. (ச)

# நேரத்தையும் காலத்தையும் பணத்தையுமே விரயம் செய்துள்ளது நல்லிணக்க ஆணைக்குழு

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.20

நல்லிணக்க ஆணைக்குழு பணத்தை யும் நேரத்தையும் விரயமாக் கியுள்ளது என்று ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு யதார்த்தமான முறையில் தீர்வு காணும் நோக்கில் அரசு நல்லிண்ண ஆணைக் குழுவினை நியமிக்கவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்தம் முடிவடைந்த போதிலும் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு காணப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி எதிர்நோக்கி வந்த நெருக்கடி நிலைமைகளைத் திசை திருப்பும் நோக்கில் நல்லிணக்க ஆணைக் குழு நிறுவப் பட்டதாக ஜே.வி.பியின் அரசி யல் பீடம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

ஆயுதப் போராட்டம் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணிகளை ஆராய்ந்து அதற்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமென்ற நோக்கில் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு சக்திகளினால் அரசின் மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களிலிருந்து விடுபடும் நோக்கில்தான் அரசு இந்த ஆணைக்குழுவை நிறுவியது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தீர்வுத் திட்டமொன்றை எட்டுவதற்கான முனைப்பாக ஆணைக்குழுவை கருத முடியாது எனவும், குறிப்பிட்ட காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை மட்டுமே ஆணைக் குழு ஆராய்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



# முல்லைப் பெரியாறு அணை விவகாரம் கூடலூரில் மாபெரும் கண்டனப் பேரணி

## படையெடுத்தனர் 30 ஆயிரம் பேர்



சென்னை, டிசெ.20

இந்தியாவில் கேரளா மாநிலத்தில் உள்ள முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பான கோரிக்கைகளை வலியுறுத்தி அனைத்து சமுதாய மக்கள் மன்றம் மற்றும் முஸ்லிம் பொதுமக்கள் என 30 ஆயிரம் பேர் வரை தமிழ்நாட்டின் கூடலூரில் நேற்று முன்தினம் கண்டனப் பேரணி நடத்தினர்.

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசு, அரசியல் கட்சிகள் மற்றும் போராட்டக் குழுவினரின் நடவடிக்கைகளைக் கண்டித்து கூடலூரில் கடந்த 5 ஆம் திகதி முதல் கடையடைப்பு, ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், உருவப்பொம்மை எரிப்பு, கண்டனப் பேரணி ஆகிய போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கூடலூர், லோயர்கேம்ப் வழியாக கேரளத்தில் உள்ள குமுளிக்கு போக்கு வரத்து நிறுத்தப்பட்டுள்ளது. காவல்துறை தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதால், கூடலூர் வழியாக கேரள எல்லையை நோக்கி நடைபெறும் பேரணிகளை காவல்துறையினர் தடுத்து நகர எல்லைக்குள் போராட்டம் நடத்துமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

கூடலூரில் அனைத்து சமுதாய மக்கள் மன்றம் சார்பில் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு கண்டனப் பேரணி நடைபெற்றது. நகரின் முக்கிய வீதிகள் வழியாக நடைபெற்ற பேரணியில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முஸ்லிம் சமுதாயம் சார்பில் நடைபெற்ற பேரணியில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நண்பகல் 12 மணி வரை பேரணி நடை பெற்றது. கண்டனப் பேரணியை முன்னிட்டு கடைகள் அடைக்கப்பட்டன. (வ)

# தொலைத்தொடர்பு கோபுரங்கள் மீது மாவோயிஸ்ட்டுகள் தாக்குதல்

பெர்ஹாம்பூர், டிசெ.20


மாவோயிஸ்ட் தலைவர் கிஷன்ஜி கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரி வித்து, ஒரிசா மாநிலத்தில் ஐந்து தொலைத் தொடர்பு கோபுரங்கள் மீது தாக்குதல் நடத்திய மாவோயிஸ்ட்டுகள், ஐந்து மின்கல அறைகளைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

ஒரிசா கஞ்ஜம் மாவட்டம், கஜலாபாத் பகுதியில், மாவோயிஸ்ட்டுகள் கடந்த வெள்ளிக் கிழமை இரவு இரு தனியார் தொலைத்தொடர்புக் கோபுரங்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

அதுமட்டுமின்றி, அஷ்ரொ பந்த் பகுதியிலும் மூன்று தொலைத் தொடர்புக் கோபுரங்கள் மீது தாக்குதல் நடத்தினர். அங்கிருந்த மின்கல அறைகளைத் தீயிட்டு கொளுத்தினர். இந்தத் தாக்குதலில் மாவோயிஸ்ட் அமைப்பைச் சேர்ந்த, 20 பேர் ஈடுபட்டனர்.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை மேற் கொண்டனர். (வ)

# குலோத்துங்க சோழன் கால கல்வெட்டுகள் கண்டெடுப்பு



திருக்கோவிலூர், டிசெ.20

திருக்கோவிலூர் அருகே தென்பெண்ணை யாற்றின் கரையோரத்தில் வட திசையில் உள்ள விவசாய நிலத்தில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மன்னரான குலோத்துங்க சோழன் காலக் கல்வெட்டுகள் நேற்றுமுன் தினம் கண்டெடுக்கப்பட்டன.

திருக்கோவிலூரை அடுத்த கீழக்கொண்டூர் கிராமத்தைச் சேர்ந்த மார்க் என்பவருக்குச் சொந்தமான நிலத்தில், இந்தக்கல்வெட்டுகளை நதிக்கரை நாகரிக (தென் பெண்ணை) ஆய்வுக் குழுவினர் கண்டெடுத்துள்ளனர். இவைகளில் ஒன்று முதலாம் 5 ஆம் குலோத்துங்கச் சோழனின் ஆட்சிக் காலத்துக்குட்பட்டதாகும் (கி.பி.1075).

மற்றொரு பாறையில் கீறல் ஓவியங்களும், கல்வெட்டும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதில் லிங்கம், உடுக்கை, முக்கோணம், குன்று, சந்திரன், சூரியன், வெண்சாமரம் போன்ற பல குறியீடுகளும் அடங்கியுள்ளன.

# காஞ்சி வரதராஜப்பெருமாள் கோயிலில் வெடிகுண்டுப் புரளி

காஞ்சிபுரம், டிசெ.20

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக சென்னை மாநகர ஆணையாளர் அலுவலகத்துக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து காஞ்சி புரம் பொலிஸார் கோயிலில் வெடிகுண்டு நிபுணர் மற்றும் மோப்ப நாய்களுடன் பலத்த சோதனை செய்தனர். கோயிலின் நுழைவாயில் மற்றும் நுழைவாயிலை சுற்றி உள்ள இருசக்கர வாகனங்கள் போன்றவற்றில் சோதனை நடைபெற்றது.

மேலும் கோயிலின் பிரகாரம் உள்ளிட்ட பல இடங்களிலும் இந்த சோதனை நடைபெற்றது. இந்த சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என்று தெரியவந்தது. மேலும் கோவிலுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதுகுறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (வ)



ராஷ்ட்ரீய லோக் தளம் தலைவர் அஜீத் சிங்குக்கு மத்திய அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார் இந்திய ஜனாதிபதி பிரதிபா பாட்டீல்.

# பெங்களூரில் கடும் பனி; லண்டன் ஏர்வைஸ் சென்னையில் இறங்கியது

இந்திய மாநிலமான கர்நாடக தலைநகர் பெங்களூரில் கடும் பனிமூட்டம் காரணமாக பிரிட்டன் ஏர்வைஸ் விமானம் ஒன்று தரையிறங்க முடியாமல் சென்னைக்குத் திருப்பப்பட்டது.

பிரிட்டன் தலைநகர் லண்டனிலிருந்து வந்த பிரிட்டிஷ் ஏர்வைஸ் விமானம் ஒன்று நேற்றுக்காலை பெங்களூர் விமான நிலையத்தில் தரையிறங்க முற்பட்டது.

ஆனால் பெங்களூரில் கடும் பனி நிலவுவதால் விமானம் தரையிறங்க முடியாமல் சிறிது நேரம் வானில் வட்டமடித்தது. பின்னர் சென்னை சர்வதேச மீனம்பாக்கம் விமான நிலையத்துக்குத் திருப்பி விடப்பட்டது. (வ)

மீண்டும் உண்ணாவிரதப் போரில் ஈடுபட்டால்

# ஹசாரே, அவரது குழுவினருக்கு எச்.ஐ.வி. கிருமியைப் பரப்புவோம்

## கடிதம் மூலம் மிரட்டல்

டில்லி, டிசெ.20

வலுவான லோக்பால் பிரேரணையை வலியுறுத்தி உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தால், அன்னா ஹசாரேவுக்கும், அவரது ஆதரவாளர்களுக்கும் எச்.ஐ.வி வைரஸை பரப்பி விடுவோம் என்று எச்சரிக்கைக் கடிதம் ஒன்று கிடைத்துள்ளதாக டில்லி காவற்துறை தெரிவித்துள்ளதாக இந்தியச் செய்தித் தவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்தவாரம் அனுப்பப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில், ஹசாரே தனது போராட்டத்தில் தொடர்ந்து பிடிவாதமாக இருந்தால் அவர் மீது கொடிய வைரஸை பரப்பிவிடப் போவதாகவும், 500 பேர் கொண்ட குழு ஒன்று, இதற்காகவே உருவாக்கப்பட்டு எச்.ஐ.வி. வைரஸை சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள், எச்.ஐ.வி பரப்பும் மருந்து ஊசிகள் மூலம், ஹசாரேவின் போராட்டத்தில் கலந்து கொள்ளும் குறைந்தது 1000 பேருக்காவது இதனை பரப்பிவிடப் போவதாகவும் அந் தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளத் தெரிய வருகிறது.

இந்தக்கடிதம் யாரால் அனுப்பப்பட்டுள்ளது என்று உடனடியாக விசாரணைகளை முடக்கி விட்டிருப்பதாக டில்லி காவற்துறை தெரிவித்துள்ளது. (வ)

# இந்திய மீனவர்கள் பாகிஸ்தானில் கைது

எல்லை தாண்டி மீன் பிடித்ததற்காக இந்திய மீனவர்கள், பாகிஸ்தான் கடற்பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் எல்லையில் மீன்பிடித்த இந்திய மீனவர்கள் 12 பேரை கைது செய்துள்ளதாக அந்நாட்டு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். இவர்கள் கடந்த 16 ஆம் திகதி கைது செய்யப் பட்டதாகவும், அவர்களிடமிருந்து 2 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கைது செய்யப்பட்ட இந்திய மீன வர்கள் பாகிஸ்தான் கராச்சி மாநகர பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். எல்லை தாண்டி மீன்பிடித்த விடயத்தில் இந்திய மீனவர்கள் 300 இற்கும் அதிகமானோர் பாகிஸ்தான் சிறைச்சாலைகளில் வசிப்பதாகவும், பாகிஸ்தான் மீனவர்கள் 100 பேர் இந்திய சிறைச் சாலைகளில் வசிப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# வட மாநிலங்களில் கடும் குளிரால் 26 பேர் பலி

மீரட், டிசெ.20

வட மாநிலங்களில் கடும் குளிர் வாட்டி வதைக்கிறது. இது வரை 26 பேர் உயிரிழந்துள்ளனர். உத்தரப் பிரதேச மாநிலத்தில் இது வரை 6 பேர் உயிரிழந்துள்ளனர். மீரட்டில் உயர்மட்ட குளிர் மைனஸ் 2.2 செல்சியஸ் ஆக பதிவாகி உள்ளது.

கடும் குளிர் மற்றும் பனி நிலவுவதால் விமானம் மற்றும் ரெயில் போக்குவரத்துக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 14 விமானங்கள் தாமதமாக வந்தன. ரயில்வே நிலையத்தில் 30 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. 4 ரயில் களின் நேரம் மாற்றப்பட்டுள்ளது. 80 இற்கும் மேற்பட்ட ரயில்கள் காலதாமதமாக இயக்கப்படுகின்றன.

பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களிலும் இதே நிலைமை தான் காணப்படுகின்றது. (வ)

# இணைபிரியாத தோழி சசிகலாவை அ.தி.மு.கவிலிருந்து நீக்கினார் ஜெ.


சென்னை, டிசெ.20

அ.தி.மு.க. முக்கிய உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னுடைய உயிர்த் தோழியான சசிகலாவை அதிரடியாக நீக்கியுள்ளார்தமிழக முதல்வர் ஜெயலலிதா.

அதுமட்டுமின்றி மன்னார்குடி குடும்பத்தையே, முக்கியமான உறுப்பினர் பொறுப்பிலிருந்து கூண்டோடு நீக்கியுள்ளார் ஜெயலலிதா. சசிகலாவின் கணவர் நடராஜன், வளர்ப்பு மகன் சுதாகர் உட்பட திவாகரன், பாஸ்கரன், வெங்கடேஷன், ராமச்சந்திரன், ராஜராஜன், குலோத்துங்கன், ராவணன், மோகன் ஆகிய 12பேரை அ.தி.மு.க. அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து அதிரடியாக நீக்கியுள்ளார் ஜெயலலிதா.

இதேவேளை தற்போது தமிழகத்தில் உள்ள ஜெயலலிதா ஆட்சியில், சசிகலாவின் தலையீடு அதிமாக இருந்தால் இந்த அதிரடி முடிவை ஜெயலலிதா எடுத்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பாபர் மசூதி இடிப்புக்கு காங்கிரஸே காரணம்





இந்திய மாநிலமான உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதி, சிறுபான்மையினர் களுக்கு காங்கிரஸ் கட்சி துரோகம் செய்து விட்ட தாக குற்றம் சாட்டியுள்ளார். உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதி லக்னோவில் நடைபெற்ற பொது ்கூட்டம் ஒன்றில் இது குறித்து அவர் பேசியதாவது:

பாரதீய ஜனதாக் கட்சி மற்றும் ஆர்.எஸ்.எஸ் விடயங்களில் காங்கிரஸ் மென்மையான அணுகு முறையைக் கடைப்பிடித்ததால்தான் பாபர் மசூதி இடிக்கப்பட்டது என்று குற்றம் சாட்டியுள்ளார். (வ)

உதயன்
20 டிசெம்பர் 2011 செவ்வாய்க்கிழமை

# கண்ணீர் அஞ்சலி





## சுப்பையா தம்பையா

எங்கள் அன்பு நண்பன் தம்பையா சேந்தனின் ஆருயிர்த் தந்தை
சுப்பையா தம்பையா அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும்
நண்பனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது
ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**2000 A/L சாவகச்சேரி**
**இந்துவின் மைந்தர்கள்.**

# பிலிப்பைன்ஸில் இம்முறை மோசமான வெள்ளம் தப்பிப் பிழைத்தோரை தேடும்பணி துரிதம்

## சாவடைந்தோர் எண்ணிக்கை 652 ஆக உயர்வு

மணிலா,டிசெ.20

பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 652 பேராக அதிகரித்துள்ளது. இந்நிலையில், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிருடன் இருப்பவர்களைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸில் கடந்த இரு நாள்களுக்கு முன், வாஷி என்ற சூறாவளி தாக்கியது. அத்தோடு நாட்டின் பல பகுதிகளிலும் கனத்த மழை பெய்ததனால் ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இந்த வெள்ளத்தில் சிக்கி இதுவரை 652 பேர் பலியாகியுள்ளனர். 808 பேர் காணாமற் போய்விட்டனர். அத்துடன் நாட்டின் தென்பகுதியில் உள்ள மின்டானா தீவின் இலிகான் மற்றும் ககயான் டி ஓரோ ஆகிய துறைமுகங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.



இதற்கிடையில், கடற்கரையோரங்களில், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவர்கள் யாராவது உயிருடன் தப்பிப் பிழைத்திருக்கின்றனரா? எனத் தேடும் பணியில் கடற்படை ஈடுபட்டுள்ளது. ஆறுகளில் அடித்துச் செல்லப்பட்டோரை பாதுகாப்புப் படையினர் தீவிரமாகத் தேடி வருவதுடன் மீட்புப் பணிகள் முழுவீச்சில் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ஆண்டு தோறும் இந்தக் காலகட்டத்தில் பிலிப்பைன்ஸில் இதுபோன்ற சூறாவளியால் பாதிப்பு ஏற்படுவது வழக்கம் என்றாலும், இந்தமுறை சேதம் அதிகமாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



தாய்வான் நாட்டில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் அணிவகுப்பு தலைநகர் தைபேயில் நடைபெற்றது.

# ரஷ்ய எண்ணெய்க் கிணற்றில் மூழ்கி நிபுணர்கள் உட்பட 53 பேர் சாவு!

மொஸ்கோ,டிசெ.20

ரஷ்யாவில் எண்ணெய்க் கிணறு கடலில் மூழ்கி 53 பேர் உயிரிழந்துள்ளனர்.

ரஷ்யாவில் வடமேற்குப் பகுதியில் மூர்மானஸ் மாகாணத்தில் உள்ள கொல்ஸ்கயா என்ற இடத்தில் கடலுக்குள் எண்ணெய்க் கிணறு உள்ளது. இந்தக் கிணற்றில் எண்ணெய் சுத்திகரிப்புப் பணியில் 67 பேர் பணிபுரிந்தனர். அவர்களில் 53 பேர் நிபுணர்கள், 14 பேர் தொழிலாளர்கள். வழக்கம் போல் இவர்கள் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் ஏற்பட்ட கடும் புயலால் எண்ணெய்க் கிணற்றின் மேடை கடலுக்குள் வீழ்ந்தது. இதில் பணியில் இருந்த 67 பேரும் கடலில் மூழ்கினர். அவர்களில் 14 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர்.

இவர்கள் தவிர 4 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. 49 பேரை காணவில்லை. அவர்கள் அனைவரும் கடலில் மூழ்கி இறந்திருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. இந்த விபத்துக் குறித்து விசாரணை நடத்த அதிபர் திமிட்ரி மெத்வதேவ் உத்தரவிட்டுள்ளார். (ந)

# சுவிற்சர்லாந்தில் 'ஜோக்கீம்' புயல் பல்லாயிரக்கணக்கானோர் பாதிப்பு

ஜோக்கீம் என்ற புயல் சுவிற்சர்லாந்தை கடந்த வெள்ளிக்கிழமை கடுமையாகத் தாக்கியதில் மின்சாரம் தடைபட்டுள்ளது. இதனால் நாட்டின் மேற்குப் புறத்தின் சுமார் 600,000 வீடுகளுக்கு மின்சாரம் தடைபட்டுள்ளதால் பல்லாயிரக்கணக்கானோர் இருளில் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் புயலின் காரணமாகப் பிரிட்டன் கடற்கரையில் மால்டா நாட்டின் கப்பல் ஒன்று தரைதட்டி நிற்கின்றது. இதில் இருந்த எண்ணெய் சிறிது கடலில் கலந்துவிட்டது.மேலும் ரயில் தடம்புரண்டு மூவர் காயப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை மணிக்கு 133 கி.மீற்றர் வேகத்தில் புயல்காற்று வீசியதில் கடல் அலைகள் ஏழு மீற்றர் உயரத்துக்கு எழுந்தன. இதன் போதுமால்டாவின் எண்ணெய்க் கப்பலிலிருந்து சிந்திய எண்ணெயால் அதிக அளவில் பாதிப்பு இல்லை என்று அதிகாரிகள் கூறினர். அந்த எண்ணெய்க் கப்பலில் இருந்த மாலுமிகளை ஹெலிகொப்டர் மூலமாகக் காப்பாற்றினர்.

சுவிற்சர்லாந்தில் இந்தப் புயல் காரணமாக சில விமான நிலையங்களும் பாதிக்கப்பட்டன. ஜூரிச் மற்றும் பேசல் மல்ஹௌஸ் விமான நிலையங்களில் நூற்றுக்கணக்கான விமானப் போக்குவரத்துக்கள் ரத்துச் செய்யப்பட்டன. (ந)

**யூரோ மண்டல நிதிநெருக்கடிப் பிரச்சினை**

# ஜேர்மனியில் கோடிக்கணக்கானோர் வேலையை இழக்கும் அபாய நிலை

பேர்லின், டிசெ.20

யூரோ மண்டல நிதி நெருக்கடியால் ஜேர்மனியில் கோடிக்கணக்கானோர் தங்களது வேலைவாய்ப்பை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஜேர்மனி பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளுடன் ஏற்றுமதி வணிகத்தை மேற்கொள்வதால் யூரோ நெருக்கடி ஜேர்மனியின் ஏற்றுமதித் தொழிலைக் கடுமையாகப் பாதித்துள்ளது. இதனால் அங்கு பணியாற்றும் 4.4 மில்லியன் பேர் வேலையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று புரோக்னோஸ் கன்சல்ட்டிங் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜேர்மனின் ஏற்றுமதி வர்த்தகம் பெரும்பாலும் போர்த்துக்கல், கிரீஸ் மற்றும் ஸ்பெயின் நாடுகளுடன் நடைபெறுகின்றது. 1 மில்லியன் பணியாளர் இந்த நாடுகளுடன் நடைபெறும் ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிகின்றனர். ஏற்றுமதித் தொழில் நலிவடைவதால் ஜேர்மனியிலும் நிதி நெருக்கடியும் வேலையிழப்பும் ஏற்படும் என்பது உறுதியாகி உள்ளது.

எனினும் வெளிநாட்டு வியாபாரம் மற்றும் சேவைப் பணிகளின் ஜேர்மன் கூட்டமைப்பு தாங்கள் மிகவும் நம்பிக்கையோடு இருப்பதாகத் தெரிவித்துள்ளது. ஏனெனில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருந்தாலும் கூட ஏற்றுமதித் துறை வலுவாக இருப்பதாகவும் வேலைவாய்ப்புக்கு அபாயம் நேரிடாது என்றும் தெரிவித்துள்ளது. (ந)

# லிபிய மத்திய வங்கியை மேம்படுத்த ஐ.நா. அனுமதி

திரிபோலி, டிசெ.20

லிபிய மத்திய வங்கிக்கு வெளிநாட்டு முதலீடுகளைக் கவர மற்றும் மேம்படுத்துவதற்கு ஐ.நா பாதுகாப்பு சபை அனுமதி அளித்துள்ளது.

இதுகுறித்து லிபிய தேசிய வர்த்தக சபையின் தலைமை அதிகாரி முஸ்தபா ஜலில் தெரிவித்ததாவது;

லிபியாவில் பொருளாதார நிலைத்தன்மை ஏற்பட, அந்நிய முதலீட்டைப் பெற இத்தகைய அனுமதி இன்றியமையாதது என்றார். (ந)

# வட கொரிய அதிபர் கிம் ஜோங் மரணம்; புதிய அதிபரானார் மகன் கிம் ஜோங் -உன்

யோங்யாங், டிசெ.20

வடகொரியாவின் கம்யூனிஸ்ட் சர்வாதிகாரியான கிம் ஜோங்(வயது-69) நேற்று மாரடைப்பால் காலமானார். இதையடுத்து அவரது மகன் கிம் ஜோங்-உன் அதிபர் பதவிக்கு வந்துள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

வடகொரியா பிரிக்கப்பட்டு தனி நாடானது முதல், அந்த நாட்டை கிம் ஜோங்கின் தந்தையான கிம்-2-சுங்தான் ஆண்டார். அவர் 1994ஆம் ஆண்டு மரணமடைந்ததையடுத்து அவரது மகன் பதவிக்கு வந்தார். இப்போது 3ஆவது தலைமுறையைச் சேர்ந்த கிம் ஜோங்-உன் பதவிக்கு வந்துள்ளார்.



கடந்த ஆண்டு முதலே கிம் ஜோங்-உன் தலைமைப் பதவிக்காக தயார்படுத்தப்பட்டு வந்தார். அவருக்கு மிக முக்கிய ராணுவ, உள்துறை பதவிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்நிலையில் இப்போது அவரே அதிபராகிவிட்டார்.

# காரைப் பூட்டிவிட்டு தம்பதிகள் தற்கொலை

## கனடாவின் மொன்றியலில் சம்பவம்

கனடாவின் மொன்றியல் நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்து துப்பாக்கிக் காயங்களுடன் காணப்பட்ட இரண்டு உடல்களைத் துப்பறியும் நிபுணர்கள் மீட்டெடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக துப்பறியும் நிபுணர்கள் மேலும் ஆராய்ந்ததில் இறந்தவர்கள் தம்பதிகளாக இருக்கக்கூடும் என்று தெரியவந்தது.

இந்தச் சம்பவம் குறித்து செய்தியாளர்களிடம் பேட்டியளித்த காவல்துறையினர் மேலும் தெரிவித்ததாவது; இந்தச் சம்பவத்தில் வேறு யாரும் காரினுள் சென்று துப்பாக்கியால் சுட்டிருக்க வாய்ப்பு இல்லை. கார் உள்பக்கமாகப் பூட்டப்பட்டிருந்ததுடன். அவர்களது உடல்களின் அருகிலேயே துப்பாக்கி இருந்ததால் அவர்கள் தற்கொலை செய்திருக்கலாம் என்று கூறினர். (ந)

# தாய்வானின் இரு விமானங்களை அமெ. செப்பனிட்டு வழங்கியது

அமெரிக்காவிடமிருந்து எமது விமானப் படைக்கு இரு மேம்படுத்தப்பட்ட முன்னெச்சரிக்கை விமானங்கள் கிடைத்துள்ளன என்ற அந்த அறிவிப்பை தாய்வான் விமானப்படை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பு நெடுநாள் எதிரியான சீனாவை கோபமடைய வைத்துள்ளது.

அமெரிக்க விமானத் தளம் ஒன்றிலிருந்து இந்த இரு உ-2ஓ விமானங்கள் காவோஷியுங் நகரிலுள்ள தாய்வான் விமானப் படைத் தளத்துக்கு நேற்றுமுன்தினம் வந்திறங்கின.

2009இல் தாய்வான் அமெரிக்காவிடம் புதிய விமானங்களைக் கோரியது. ஆனால், சீனாவிடமிருந்து மிகக் கடுமையான எதிர்ப்பு வந்தது. அதனால் தாய்வானின் புதிய விமானக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க அமெரிக்கா விரும்பவில்லை. ஆனால், அரசியல் காரணங்களுக்காக உங்களுக்கு புதிய விமானங்களை வழங்க முடியாதுள்ளது. அதனால் உங்களிடமுள்ள இரு பழைய விமானங்களை முழுமையாகச் செப்பனிட்டு புத்தம் புதிய விமானம் போல மாற்றிக் கொடுக்கிறோம் என்று அமெரிக்கா உறுதிமொழி வழங்கியது. இந்தஉறுதிமொழியை அடுத்து தாய்வானிலிருந்து அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இரு விமானங்கள் தான் தற்போது புத்தம் புதிய விமானங்கள்போல திரும்பி வந்துள்ளன. இது தொடர்பாக சீனா ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் உட்பட எங்கேயும் எதிர்ப்புத் தெரிவிக்க முடியாது. காரணம், இவை புதிய விற்பனை விமானங்கள் அல்ல. (ந)

# தேசிய மட்டக் கரப்பந்தாட்டத்துக்கு ஆவரங்கால் இந்து, காங்கேசன் ஐக்கியம்

யாழ்ப்பாணம், டிசெ.20

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜனாதிபதி தங்கக்கிண்ணத்துக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான மாவட்டமட்டக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்று, தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இறுதியாட்டங்கள் இடம் பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (த-23)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அவை அமரர் செல்லையா வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ் மாவட்டத்தில் உள்ள அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்திய புருட்சல் உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள் பொறுப்பாசிரியர்களுடன். (த-86)

# தெல்லிப்பழை அணி வெற்றி



வலிவடக்கு, டிசெ.20

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் வலிகாமத்திற்கு உட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்திய நட்புக்கான 15 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய மென்பந்து கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டமொன்றில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றுள்ளது.

கல்வியங்காடு ஸ்ரீ ஞான பாஸ்கரோதயா விளையாட்டு கழக மைதானத்தில் கடந்த சனிக்கி ழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 14.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. சஜீபன் 26, சாந்த மோகன் 10 ஓட்டங்களைப் பெற்றார்கள்.

கோப்பாய் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த நிரஞ்சன் 3 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், கஜீபன் 3 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், பாஸ்கரன் 3 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு இரு விக்கெட்டுகளையும் சேவற் கொடியோர் 8 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

78 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கோப்பாய் பிரதேச செயலக அணி 13.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது.

நிரஞ்சன் 27 சுதர்சன் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சாந்தமோகன் 3 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் சஞ்சீவ் 3 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வல்லவக்குமரன் 3 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (த-86)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.20

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மின் ஒளியில் இடம் பெற்று வரும் 11 பேர் கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மருதநிலா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சன்சைன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

***

யாழ்ப்பாணம், டிசெ.20

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் மின் ஒளியில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு விழா

வலிவடக்கு, டிசெ.20

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் 50 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நிறைவு விழாவைக் கொண்டாட சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

50 ஆவது நிறைவு விழாவை மிகவும் சிறந்தமுறையில் கொண்டாடும் முகமாக பல வேறு நிகழ்வுகளை நடத்தும் முகமாக விழாக்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

விழாக்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

சங்கத்தின் தலைவர் - பி.முருகவேள், செயலாளர். எஸ்.சிவசங்கர், பொரு ளாளர். என்.றொபேசன் மற்றும் விழாக்குழுத் தலைவர் சண்.தயா என்,செயலாளர். கே.ஸ்ரீகாந்தா, எஸ். செல்வ ராசா, என்.நவரத்தின ராசா என். ரவீந்திரா. (த-86)

# பார்சிலோனாஅணி சம்பியன்

ஜப்பானில், எட்டாவது 'பிபா' கழக உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடர் நடந்தது. இதில் நேற்று நடந்த இறுதியாட்டத்தில் பார்சிலோனா, சான்டோஸ் அணிகள் மோதின.

ஆரம்பத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு, 17வது நிமிடத்தில் லியோனல் மெஸ்சி முதல் கோல் அடித்து நம்பிக்கை அளித்தார். தொடர்ந்து அசத்திய பார்சிலோனா அணியின் சேவி பேப்ரிகாஸ்ஆகியோர் தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர்.

இதற்கு சான்டோஸ் அணியினரால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் பார்சிலோனா அணி 3-0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியிலும், பார்சிலோனா வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, சான்டோஸ் அணியின் கோல் அடிக்கும் முயற்சி தடுக்கப்பட்டது. ஆட்டத்தின் 82ஆவது நிமிடத்தில், பார்சிலோனா நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்சி, மீண்டும் ஒரு கோல் அடித்தார்.

ஆட்டநேர முடிவில் பார்சிலோனா அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக (2009, 2011) சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. இத்தொடரின் சிறந்த வீரருக்கான 'தங்கப்பந்து' விருதை, பார்சிலோனா அணியின் லியோனல் மெஸ்சி தட்டிச் சென்றார்.

# கோல்டன் பிரதர்ஸ் வெற்றி

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மின் ஒளியில் இடம் பெற்று வரும் 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

இதில் கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# இந்தியா தோல்வி

இந்தியா, ஆர்ஜென்டினா, அயர்லாந்து, தென்னாபிரிக்கா ஆகிய நான்கு நாடுகள் பங்கேற்கும், பெண்களுக்கான ஹொக்கி தொடர் ஆர்ஜென்டினாவில் உள்ள பரானாவில் நடக்கிறது.

லீக் போட்டியில் ஆர்ஜென்டினாவுக்கு எதிராக, தோல்வி அடைந்த இந்திய அணி, அயர்லாந்தை வீழ்த்தி எழுச்சி கண்டது. நேற்று நடந்த கடைசி லீக் போட்டியில் தென்னாபிரிக்காவை சந்தித்தது. இதில் இந்திய அணி 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்து, இறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது.

# தியாகர யுத் இறுதியாட்டத்துக்கு



யாழ்ப்பாணம், டிசெ.20

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிரிவு III க்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டம் நேற்று முன்தினம் தாழ்வுப்பாடு ஆயர் இரயப்பு ஜோசப் ஆண்டகை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் கம்பஹா மாவட்ட தியாகர்யுத் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கம்பஹா மாவட்ட தியாகர யுத் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பள்ளிமுனை சென் லூசியா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதல்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் தத்தமது அணிகளுக்காகக் கோல்களைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு ஆட்டத்தை வேகப்படுத்திக் கொண்டனர்.

இதன் பயனாகப் பள்ளிமுனை சென் லூசியா விளையாட்டுக் கழக அணி தனது அணிக்காக முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டது.

இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. தியாகர யுத் விளையாட்டுக் கழக அணி இதன் போது தனது முதலாவது கோலைப் போட்டது.

முதல் பாதி ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது இரண்டு அணிகளும் சமநிலையில் இருந்தன.


இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது ஆட்டம் மேலும் வேகமடைந்தது.

இரண்டு அணியினரும் எதிர் அணியினரின் கோல்பரப்புக்குள் மாறிமாறி நுழைந்து தாக்குதல் நடத்தினர். எனினும் அந்த முயற்சிகள் எவையும் பயனளிக்கவில்லை.

ஆட்ட முடிவில் இரண்டு அணியினரும்தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் கம்பஹா மாவட்ட தியாகர யுத் விளையாட்டுக் கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி யாட்டத்துக்கு தகுதி பெற்றது. (த-23)

# வங்கம் மீது பாய்கிறது பாகிஸ்தான்



''வை திஸ் கொலை வெறி?''
விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியில் பங்களாதேஷ் வீரர்கள்

தனது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் பாகிஸ்தான் அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில், தௌபீக் உமரின் சிறப்பான சதத்தின் உதவியுடன் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 292 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

பங்களாதேஷூக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று தொடரில் முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் மிர்பூரில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.


அதற்கமைய துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல இலக்குகளை யும் இழந்து 338 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் சகிப் அல் ஹசன் 144, நவீஸ் 97, முஷ்பிகுர் ரகிம் 40 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்திருந்தனர். பந்து வீச்சில் உமர் குல், ஷீமா தலா 3, அஜ்மல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப் பெடுத்தாட தொடங்கிய பாகிஸ்தான் அணி, நேற்று முன்தினம் ஆட்டநேர நிறைவு வரையில் தௌபீக் உமர்-அஷார் அலி ஆகியோரின் சிறப்பான இணைப்பின் உதவியுடன் ஒரு இலக்கினை மாத்திரம் இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் தௌபீக் உமர் 44, அஷார் அலி 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

வலுவான நிலையில் இருந்த பாகிஸ்தான் அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்தது. தௌபீக் உமர் ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் அஷார் அலியும் சற்றும் சளைக்காமல் ஆட இணைப்பாட்டம் 100 ஓட்டங்களைத் தாண்டியது. இறுதியில் அணி 150 ஓட்டங்களை எ ட்டிய நிலையில் அஷார் அலி 57 ஓட்டங்களுடன் சகிப் அல் ஹசனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் நுழைந்த யுனிஸ்கான், தௌபீக் உமருடன் இணைந்து துடுப் பெடுத்தாடினார். சிறப் பாக ஆடிய தௌபீக் உமர் தனது 7 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். பங்களாதேஷின் வியூகங்களை தகர்த்து பாகிஸ்தான் மிக இலகுவாக ஓட்டங்களைக் குவித்தது. மூன்றாவது இலக்குக்காக 95 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் தௌபீக் உமர் 130 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களம் புகுந்த அணித்தலைவர் மிஷ்பா, யுனிஸ்கானுடன் இணைந்து துடுப்பெடுத்தாடினார். நேற்றைய ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி 3 இலக்குகளை பறிகொடுத்து 292 ஓட்டங்களைக் குவித்துள்ளது. களத்தில் யுனிஸ் கான் 48, மிஸ்பா 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். (ங-15)



'சொல்லியடிப்பேனடா! அடிச்சனென்டால் நெத்தியடி தானடா!' சதமடித்த தௌபீக் உமர்

## திட்டம் பலிக்காது



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சச்சின் உட்பட இந்திய துடுப்பாட்ட வீரர்களை வீழ்த்த, கிரேக் சப்பல் வகுக்கும் திட்டம் பலிக்காது, என்று கங்குலி தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இதில், இந்திய அணியின் 'மாஸ்டர் பட்ஸ் மன்' சச்சின் தனது 100 ஆவது சர்வதேச சதம் அடிக்க காத் திருக்கிறார்.

அத்துடன் சச்சின் மற்றும் இந்தியாவின் முன்னணி துடுப்பாட்ட வீர்கள் தொடர்பான ஆஸ்திரேலிய வீரர் களின் அச்சத்தை போக்க, கிரேக் சப்பலை பயன் படுத்த ஆஸ்திரேலிய பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் முடிவு செய்துள்ளார். ஏற்கனவே இந்திய பயிற்சியா ளராக இருந்த சப்பல் அனுபவ வீரர்களான சச்சின், சேவாக், டிராவிட் போன்றவர்களின் பலம், பலவீனம் அறிந்தவர்.

முதல் டெஸ்ட் ஆட்டம் (டிசெம்பர் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை) தொடங்கும் முன்பு இவர், சக ஆஸ்திரேலிய வீரர்களிடம் உரை நிகழ்த்த திட்டமிட்டுள்ளார். அப்போது இந்திய துடுப்பாட்ட வீரர்களின் ஆட்ட முறை பற்றி எடுத்துக் கூறுவார் என்று தெரிகிறது. இதன் மூலம் சச்சினின் இலக்கை எளிதில் வீழ்த்தி விடலாம் என்று ஆஸ்திரேலியா எண்ணுகிறது.

இது குறித்து கங்குலி கூறியதாவது:

கடந்த 2008 இல் இந்தியா வந்த ஆஸ்திரேலிய அணி, டெஸ்ட் தொடரை 2-0 என்று பரிதாபமாக இழந்தது. அப்போது ஆஸ்திரேலிய அணியின் நிர்வாகிகளில் ஒருவராக கிரேக் சப்பலும் இருந்தார். எனவே, இவரது உதவி ஆஸ்திரேலிய அணிக்கு இந்த முறையும் பயன் அளிக்காது. இவரது திட்டமும் எடுபடாது.

இந்திய அணியின் சர்ச்சைக்குரிய பயிற்சியாளராக மூன்று ஆண்டுகள்(2005-07) சப்பல் இருந்தார். இவரை பயிற்சியாளராக தேர்வு செய்தது எனது தவறு தான். தனிப்பட்ட முறையில் வீரர்களை பழிவாங்கும் எண்ணத்துடன் செயல்பட்டார். சச்சின், லக்ஸ்மன், சகீர், ஹர்பஜன் போன்ற உலகத் தரம் வாய்ந்த வீரர்களுக்கு எதிரானரவாக இருந்தார். அணியின் எதிர்காலம் தொடர்பாக எந்த ஒரு தொலைநோக்கு பார்வையும் அவரிடம் காணப்படவில்லை. தொடர்ந்து தவறு மேல் தவறு செய்தார். ஆனாலும், அப்போதைய அணித்தலைவர் டிராவிட்டுக்கு அவரது தவறை தடுத்து நிறுத்தும் துணிச்சல் இல்லை - என்றார். (ங-15)

## தவறிய சாய்னாவின் இலக்கு



உலக சூப்பர் பட்மின்ரன் தொடரில், சம்பியன் பட்டத்தை கைப்பற்ற தவறினார் இந்தியாவின் சாய்னா நேவல். நேற்று முன்தினம் நடந்த இறுதியில் தோல்வி அடைந்த இவர், இரண்டாவது இடம் பிடித்தார்.

உலக சூப்பர் பட்மின்ரன் தொடர் சீனாவில் உள்ள லிசோவ் நகரில் நடந்தது.

நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் இறுதியில், இந்தியாவின் சாய்னா நேவல், உலகின் முதல்தர வீராங்கனையான சீனாவின் இகான் வாங்கை எதிர்கொண்டார்.

முதல் செட்டை 21-18 எனக் கைப்பற்றிய சாய்னா, இரண்டாவது செட்டை 13-21 எனக் கோட்டை விட்டார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் மீண்டும் ஏமாற்றிய சாய்னா 13-21 என்று இழந்தார். இறுதியில் சாய்னா 21-18, 13-21, 13-21 என்ற செட் கணக்கில் தோல்வி அடைய, சம்பியன் கனவு தகர்ந்தது. இகான் வாங், சம்பியன் பட்டத்தை வென்றார். இது இந்த ஆண்டு இகான் வாங் கைப்பற்றிய 6 ஆவது பட்டம். (15)

## ஓட்டம் ஒன்று தேவை

*இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் மஹெலா ஜெயவர்த்தன.*

*முன்னாள் அணித்தலைவரான அவர் தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் தனது 10 ஆயிரம் ஓட்டங்களைத் தவறவிட்டார்.*

*ஜெயவர்த்தன முதல் இன்னிங்சில் 30 ஓட்டங்கள் எடுத்தார். 2 ஆவது இன்னிங்சில் 16 ஓட்டங்கள் எடுத்தால் டெஸ்ட் போட்டியில் 10 ஆயிரம் ஓட்டங்களை எடுத்து சாதனை புரிந்து இருப்பார். ஆனால் துரதிரஷ்டவசமாக 16 ஆவது ஓட்டம் எடுக்க முற்படுகையில் ஆட்டமிழந்தார்.*

*இதனால் ஜெயவர்த்தன 10 ஆயிரம் ஓட்டத்தை தொட முடியாமல் போனது. 126 டெஸ்டில் விளையாடிய அவர் 9999 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சராசரி 51.01 ஆகும்.*

*அதிகபட்சமாக 374 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 29 சதமும், 40 அரைச் சதமும் அடித்துள்ளார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக எதிர்வரும் 26 ஆம் திகதி தொடங்கும் 2 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் 10 ஆயிரம் ஓட்டங்களை எடுத்த இலங்கையின் முதல் வீரர் என்ற சாதனையை ஜெயவர்த்தன படைப்பார். உலக அளவில் 9 ஆவது வீரர் என்ற பெருமையை பெறுவார்.*

*டெண்டுல்கர்(15,183), டிராவிட்(13,094), பொண்டிங்(12, 656), கலிஸ்(12,036), லாரா(11,953), அலன் போர்டர்(11,174), ஸ்டீவ் வோவ்(10,927), கவாஸ்கர்(10,122) ஆகியோர் 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்த வீரர்கள் ஆவார்கள்.*

*(ங-15)*

## வைத்தியசாலை விடுதிகள் கையளிப்பு

தென்மராட்சி, டிசெ.20

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐரிஸ் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றில் 154 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரு மாடி விடுதிகள் இரண்டு மற்றும் வைத்திய அதிகாரிகளுக்கான வதிவிடங்கள் ஆகியவை நேற்று உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளைத் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பின்லாந்து செஞ்சிலுவைச் சங்க செயலாளர் நாயகம் செல்வி கிறிஸ்ரினா ஐரிஸ் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி செல்வி சுசன்னா ஆகியோர் இதனைக் கையளித்தனர். (ங-207)

## கண்ணீர் அஞ்சலி

### T.N போஜன்J.P

உதவிப் பிரதம ஆணையாளர் (இலங்கை சாரணர் சங்கம்)

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் சாரண சமூகத்துக்கும் எமது சாரண சமூகம் சார்ந்த ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

"அருட்பெரும்ஜோதி தனிப்பெரும் கருணை".

கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கம்.

## ஐந்தாம் ஆண்டு நினைவாக!!



அமரர்

### செல்லையா வீரசிங்கம்

(முன்னைநாள் முகாமையாளர், திருநெல்வேலி ப.நோ.கூட்டுறவுச் சங்கம்)

திதி:- துவாதசி 20.12.2011

அன்பு காட்டி எமை
அரவணைத்து
மாண்புடன் வாழ வழி
சமைத்த எங்கள்
அன்புத் தெய்வத்தின்
ஆன்மா சாந்திபெற
எல்லாம் வல்ல மீனாட்சி
அம்மன் பாதார
விந்தங்களில்
மலர்கொண்டு
வணங்குகின்றோம்.

198/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### நவரத்தினம் ஜெயமோகன்

இல-01, கல்மடுநகர், கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் ஜெயமோகன் நேற்றுமுன்தினம் (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் நவரத்தினம்- புஸ்பவதி தம்பதியரின் அன்பு மகனும், ஹேமலதா (லதா-கல்மடுநகர்), ஜெயவதனன்(ஜெகன்-கல்மடுநகர்), சந்திரிக்கா (உயர்தர மாணவி, கிளி.இராமநாதபுரம் ம.வி), நிவேதிகா (மாணவி, கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவநேசனின் அன்பு மைத்துனரும், டிலக்சி (வாணி) யின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமநாதபுரம் பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.-01, கல்மடுநகர்,
19 ஏக்கர் திட்டம், கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

### பஞ்சலிங்கம் சிவசோதி

[illegible]டுவில் கிழக்கு, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், [illegible]வடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சலிங்கம் சிவசோதி நேற்று (19.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு- செல்லாச்சி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற பஞ்சலிங்கத்தின் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) அன்பு மனைவியும், துஷ்யந்தி, ஸ்ரீராம், ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 3 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.

## மீசாலை டச்சு வீதியில் 'மக்கி' மழையில் கரைந்து போக்குவரத்துக்குச் சிரமம்

தென்மராட்சி, டிசெ.20

மழை காலத்தில் வீதியில் பறிக்கப்பட்ட ''மக்கி'' குவியல்களால் மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மீசாலை வடக்கு, டச்சு வீதியிலிருந்து வயல்கரைக்குச் செல்லும் ஊரெல்லைத் தெருவில் வசிக்கும் மக்களே சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வீதி புணரமைப்புக்கென சாவகச்சேரி பிரதேச சபையினால் வாகனங்களில் கொண்டு வரப்பட்டு மக்கி வீதியில் பல இடங்களில் பறிக்கப்பட்டுள்ளன. மழை காலம் ஆரம்பித்துள்ளதால் மக்கி பரவும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த மக்கி கரைந்து வீதியெங்கும் பரவிக் காணப்படுவதால் மக்கள் நடந்து செல்லவோ வாகனங்களில் பயனிக்கவோ முடியாமல் உள்ளது. இந்த வீதியில் 40க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் இந்த வீதியில் நடமாடுவதாகவும், வயல்கள் பார்க்க இவ் வீதியைப் பயன்படுத்திய மக்கள் வேறு வீதிகள் ஊடாகச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## கட்டைக்காட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத் தில் ஜே/433 கிராம அலுவலர் பிரிவில் மட்டும் இன்று பிற் பகல் 3 மணிக்கு இந்த ஒத்திகை இடம்பெறவுள்ளதாக யாழ்.மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித் துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் இந்தச் சுனாமி ஒத்திகை முன்னெடுக்கப்பட வுள்ளதாகவும் இது ஒரு ஒத்தி கைச் செயற்பாடு என்பதால் பொதுமக்கள் குழப்படைய த் தேவையில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-15)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இரண்டு வயதுக் குழந்தை ஒன்றும், பல்கலைக் கழக மாணவன் ஒருவனும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் மீண்டும் டெங்குநோய் தீவிரம் பெற்றுள்ளதை அடுத்து பொது மக்கள் அதுகுறித்து விழிப் போடு செயற்பட்டு நோயில் இருந்து காத்துக்கொள்ளுமாறு வைத்திய நிபுணர்கள் அறிவுறுத் தியுள்ளனர். குறிப்பாக வெளி மாவட்டங்களுக்குச் சென்று வருபவர்கள் தமக்கு காய்ச்சல் ஏற்பட்டால் தாமதிக்காது உடன டியாக வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்வதுடன் டெங்கு நோய் தொடர்பான இரத்தப்பரிசோதனையையும் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மழைநீர் தேங்கி நிற்கக் கூடிய பொருள்களை சுற்றுச்சூழலில் இருந்து அகற்ற வேண்டும் என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ங-15)

## சிறுதொகைப் பணம் தவறிவிட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் சிறு தொகைப் பணம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே- 0754164564

## GROUP CLASSES

பௌதிகவியல்
By.M. கருணாநிதி
ஆரம்பம்: 21.12.2011 புதன் 4 pm
மஞ்சவனப்பதி, கொக்குவில்.
தொ.பே- 0776183064

## தவறிவிட்டது

கல்லாரை, மல்லாகத்தைச் சேர்ந்த தம்பித்துரை தயாபரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (720474204V) வாகன அனுமதிப்பத்திரம், முகாம் அடையாள அட்டை, மற்றும் பணத் தோகை என்பன கல்லாரைக்கும் மல்லாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு- 0772529062, 0770579539.

## பொதுமக்கள் பார்வைக்கு

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 168ஆம் பிரிவிற்கிணங்க வேலணை பிரதேச சபையின் 2012ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் தயாரிக்கப்பட்டு 20.12.2011 திகதி தொடக்கம் 26.12.2011 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதனை அறியத் தருகின்றோம்.

19.12.2011 சி.சிவராசா, தவிசாளர், வேலணை பிரதேச சபை.

## 31ஆம் நாள் நினைவலைகள்



அமரர்

### ஆறுமுகம் குமாரசாமி

கடந்த 20.11.2011 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (20.12.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன்கோயில் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 03.02.1943

உதிர்வு 20.11.2011

அமரர்

### கதிரவேலு பரமானந்தம்

எம் குடும்பத்தின் தீபமாய்
அயலவரின் நண்பனாய்
பண்பாலே உயர்ந்தவராய் வாழ்ந்து
கணப்பொழுதில் எமைவிட்டுப் பிரிந்தனையோ?
நின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (20.12.2011) செவ்வாய்க்கிழமை 12 மணியளவில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

54/21, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 20 * 09 * 1932

மறைவு 20 * 11 * 2011



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் நாகநாதி தம்பாப்பிள்ளை

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர், அச்சுவேலி)

கடந்த மாதம் 20.11.2011 அன்று இறைவனடி
சேர்ந்த எங்கள் குடும்பத்தின் சுடரே!
ஏணியாக நின்று எங்களை ஏற்றம் காண வைத்த தந்தையே!
அம்மாவின் பிரிவுத் துயர் ஆறும் முன்னே!
உங்கள் பிரிவுத் துயர் எங்களை வாட்டுதய்யா!
"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக்கடை"
நல்ல பண்புடன் மனைவி அமைந்த வாழ்க்கையில்
எல்லாம் இருக்கும். அப்படியொரு மனைவி இல்லாத வாழ்வில்
எதுவும் இல்லையென்று மானிட வாழ்வை வெறுத்தீர்களோ!
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஐயாவே!

இன்று (20.12.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் சுன்னாகம் கிழக்கில் உள்ள அன்னாரின் சிந்தாமணி பவன இல்லத்தில் இடம்பெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"சிந்தாமணி பவனம்"
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

# 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனம்

கொழும்பு, டிசெ.20

வேலையற்றிருக்கும் 15 ஆயிரம் பட்டதாரிகள் எதிர் வரும் சில மாதங்களுக்குள் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று ஹம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

நாட்டின் சகல மாவட்டங்களைச் சேர்ந்த வேலையற்றபட்டதாரிகளுக்கும் மாவட்டச் செயலாளர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலர் அலுவலகங்களில் நேர்முகப் பரீட்சைகளை நடத்துவதன் மூலம் தகுதியுடையோர் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

வேலையற்ற 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்காகவும் சம்பளக் கொடுப்பனவுக்காகவும் நிதி ஒதுக்கீடு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நாமல் தெரிவித்துள்ளார். (ஒ-ஞ)

## கொடிகாமத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் வாயைப் பொத்தியதால், அவ ளால் உதவி கோரி சத்தமிடமுடியவில்லை.

தூக்கிச் சென்ற மர்மமனிதன் சிறுமியை, அவளின் வீட்டின் அருகிலுள்ள பற்றை ஒன்றுக்குள் வைத்து வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளான். இதன்பின்பு சிறுமியை அப்படியே விட்டு விட்டுச் சென்றுள்ளான். அதிகாலை சிறுமியைக் காணாது பெற்றோர் தேடியபோது அருகில் உள்ள பற்றைக்குள் இருந்து அவள் அழும் சத்தம் கேட்டது. அங்கே சென்று பார்த்தபோது அழுதபடி பயத்தால் உறைந்த நிலையில் சிறுமி காணப்பட்டாள்.

சிறுமிக்கு கடுமையான இரத்தப் போக்கு ஏற்பட்டிருந்ததால் அவள் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தபோதும் நேற்று மதியம்வரை பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ங-15)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால், அதன் 10 வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் இன்னும் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மிகப்பெரிய குளமான முத்துஐயன்கட்டுக் குளத்தின் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படுவதால் பேராற்றங் கரையில் வாழும் குடும்பங்கள் வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

குளத்திலிருந்து வெளியேற்றப்படும் மேலதிக நீர் பேராற்றில் கலக்கும் போது வெள்ள அபாயம் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளமையால் பேராற்றங் கரையில் வசிக்கும் சுமார் 200 குடும்பங்களை அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுத்துள்ளது.

மேலும் வன்னியில் பல பகுதிகளில் வீதிகளை ஊடறுத்து, காட்டாறுபோல் வெள்ளம் பாய்ந்தோடிச் செல்வதால் அந்தப் பகுதிகளுக்கான போக்குவரத்துகளும் தடைப்பட்டுள்ளன.

பல வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். 2,800 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரம் பேர் நேற்றிரவுவரை இடம்பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்ந்தவர்களில் அனேகர் பேரிடர் முகாமைத்துவப் பிரிவால் அமைக்கப்பட்டுள்ள எட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் பொதுமண்டபங்களிலும், ஆலயங்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு சமைத்த உணவு மற்றும் பாய், லாம்பு என்பவற்றை வழங்க கிளிநொச்சி மாவட்ட பேரிடர் முகாமைத்துவப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

தொடர்ந்தும் கடும் மழை பெய்துவருவதால் வெள்ளத்தால் இன்னும் மோசமான பாதிப்புகள் ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ங-6-426)

## ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பார்ப்புகளும் தவிடுபொடியாகின. உட்கட்சிப்பூசல் வலுத்து தலைமைத்துவப் பதவி உட்பட கட்சியின் முக்கிய பதவிகளுக்கு உறுப்பினர்களுக்கு இடையே பலத்த போட்டி நிலவிய பரபரப்பான சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது கட்சியின் பதவிகளுக்கு பொது இணக்கப்பாட்டுடன் உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய முடியாதநிலை ஏற்பட்டதையடுத்து, நேற்று இரகசிய வாக்கெடுப்பு மூலம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் இரண்டாவது நாளாகவும் நேற்று பலத்த சர்ச்சைகளுக்கு மத்தியில் கூடியது.

நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமான செயற்குழுக் கூட்டத்தில் சூடான வாதப் பிரதிவாதங்கள் அனல் கக்கின.

பல மணித்தியாலங்கள் கலந்துரையாடிய பின்னர்,உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

செயற்குழு உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என 94 பேர் வாக்கெடுப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போதே,பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவைப்பெற்று மீண்டும் தலைவராக ரணில் விக்கிரமசிங்க தெரிவுசெய்யப்பட்டார்.அத்துடன், பிரதித் தலைவராக சஜித் பிரேமதாஸவும், தேசிய அமைப்பாளராக தயா கமகேயும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ரணில் ,கரு ஆகியோரின் ஆதரவாளர்கள் ஸ்ரீ கொத்தாவுக்கு வெளியே பெறுபேறுகளை அறிவதற்கு ஆவலுடன் காத்திருந்த நிலையில் வாக்கெடுப்பு முடிவுகள் அறிவிக்கப்பட்டதையடுத்து, ரணில் ஆதரவாளர்கள் குதூகலித்தனர். கரு ஆதரவாளர்கள் சோகத்தில் ஆழ்ந்தனர்.

தலைமைத்துப் பதவிக்கு போட்டியிட்ட ரணிலுக்கு 68வாக்குகளும், கரு ஜயசூரியவுக்கு 26 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. இதனடிப்படையில் 42 மேலதிக வாக்குகளால் ரணில் வெற்றிக் கனியை ருசித்துள்ளார்.

பிரதித் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட சஜித் பிரேமதாஸவுக்கு 50 வாக்குகளும், ரவிகருணாநாயக்கவுக்கு 42வாக்குகளும் கிடைத்துள்ளன.

தேசிய அமைப்பாளர் பதவிக்குப் போட்டியிட்ட தயா கமகே 56 வாக்குகளையும், தயாசிறி ஜயசேகர 36 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

கரு தரப்பிலிருந்து,பிரதித் தலைவர் போட்டிக்கு சஜித்தும், தேசிய அமைப்பாளர் போட்டிக்கு தயாசிறியும் களமிறக்கப்பட்டனர்.

அதேபோன்று, ரணில் தரப்பிலிருந்து பிரதித் தலைவர் பதவிக்கு ரவியும், தேசிய அமைப்பாளர் பதவிக்கு தயா கமகேயும் களமிறக்கப்பட்டிருந்தனர்.

கட்சியின் தவிசாளர், பிரதித் தவிசாளர் ஆகிய பதவிகளுக்கு நேற்று முன்தினம் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தின்போது வாக்கெடுப்பின்றி உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## ஆழியவளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியிலிருந்து கரை நோக்கி வீசிய மினி சூறாவளியால் கடற்கரையை அண்மித்த 7 வீடுகள், பொதுமண்டபம் மற்றும் பாடசாலை ஒன்றில் தற் காலிகமாக போடப்பட்ட கொட்டில்கள் என்பன சேதமாகின . வீடுகளின் கூரைகள் சுமார் 500 மீற்றர் தூரம் வரை பறந்து சென்றன. சுவர்களும் இடிந்து வீழ்ந்துள்ளன. மினி சூறாவளியை அடுத்து 30க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வேறு பகுதிக்கு இடம்பெயர்ந்து சென் றுள்ளன. (ஒ-323-190)

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது.நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற இந்தப் பேச்சில் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவும், அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தலைமையில் அரச தரப்பு பேச்சுக் குழுவும் கலந்து கொண்டன.

நேற்றைய பேச்சு குறித்து 'உதயனு'க்கு கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கூறியவை வருமாறு-

காணி அதிகாரம் குறித்தே இன்றைய (நேற்றைய) பேச்சிலும் கலந்துரையாடப்பட்டது.

காணி விவகாரம் தொடர்பில் ஓர் உறுதியான முடிவு எட்டப்படாத நிலையிலேயே இன்றைய பேச்சும் நிறைவடைந்தது.

அடுத்த கட்டப் பேச்சுக்கான திகதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாளை (இன்று) தீர்மானிக்கும் - என்றார். (ஒ-சி)

## ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2009 அன்று விடுத்த கூட்டறிக்கையில், இலங்கை ஏற்றுக்கொண்ட சர்வதேச கடப்பாடுகளுக்கு அமைவாக சர்வதேச மனித உரிமை நியமங்களுக்குத் தக்க வகையில் உள்நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவுமான தனது உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி இருந்தது.

இந்தக் கூட்டறிக்கையில், சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களும் மனிதாபிமானம் என்பன மீறப்பட்டமை தொடர்பில் பொறுப்புக்கூறப்பட வேண்டியதன் அவசியத்தை ஐ.நா. பொதுச் செயலாளர் கோடிட்டுக் காட்டியிருந்தார். ஆனால் இது தொடர்பான மனக்குறைகளைத் தீர்ப்பதில் அரசு தனது பொறுப்பைச் சரிவர நிறைவேற்றி இருக்கவில்லை.

ஒரு வருடம் கடந்து 15 மே 2010 அன்று நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமித்தார். அத்தோடு பொறுப்புக்கூறுதலை இந்த ஆணைக்குழு செய்யும் என்றும் உலகுக்கு எடுத்துக் கூறினார்.

### தோல்வி கண்டுள்ளது ஆணைக்குழு அறிக்கை

ஆனால், பிரச்சினைகளுக்குப் பொறுப்புக் கூறுவதில் வினைத்திறனுடனும் அர்த்தமுள்ள வகையிலும் செயற்படுவதில் ஆணைக்குழுவின் அறிக்கை வெளிப்படையாகவே தோல்வி கண்டுள்ளது.

ஆணைக்குழுவின் முன்பாக ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது சாட்சியங்களை வழங்கினர். இவர்கள் அனைவரும் போரால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள். உண்மையின் அடிப்படையில் பிரச்சினைகளுக்குப் பொறுப்புக் கூறப்படும் என்றும் நீதி கிடைக்கும் என்றும் எதிர்பார்த்ததே .

அவர்கள் தமது அனுபவங்களை ஆணைக்குழு முன்பாகக் கொட்டினார்கள். பாதிக்கப்பட்ட அந்த மக்களின் கௌரவத்தை ஆணைக்குழுவின் முடிவுகள் மதிக்கத் தவறியுள்ளன.

போரின் இறுதிக் கட்டத்தில் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும். மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினர் என்றும் திட்டமிட்டு மக்களை இலக்கு வைத்தனர் என்றும் விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்புவதைக் குறைப்பதற்காக வன்னியில் இருந்த மக்களின் எண்ணிக்கையைத் வேண்டுமென்றே குறைத்து மதிப்பிட்டமை, வேண்டுமென்றே அல்லது எச்சரிக்கைக் குறைவுடன் பொதுமக்களின் உயிரிகளை ஆபத்துக்கு உள்ளாக்கியமை (பாதுகாப்பு வலயங்களில் இருந்த மக்களின் உயிர்களை), பொதுமக்களுக்குரிய இடங்களான வைத்தியசாலைகள் உள்ளிட்ட இடங்களை இலக்கு வைத்தமை, ஆயுதங்களின்றிச் சரணடைந்தவர்களைப் படுகொலை செய்தமை மற்றும் அவ்வாறானவர்கள் காணாமல்போனமைக்குக் காரணமாக இருந்தமை போன்ற குற்றங்கள் அரசு மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்தப் பிரச்சினைகள் அனைத்துக்கும் அரசு பொறுப்புாளி அல்ல என்று நல்லிணக்க ஆணைக்குழு முடிவு செய்திருக்கிறது. பதிலாக, சம்பவங்களுக்கு தனிப்பட்ட சிப்பாய்களையே விமர்சிக்கிறது. மேலும் நடந்திருக்கக் கூடிய சம்பவங்களும் ஒதுக்கித் தள்ளிவிடக் கூடியவை என்று அது அனுமானித்திருக்கிறது. உதாரணமாக, அரச படைகளிடம் சரணடைந்ததன் காரணமாகப் பெரும் எண்ணிக்கையானவர்கள் காணாமல்போய் இருக்கையில், ஒரு சில சம்பவங்களே அப்படி நடந்தன என்று கூறியதன் மூலம் அந்த விடயத்தை அப்புறப்படுத்தி விட்டது ஆணைக்குழு. ஒரு திட்டமிட்ட நடவடிக்கை மூலமே அத்தகைய குற்றங்கள் நிகழ்ந்தன என்பதை நீதியற்ற வகையில் ஆணைக்குழு நிராகரித்துள்ளது.

ஆனால், இத்தகைய குற்றங்கள் நிகழ்தமை தொடர்பில் நம்பத்தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன என்று ஐ.நா. பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. (ஐ.நா. நிபுணர் குழு தெரிவித்த விவரங்கள் கூட்டமைப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளன.)

இவ்வாறு சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல்கள், போர்க் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் என்பன திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலமாகவும் பெருமெடுப்பிலும் மேற்கொள்ளப்பட்டன எனக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை நிராகரித்ததன் மூலம், பாதிக்கப்பட்ட மக்களிடம் நல்லிணக்க ஆணைக்குழு தோல்வியடைந்துவிட்டது.

போரின் கடைசி நாள்களில் இடம்பெற்ற குற்றங்களை தவறாக அடையாளப்படுத்தி, அவற்றைத் தனிநபர்கள் சிலர் செய்தனர் என்று கூறி ஒதுக்கிவிட்டதன் மூலம், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள் நிகழ்வதற்குக் காரணமாக இருந்த இராணுவ மற்றும் அரசியல் தலைமைகள் எந்தப் பாதிப்பையும் எதிர்கொள்ளாத பாதுகாப்பை ஆணைக்குழு வழங்கி இருக்கிறது.

ஆணைக்குழுவின் இத்தகைய செயல்கள், இலங்கைக்குள் நிகழ்ந்த குற்றங்களுக்கு உள்ளூரில் ஒருபோதும் பொறுப்புக் கூறுதல் இடம்பெறாது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. சர்வதேச சமூகம் இதனைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, பொறுப்புக் கூறுதலுக்கான சர்வதேச பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதற்கான நகர்வுகளை சர்வதேச சமூகம் எடுக்க வேண்டும்.

ஆணைக்குழுவின் அறிக்கை, போரால் பாதிக்கப்பட்ட மக்களின் கௌரவத்தை கடுமையாகப் பாதித்துள்ளது. அத்துடன் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களையும் பாதித்துள்ளது. மேலும் போரால் பாதிக்கப்பட்ட மக்களையும் அது பகைத்துக் கொண்டுள்ளது.

உண்மை என்பது நீதிக்கான அத்திபாரக் கல். அதன் மூலம் மட்டுமே உண்மையான நல்லிணக்கத்தை அடைய முடியும். (உ)

## குற்றவாளிகளுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்நோக்குகின்றது என்று தெரியவருகின்றது. பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்களை கட்டுப்படுத்துவதற்காகவே தயாரிக்கப்பட்டது. பின்னர் இந்தச் சட்டம் தமிழருக்கு மாத்திரமன்றி சிங்களவர்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டது.

போர் முடிவடைந்த பின்பும் வடக்கு-கிழக்கில் இன்றும் பதற்றம் நிலவுகின்றது. குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன. பெரும் எண்ணிக்கையிலான படையினர் அங்கு இருந்த போதும் குற்றங்கள் தொடர்கின்றன.

படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் தமது வீடுகளுக்குக்கூட தமிழ் மக்களால் செல்ல முடியவில்லை. ஆனால் தெற்கில் உள்ள மக்கள் அங்கு செல்கின்றனர். பொன்னாலை, மாதகல், போன்ற இடங்களில் இவ்வாறான நிலைமை தொடர்கின்றது. சிங்கள ஊடகங்கள் மிரட்டப்படுகின்றன. தைரியம் மிக்க சிங்கள ஊடகவியலாளர்களால்கூட சுதந்திரமாக தமது பணியைச் செய்யமுடியவில்லை.

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டியில் தேர்தல் பரப்புரைக்குச் சென்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டவர்களைக் கைது செய்ய பொலிஸார் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்களைக் கைது செய்யமுடியுமா? என நான் சவால்விடுகின்றேன். ஆனால், நிச்சயமாக அவர்கள் கைது செய்யப்பட்டு நீதிவான் முன் நிறுத்தப்பட மாட்டார்கள்.

வடக்கு-கிழக்கு முழுவதும் இராணுவ மயமாக்கப்பட்டு, ஜனநாயகம் சவப் பெட்டியில் அடைக்கப்பட்டு விட்டது. சிவில் நிர்வாகம் முற்றாக சீரழிக்கப்பட்டு விட்டது. அமைதியான சூழல் அங்கு இல்லை.

நல்லிணக்கம் என்பது பாதிக்கப்பட்ட மக்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டியது. மக்கள் பிரதிநிதிகளின் உருவாக்கத்துக்குச் செவிசாய்க்க மறுக்கும் இந்த அரசு வெறுமனே கை குலுக்கி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

தமிழ்ச் சமூகத்துக்கு துரோகமிழைத்தவர்களை, குற்றமிழைத்தவர்களை, சட்டத்தால் தேடப்படுகின்றவர்களைத், தம்முடன் இணைத்து வைத்துக்கொண்டு தமிழருடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தியதாக சர்வதேசத்துக்கு அரசு கூறுவது மிகப் பிழையானது .பக்கத்து நாட்டுக்கே செல்ல முடியாதவர்களுடன் சேர்ந்துகொண்டு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. மக்களுடன் சேர்ந்துதான் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

குற்றவாளிகளை அமைச்சர்களாக்கி உண்மையான நல்லிணக்கத்தை ஒரு போதும் ஏற்படுத்த முடியாது. தமிழர்களின் மனங்களை வெல்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால் அரசு எதிர்த்திசையிலேயே பயணம் செல்கிறது. நேரான வழியில் சென்றால் மக்கள் அரசுக்கு மரியாதை தருவார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு செவிசாய் ப்பதன் மூலமே நாட்டை ஒற்று மைப் படுத்த முடியும்.

நாம் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுடன்இணைந்து வாழ விரும்புகிறோம் . அதற்காக இரண்டாம் தர குடி மக்களாக அல்ல, சம அந்தஸ்துள்ள மக்களாகவே வாழ விரும்புகிறோம்.

(ந-சி)

**வேலை வாய்ப்பு**

"VEDIO EDITING" செய்வதற்கு மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவம் உள்ளவர்கள் தேவை.

தொடர்பு: 0756411861

**வேலைக்கு ஆள்கள் தேவை**

இலங்கையின் பிரபல கம்பனி ஒன்றின் புதிய கிளைக்காக ஆண், பெண் இருபாலாரிடமும் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. O/L தகைமை போதுமானது. நீங்கள் நினைப்பதற்கு மேல் உழைக்க அரிய வாய்ப்பு. "தவறவிடாதீர்கள்" 'நம்பி வாருங்கள் வெற்றி நிச்சயம்'

தொடர்புகளுக்கு- S.மதன்- 0777289283

**புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி**

**தரம் 06 மாணவர் அனுமதி**


2011 இல் தரம் 06 இல் மாணவரை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் 23.12.2011 அன்று பாடசாலை அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பிக்கும் மாணவர்கள் மொழிதிறன், கணிதம், உள்ளடங்கிய மதிப்பீட்டு பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

பரீட்சைத்திகதி:-28.12.2011 புதன்கிழமை காலை 9.00 மணி

இடம்:-கல்லூரி மண்டபம்

## கண்ணீர் அஞ்சலி



**நல்லதம்பி பாலசுப்பிரமணியம்**

(பொது முகாமையாளர் - பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், பூநகரி ப.நோ.கூ. சங்க முன்னாள் பொது முகாமையாளர்)

எமது இல்லக் குழந்தைகளுடன் இணைந்து எமது குழந்தைகளின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவரும் எமது குழந்தைகளின் பராமரிப்புச் செலவுகளுக்காகத் தம்மாலான பங்களிப்பினை வழங்கி உதவியவருமாகிய அமரரான ந.பாலசுப்பிரமணியம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக்குழந்தைகள்,**

**மகாதேவா ஆச்சிரம சைவச்சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

(14041) (2-6-7)

PERSONAL CLASS & GROUP CLASSES

Grade 6 -G.C.E. (O/L) வரை

SEIENCE

★ தரம் 9 இல் இருந்து O/L வரை தொடர்ந்து கற்பவர்கள் 'A' சித்தி பெறுவது நிச்சயம்.

BY: N.MAHENTHIRAN
Temple Road,
Jaffna.
T.P.: 0776679544

## வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்திற்கான அவசரமான கலந்துரையாடல் (2012)

*கிளிநொச்சி, மன்னார், மடு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, துணுக்காய், முல்லைத்தீவு மற்றும் தீவகத்தில் இருந்து யாழ்மாவட்டத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்.*

*குறிப்பு: விண்ணப்பித்த இடமாற்ற படிவத்தின் பிரதியுடன் வருகை தரவும்.*

***இடம்: மருதனார் மடம் (மாகாண கல்வி திணைக்களம் முன்பாக)***

***காலம்: 22.12.2011 வியாழக்கிழமை காலை 9.00 மணி.***

*(11858) (6,7,10)* *ஏற்பாட்டாளர்கள்.*

## ஈழத்துச் சிதம்பரம் (காரைநகர் சிவன் கோயில்) சனீஸ்வர கிரகமாற்ற விசேட ஹோமம்



ஈழத்து சிதம்பரத்தில் நாளை (21.12.2011) புதன்கிழமை காலை 9 மணி முதல் சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனையும் சூரியன் முதலான நவக்கிரக தேவர்களுக்கும் விசே ஷமாக சனீஸ்வர பகவானுக்கும் விசேட ஹோமம் மற்றும் ஆராதனைகள் நடைபெற இருப்பதால் அடியார்கள் அன்றைய தினம் ஆலயத்துக்கு வருகை தந்து நவக்கிரக வழிபாடு ஆற்றி தோசங்களை நிவர்த்தி செய்து சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுடைய திருவருளைப் பெறுவீர்களாக!

ஈழத்துச் சிதம்பரம்,
காரைநகர்.

ஆதீன கர்த்தாக்கள்
ஆ.அம்பலவி முருகன்,
மு.சுந்தரலிங்கம்

## அந்தியேட்டி அழைப்பு



அன்புடையீர்!

கடந்த 22.11.2011 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் குரும்பசிட்டி

**அமரர்**

**ஆ.சி.நடராஜா**

(முன்னாள் அதிபர், வயாவிளான் ம.ம.வி, தினக்குரல் முன்னாள் பொது முகாமையாளர்)

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (21.12.2011) புதன்கிழமை உரும்பிராய் காளி கோயில் மண்டபத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ் வழங்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரதேச சபை ஒழுங்கை,
பலாலி வீதி, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

*மாணிக்கம் பாக்கியம்*

தொல்புரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் பாக்கியம் நேற்று (19.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சபாரத்தினம்(ஓய்வுபெற்ற காசாளர், சங்கானை ப.நோ.கூ.சங்கம்), காலஞ்சென்ற இராசரத்தினம் ஆகியோரின் தாயும், புவிராஜேஸ்வரியின் மாமியும், திருமதி வை.கவிதா(கனடா), திருமதி தெ.சர்மிளா(சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தொல்புரம் கிழக்கு,*
*சுழிபுரம்.*

தகவல்:
**சபாரத்தினம்**
**(மகன்).**

**அனைவரும் கற்கக்கூடிய கட்டணம் MCS இல்**

After A/L?

Engineering-USA
Rs.20,000 Scholorship

BIT University of Colombo
Only Rs 15,000
1 year course fee

CIMA 50% Off
Rs 14,400 Per Level
University & A/L Students

மாணவர்கள் BCS - UK, IELTS, TOEFL, CCNA, Java, ICDL, கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.

Qualified Lectures Panel, Passing Guarantee,12 Years Experience



Listed college-CIMA UK, Silver Award-Microsoft-USA, Best performance Award-University of colombo

MCS
Supported By
UNDP/JRRP

324, Palaly Road,
Parameswara Junction

Free5 Course fee*
Diploma Courses..
*MsOffice, AutoCAD, *Web Designing
*Hardware *Accounting *DTP *English

தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.

SMS Your name & Course to 772395895 & Get Scholorship




**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத்திருத்துதல், குளியலறைகட்டுதல், சுற்றுமதில் கட்டுதல், மாபிள்பதித்தல், தச்சுவேலைகள், Painting, Plumbing, Electrical மற்றும் பூந்தோட்டம் அமைத்தல் அனைத்தும் தரமாகவும், நவீன முறைகளிலும், குறைந்த செலவிலும் குறித்தகாலத்தில் செய்து கொடுக்கப்படும் அழையுங்கள் 0776679564 எங்கள் சேவை உங்கள் இல்லம் தேடிவரும்.

AXSHAYA CONSTRUCTION, JAFFNA

தை மாதம் வேலை தொடங்குவதற்கான ஒப்பந்தங்கள் இப்பொழுது செய்யப்படுகின்றன.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.